கோடைமலர்!
லயன் காமிக்ஸ்
ARCHIE
ரூ. 5/-
இலவச தாயவிளையாட்டைக்
கேட்டு வாங்குங்கள்!

ஜூனியர் லயன் காமிக்ஸ்

வெளியீடு!

ரூ. 1-20.

3

ஈகிள்மேன்


வசந்தகால பாரிஸ் நகர்! பூக்களின் நறுமணம் தவழும் காற்று...அதில் கலந்து ஒலிக்கும் வாகனங்களின் இரைச்சல் சப்தம். அதுமட்டுமல்ல - பொறுங்கள் ஒரு நிமிடம்...அந்தக் காற்றை ஆதாரமாக்கிக் கொள்ளப் போகும் வேறு ஏதோ ஒன்றும் அங்கே இருப்பதாகத் தோன்றுகிறதே...

அதோ பாருங்கள்! ஈபில் கோபுரத்தின் மேல் ஏதோ நிற்கிறது!
அது ஒரு. பறவை!
இல்லை! நிற்பது ஒரு கிறுக்கன்!

ஹா ஹா! இது
ஃகில் மேன்.

ஹேய்! இது என்ன? இதை நான் எதிர்பார்க்க வில்லையே!
கீழே விழுகிருண்டோய்!


8
அட, மனுஷன்தான்! கழுகைப் போல வேடமிட்டிருக்கிருன்!
நல்லவேளை...உடம்பில் அடி எதுவும் இல்லே! ஏதோ கிறுக்குத்தனமான ஐடியா தோன்றியிருக்கிறது போலும் ...இவன் ஒரு கார்டூனிஸ்ட்!

பைத்தியக்கார அமெரிக்கன்... பறக்க முயன்றிருக்கிறான் ...முடியவில்லை ...ஆற்றினுள் 'பொத்' தென விழுந்து விட்டான்..
இந்த இறக்கைகள் ஒழுங்காக செயல்பட்டிருக்க வேண்டுமே, ஹாரிஸ்! என்ன துரதிர்ஷ்டம் பார்!
மொத்தத்தில் நல்ல குளிப்பு!
இப்படிப்பட்ட ஒரு கூத்துக்குப் பிறகு நீ உயிருடன் இருப்பதே அதிர்ஷ்டம்தான்! சரி, உன் அறைக்குப் போவோம்.. ஈர உடுப்புகளை மாற்றிக் கொள்ளலாம்!
குளிபபு என்று சொன்னாய்? ஹா! ஹா!
சிறிது நேரத்தில்—
உனது காமிக்ஸ் கதைக்காக நீ உருவாக்கும் ஒவ்வொரு கிறுக்குத்தனமான கண்டு பிடிப்பையும் டெஸ்ட்செய்து பார்க்கவேண்டும் என்று என்ன அவசியம்? அது அபாயகரமானது என உனக்குத் தெரியவில்லையா?
நான் ஏமாற்றுவது கிடையாது ஹாரிஸ்! என் கண்டுபிடிப்புகள் உபயோகிக்கக்கூடியவை யாகவே இருக்கும்! அபாயத்தைப் பற்றிப் பேசும் நீ உனது உளவுத் தொழிலில் ஆபத்துக்களைச் சந்திப்பதில்லையா?

சி.ஐ.ஏ வில் பணிபுரியும் அனைவரும் உளவாளிகள் அல்ல! எங்களில் சிலர் ஆபீஸ் சிப்பந்திகள்தான். சரி நான் கிளம்புகிறேன். நீ கோணத்தனமான காரியங்கள் வேறெதிலும் இறங்கி விடாதே!
ஆகட்டும் மிஸ்டர் இரகசிய ஏஜெண்ட்! கவலைப்படாமல் போய்வாருங்கள்!
சி.ஐ.ஏ தலைமை அலுவலகம்: பாரிஸ்
ஹாரிஸ், அந்த முக்கியமான தஸ்தாவேஜுக்களை பரிமாற்றம் செய்துகொள்ள சாதாரண பிரஜைகளையே பயன்படுத்த வேண்டுமென்பதில் உறுதியாகயிருக்கிறது ரஷ்யா
ஆனால் அந்தப் பேப்பர்கள் இஸ்தான்புல் நகரில் நாளை மறுநாள் இருக்க வேண்டுமே! அதைக் கொண்டுசெல்ல வகையான ஆளை உடனடியாகப் பார்க்க முடியாதே, ஸார்...


முடியாது என்று கூறாதே, ஹாரிஸ்! அந்த வார்த்தையே எனக்குப் பிடிக்காத ஒன்று. அதை நான் பயன்படுத்துவதும் இல்லை! யாரையாவது ஒரு ஆளை உடனே பிடி!
ச-சரி ஸார்!
ஆளை வலை வீசியா பிடிக்க முடியும்!
இப்படிப்பட்ட வேலையை ஈகிள் மேனைத் தவிர வேறு யார் செய்வது?
இது ஒரு பெரிய வேலைதான், வில்கின்ஸ். ஆனால்...
ஓ.கே., நான் செய்து முடிக்கிறேன்...உனக்குத் தேவையான பைத்தியக்காரன் நான் தான்!

அமெரிக்க உளவுத் துறையினருக்காக ஒரு விசேட பணியை மேற்கொள்ளவிருந்தான் கார்டூனிஸ்ட் வில்கின்ஸன்...
ஓ.கே.ஹாரி! இந்தக் கடிதங்களை கொண்டு போய் இஸ்தான்புல் ஹோட்டலில் என்னை சந்திக்கும் இரஷ்ய தொடர்பாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும் நான் - அவ்வளவுதானே?
ஆமாம்! ஆனால் ஒரு விஷயம்...

போலியான இந்த ஒற்றன் வேஷம் வேண்டாம்! நீ ஒரு சாதாரண நபர் - தோற்றத்திலும், செயலிலும் அப்படியே காட்டிக் கொள்!
ஊய்!

அடுத்து—வில்கின்ஸனே சுமந்துகொண்டு இஸ்தான்புல் நோக்கி விரைந்தது எக்ஸ்பிரஸ் ஒன்று...
ISTANBUL HO
அடே...பையா! கிடை கப்போகும் அனுபவத் தை வைத்து நீ ஒரு காமிக்ஸ் புத்தகமே தயாரித்து விடலாம் என்று தோன்றுகிறது!


ப்பூ! 1940-ம் ஆண்டு வாக்கில் வெளிவந்த இரண்டாம் தர திரைப்படத்தில் வரும் காட்சியை நினைவுபடுத்துகிறது இந்த ஹோட்டல்!
Cafe ISTANBUL
TAXI

''கம்பீரமான தோற்றமும், புத்தி சாதுரியமும் நிறைந்த இரகசிய உளவாளி அமர்த்தலாக உள்ளே நுழைகிறார்- அனைவரது பார்வையும், அவரை நோக்கித் திரும்புகிறது...

''தலையை திருப்பாமல் விழிகளை மட்டும் மெள்ள உருட்டி ஹால் மொத்தத்தையும் நோட்டமிடும் அந்த ஸ்டைல்—தூள்!
''நிதானமாக எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியிலும் மிளரும் அந்த அபாரமான தன்னம்பிக்கை—அடேயப்பா!
உஷ்ஷ்! சட்டென எழுந்து அமருங்கள்!
ஊப்ப்!

இது என்ன விஷமம்?
உட்காருங்கள்... விரைந்து செயலாற்ற வேண்டும் நாம்!
நானும் நிறையப் பெண்களை பார்த்திருக் கிறேன்-ஆனாலும் உன்னைப் போல் இத்தனை துஷ்டத்தனம் கொண்டவளைப் பார்த் ததேயில்லை...
என்னிடம் கொடுக்க நீங்கள் சில முக்கிய மான கடிதங்களைக் கொண்டு வந்திருக் கிறீர்கள் என நினைக்கிறேன்—

உன்னை-ஏற்கனவே, எங்கேயோ சந்தித்திருப்பதாக ஞாபகம் எங்கே? சர்வதேச உளவாளிகள் கருத்தரங்கிலா - அல்லது—
ப்ளீஸ்! கடிதங்களை தருகிறீர்களா! தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் காரியம் கெட்டுவிட காரணமாகி விடலாம்!

சும்மா-விரட்டாதே-அழகியே! ஈகிள்-மேன் என் பெயர்-உளவு வேலை என் பொழுது போக்கு! ம்-என்னைப் பற்றி நீ அவசியம் தெரிந்திருக்க வேண்டுமே!
என் பெயர் நடாலியா! சீக்கிரம்! அதோ அங்கே கதவருகே நிற்கும் முரடர்களுக்கு என் மீது ஒரு கண்...
17

ஈகிள்மேன் அருகிருக்க அஞ்சலாமோ... பூங்கொடியே! பேதைமை... பேதமை! துணைக்கு நானிருக்கிறேன்... பயமேன் பாவாய்!
ஐயோ...! ஆனாலும் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறோம் நாம்!
ஆபத்து?... அப்படியொரு வார்த்தை என் அகராதியிலேயே கிடையாது! சோதனைகளை வெல்வது எனக்கொரு விளையாட்டு. ஹா. ஹா! பிரச்னைகளை கண்டால் எள்ளி நகையாடுவது என் சுபாவம்.. ஹா ஹ்ஹா! பிரளயங்களையும் சும்மா ஊதித்தள்ளி விடுவேனாக்கும்... ஹாஹ்ஹா!

ஒதுங்கிக் கொள்—
அல்லது செத்துப்
போவாய்!

ஹாய்! இதுஒன்றும்
சிரிக்கும்படியான
விஷயம் இல்லை
போலிருக்கிறதே!

ஹோட்டலை விட்டு வெளியேற முனைந்த வில்கின்ஸனையும் நடாலியாவையும் முரடர்கள் சூழ்ந்து கொண்டனர்...
இங்கே உட்கார்ந்து உங்களோடு ஜாலியாக அரட்டையடிக்க எங்களுக்கு விருப்பம்தான்... ஆனால் சிக்கிரமேதிரும்பிவந்து விடுவதாக வீட்டில் சொல்லிக்கெண்டு வந்திருக்கிறோம்...அதான்

போகாதே...!
இப்படி கட்டாயப் படுத்தினால் வேறென்ன செய்வது—சரி ..!

தூக்கு உன் கைகளை...!
இதோ!

மஷ்!
ஊய்...ய்ங்!

பத்து எண்ணுவதற்குள் எழுந்திராவிடில் ஆட்டவிதிகளின்படி நீ தோற்றுப் போனதாகும்...ம்— ஒன்...டூ...த்ரீ...
ஆவ்...விலகிக் கொள்ளுங்கள்
டமால்!

ஈகிள்மேன்..நீங்கள் லேசுப்பட்ட ஆளில் லைதான்!
ஹேய்!...அதைக்கண்டு பிடிக்க உனக்கு இத்தனை நேரமா?

நான் விடைபெறும்நேரம் வந்து விட்டது... சென்று வரட்டுமா—பை...பை!
“தன்னோடு இன்னும் கொஞ்ச நேரம் தங்கிவிட்டுப் போகுமாறு அவள் கெஞ் சுகிறாள்...ஆனால் நம்முடைய கதாநாயக ஆணழகன் இன்னுமொரு பூ மனத்தை நோகச் செய்து விட்டு இருளினூடே பாய்ந்து வெளிச் செல்கிறான்!”

பாரிஸ் திரும்பியபின்...
கவர்ச்சிக்கன்னி

விரைவிலேயே அமெரிக்க உளவுப்படையினரின் இன்னொரு நபர் வில்கின்ஸனைத் தேடி வந்தது.
ஊஹூம் ... என்னை லாகாது—ஆளை விடு ...ஹாரி!
அப்படியில்லை வில்கின்ஸன் ...நாட்டைத் துறந்து மேலை நாட்டுக்கு வரத்துடிக்கும் இரஷ்ய உளவாளி தன்னுடைய முயற்சியில் உதவி செய்ய குறிப்பாக 'ஈகிள் மேனை' அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறாள்!
...நீ அவளை ஏற்கனவே சந்தித்திருக்கிறாய்! முக்கியமான கடிதங்களை கொண்டு போய் இஸ்தான்புல் ஹோட்டலில் சந்தித்து ஒப்படைத்தாயே... நடாலியா-
ஹாய்...! நடாலியாவா! அதை முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும் நீங்கள்...!
...செய்வாயல்லவா?

ஓ...யெஸ்! நிச்சயமாக! ஆனால் ஒரு விஷயம்— பணியை வெற்றிகரமாக செய்து முடிக்க ஈகிள் மேனுக்கு சில விசேட சாதனங்கள் தேவை. அதை நீங்கள் செய்து தர வேண்டும்!
அது எங்கள் கடமையாயிற்றே...கண்ணு!

யூகோஸ்லாவியாவில் மலைப்பகுதியிலிருந்த ஒரு பாழடைந்த கோட்டை அருகே நடாலியாவை சந்திக்க ஏற்பாடு செய்து கொண்ட விஸ்கின்ஸன் வயதான கிழவர் போல் வேடம் புனைந்து கொண்டு அங்கு போய்ச் சேர்ந்தான்...
நடாலியா ..
பொஸ்... இதோ இங்கே...!

இந்த மாறுவேடம் எத்தனை கச்சிதமாய் எனக்கு பொருந்தியிருக்கிறது பார்த்தாயா..! இது நானே திட்டமிட்டதாக்கும்!

நில்!


இரு இரஷ்ய உளவாளிகள் மறைவிடத்திலிருந்து வெளி வந்தனர்...
நாட்டைத் துறந்து வெளியேற நீ தீர்மானித்துவிட்டதை நாங்கள் அறிவோம் நடாலியா! உன் திட்டம் ஈடேற அனுமதியோம்! உங்கள் கைவசமுள்ள ஆயுதங்களை மரியாதையாக வெளியே எடுத்து எங்களிடம் ஒப்படையுங்கள்!
ஆயுதமா...?இந்தப் பழைய கைத்தடியை தவிர எங்கள் வசம்வேறு எதுவுமே கிடையாது... அப்பனே!...

இதோ பார்-பழைய ...மிகப் பழைய கைத்தடி இது! ஹே...!
என்ன இது—
Ooo
டப்!
டப்!


ஆபத்து!
படுத்துக் கொண்டு விடு!


டமால்!

அதான்... அவர்களாகவே
மோதிக்கொண்டு கீழே
விழுந்து விட்டார்களே...
இனிமேலாவது அதை
நீங்கள் நிறுத்த
லாமில்லையா...
வ...வ... வந்து...
இதை...நிறு..
த்த.. முடியலே!

வெடிமருந்து
தீர்ந்து போன
பின் ஒருவழியாக
ஓய்ந்தது அந்தத்
துப்பாக்கி...
இதை என்னால் நிறுத்த
வே முடியாதது போல்
நடித்தேனே எப்படி
என் நடிப்பு!
ரொம்பப் பிரமாதம்...!
வாருங்கள்... இங்கி
ருந்து விரைந்தோடிப்
போகவேண்டும் நாம்!

சில நிமிட வேக ஓட்டத்திற்குப் பின்—
வேகத் திறன் கொண்டகாரில் தான் வந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்!
அதோ…நிற்கிறது பார்!

சர்வ தேச உல்லாசப்பயண டிராக்போல் தோற்றமளித்த பழைய வாகனத்தில் அவர்கள் பயணத்தை தொடங்கினர்...
நாம் தப்பியோட இந்த டிரக்கையா கொண்டு வந்தீர்கள்?
ஏன்—இதற்கென்ன...! நம்முடைய வேடத்திற்கும் இதன் தோற்றத்திற்கும் என்னமாய்பொருந்துகிறது பார்த்தாயா! அது சரி...நீ ஏன் நாட்டை விட்டு வெளியேற தீர்மானித்தாய் என்று சொல்!
நீண்ட காலமாகவே அப்படியொரு எண்ணம் என் மனத்தில் இருந்து வந்தது... என் மேலதிகாரி குரோகோவ் வாழ்க்கையே வெறுத்துப் போகுமளவுக்கு கடுத்தமான பணிகளை மேற்கொள்ளச் செய்து வந்தார். ஆசாமி எதற்கும் துணிந்தவர்... என்னை தடுத்து நிறுத்த என்ன வேண்டுமானாலும் செய்வார்!
ஈகிள்மேனின் பொறுப்பில் வந்துவிட்டாயல்லவா— விடு கவலையை...!

நீங்கள் பலே ஆள் தான்—சந்தேகமே யில்லை!
என் அம்மா கூட அப்படிதான் சொல்வாள்! வாரம் தவறாமல் அவளுக்கு கடிதம் எழுதி போட்டுவிடுவேனே! ஹே...பின்னால் யாரோ பயங்கர வேகத்தில் வருகிறார்கள்!
ரஷ்ய உளவுத்துறையை சேர்ந்த 'பறக்கும் படை' யினர் திறமையான கார் ஓட்டிகள் மட்டுமல்ல ஈவிரக்கமற்ற கொலையாளி களும் கூட!
ஹா..! கொலையாளிகளா!

ஆண்டவனே...! என் அம்மாவுக்கு இந்த வாரம் இன்னமும் நான் கடிதம் எழுதக்கூட இல்லையே...!


இந்த ஓட்டை டிரக்கில் அவர்களை மிஞ்சிய வேகத்தில் செல்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று ...நிச்சயமாக அகப்பட்டுக் கொண்டு விடத்தான் போகிறோம்!
அதற்குள் மன மொடிந்து போய் விட்டால் எப்படி ...என் இளவரசி!

துரத்திக் கொண்டு வந்த கார்கள் நெருங்கிவிட்டன...
இந்த பட்டணே இப்படி அழுத்துவோம்—அப்புறம் என்ன விந்தை நிகழ்கிறது என்று பார்ப்போம்...சம்மதம்தானே!
என்ன செய்யப்போகிறே மோ... தெரியவில்லே!


சட்டென்று தன் மேக்கப்பை கலைத்துக்கொண்டு டிரக்கிலிருந்து வெளியேறியது புத்தம் புது காரொன்று!



படகுத் துறையின் கோடியை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறோம்...இப்படி யே போனால் நாம் கடலுக்குள் போய் விழுந்து விடுவது உறுதி!


போய் விழுந்தால்தான்என்ன...? இதற்குப் போய் யாரேனும் அலட்டிக் கொள்வார்களா?


நடாலியா பயந்த மாதிரியே ஆயிற்று...
மூழ்கிப் போய் விடுவோம்!
மிதக்க தெரிந்திருந்தால் மூழ்கிப் போய் விட வேண்டிய அவசியமே இல்லை!


வில்கின்ஸன் இன்னொரு பட்டனை அழுத்த அதிவேக கார் சட்டென மிதவைப் படகாக செயல் மாற்றம் பெற்றது...
சர்ர்ர்.........






துரத்திக்கொண்டுவந்தகார்கள்
எக்கச்சக்கமாக மாட்டிக்
கொண்டன...

இந்த தடவை ஜெயித்து விட்டீர்கள்...
ஆனால் ஒரேயடியாக தப்பித்துக்கொண்டு
விட்டதாக மனப்பால் குடிக்காதீர்கள்!

அதன் பிறகு பயணம் உல்லாசமானதாக அமைந்தது..
நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?
...யாருக்குத் தெரியும்?


இன்ன இடம் என்று தெரியாத ஓர் இத்தாலிய கடற்கரையை வந்தடைந்த வில்கின்ஸனும் நடாலியாவும் கால்நடையாகபயணத்தைதொடர்ந்தார்கள்...
நாம் இப்போது எங்கே இருக்கிறோம்என்று நமக்கே தெரியாத போது இரஷ்ய உளவுப்படையினருக்கா தெரியப் போகிறது?

நமக்கு இனி எந்த ஆபத்தும் வருவதற்கில்லை!
குரோகோவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது—

நில்லுங்கள்! ஸான் ஸ்டெஃபானு போலீஸார் நாங்கள் -உங்களை கைதுசெய்கிறோம்!
என்னது?... ஏதோ தவறு நடந்து விட்டிருக்கிறது!
எங்களை கைது செய்யக் காரணம்?
கொலைக் குற்றம்!
ஏதுவும் விளங்கமால் குழம்பிப் போன அவர்களைக் கொண்டுபோய் அடைத்துப் போட்டார்கள்...
நாங்கள் அப்பாவிகள்- எந்தக் கொலையும் செய்யவில்லை!
நீங்கள் இன்றையசெய்தித் தாளை பார்க்கவில்லைஎன்று நினைக்கிறேன்- இப்போது பாருங்கள்...!

ஸான் ஸ்டெஃபானோ நியூஸ்
மாண்டி கார்லோவில் பயங்கரக் கொலை!
கொலையாளிகளுக்கு வலைவீச்சு!
எல்லாம் அந்த குள்ளநரி குரோகோவின்வேலைஇது. நான்சொன்னேனில்லையா —ஈவிரக்கமற்ற அரக்கன் அவன் என்று!
ஈகின் மேனை இப்படி கைதுசெய்து அடைத்துப் போட உங்களுக்கு அதிகாரமில்லை... உடனே என்னை இங்கிருந்து விடுவிக்கக் கோருகிறேன்!
அவரையும் விடுவிக்கிறோம்— உங்களை அழைத்துச் செல்ல மாண்டிகார்லோவிலிருந்து அதிகாரிகள் வந்து சேரும்வரை பொறு!

நிமிடங்கள் கரைந்து கொண்டிருந்தன...
கவலைப்படாதே நடாலியா! மாண்டி கார்லோ அதிகாரிகள் வந்ததும் இது அத்தனையும் குரோகோவின் எத்து வேலை என்று எடுத்துச் சொல்வோம்-
முட்டாள்தனமாக பேசாதீர்கள்-வருகிறவர்கள் குரோகோவின் ஆட்களாகத்தானிருக்கும் என்பதைக் கூட உங்களால் யூகிக்க முடியவில்லையா?
உஷ்ஷ்-ஆ-மாம்! தயவுசெய்து என்னை முட்டாள் என்று குறிப்பிடாதே நடாலியா-அது என் கதாநாயக அந்தஸ்துக்கு ஊறு விளைவிக்கும் -அது மட்டுமல்ல-சுலபமாக உணர்ச்சி வசப்படக்கூடிய ரோஷக்காரன் நான்!
ஸாரி...!

வாருங்கள் வெளியே! மொனுகோ
விலிருந்து இன்ஸ்பெக்டர்
வந்திருக்கிறார்...
உங்களையெல்லாம் என்ன
செய்கிறேன்...பாருங்கள்!
உங்களுடைய சட்ட விரோத நடவ
டிக்கைகள் பற்றி எங்கள் அரசாங்
கத்திடம் புகார் செய்யப் போகி
றேன்... அப்போது வருத்தப் படத்
தான் போகிறீர்கள்
ஆனாலும் ஒரு சாதாரண கார்ட்டூ
னிஸ்டுக்கு இத்தனை வாய்த்துடுக்கு
ஆகாதப்பா...!

அட...ஹாரி! நீ...நீ... எப்படி... இங்கே...
தம்பியை காப்பாற்றவேண்டியது அண்ணனின் கடமையல்லவா!
இன்று வரை எனக்கு உடன்பிறப்புக்கள் யாருமே கிடையாது என்று எண்ணிக்கொண்டிருந்தேன்
ஊஹூம்...சிரிக்காதே-நகரத்தை விட்டு நாம்வெளியேறும்வரைமுகத்தை சீரியஸாக வைத்துக்கொள்! இல்லை வேஷம் குட்டு வெளிப்பட்டுவிடப் போகிறது!

அவர்கள் தப்பிவிட்ட செய்தி குரோகோடைலை எட்டியது...
அவர்கள் அதிக தூரம் போய் விட முடியாது! ஆல்ப்ஸ் மலையை நோக்கித்தான் அவர்கள் இப்போது சென்று கொண்டிருப்பார்கள் என்பதையும் எந்த இடத்தில் எல்லையைக் கடக்க முயற்சிப்பார்கள் என்பதையும் என்னால் தீர்மானமாக சொல்ல முடியும்!
எப்படி ஸார்? அமெரிக்க உளவுத் துறையினரின் இரகசிய செய்தி எதையேனும் ஊடுருவ வாய்ப்புக் கிட்டியதா?
அப்படியில்லை... இது வரை நடந்த சம்பவங்கள் அனைத்தும் "லயன்" காமிக்ஸில் வருகின்றன... இனி நடக்கப் போவதும் இதில் உள்ளது போலவேதான் இருக்குமென்று ஒரு யூகம்...!
ஈகிள் மேன்


விடிகாலைப் பொழுதில் ஆல்ப்ஸ் மலைப் பகுதியிலிருந்தனர் வில்கின்ஸன் குழுவினர்...
மலைப்பகுதியை எவ்வாறு கடக்கப் போகிறோமோ...புரியவில்லை!
அதோ அங்கே இருக்கிறது உன் கேள்விக்கான விடை!


இதில் சவாரி செய்து ஆல்ப்ஸ் மலையைக் கடந்துவிட எண்ணுவது பைத்தியக் காரத்தனம்... வில்கின்ஸன்!
என்னை நம்பு... ஹாரி! நான்வடிவமைத்திருக்கும் இந்த ஜெட் அமைப்பு கண்ணிமைக்கும் நேரத்தில் நம்மை மறுமுனைக்கு கொண்டு சேர்க்கும் ஆற்றல் கொண்டது!

எல்லையைக் கடந்து ஸ்விட்ஸர்லாந்தில் பிரவேசிக்க முயற்சியை மேற்கொண்டிருந்த அந்தச் சிறு குழுவினரை தீயசக்திகள் தொலைவிலிருந்து கண்காணித்துக் கொண்டிருந்தன

ஆனால் உயரம் என்றாலே எனக்கு அச்சமாயிற்றே! தரையில் கட்டை விரலை ஊன்றி எம்பி நிற்கவே பயப்படுவேன் நான்!
என்னை இறுகப் பற்றியவாறு கண்களை மூடிக்கொண்டு விடு... மிச்சத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்— நடாலியா... நீ எங்களைப் பின் தொடர்ந்து வா!




56
ஹாய் நடாலியா...! மீண்டும் உன்னை சந்திக்க முடிந்தது எத்தனை ஆனந்தமாக இருக்கிறது தெரியுமா?

குரோகோவை அங்கே கொஞ்சமும் எதிர்பார்த்திராத நடாலியா திடுக்கிட்டுப் போனாள்...
சுலபமாக தப்பியோடி-விடலாம் என்று எண்ணிய உன் முட்டாள்தனத்தை என்னவென்பது...! அநியாயமாக உன் தோழர்கள் இருவர் கொல்லப் பட்டதுதான் நீ கண்ட பலன்!
உங்களை நான் வெறுக்கிறேன்!

அவர்கள் அதோ போகிறுர்கள் — உனக்கு பலமாக அடிவிழவில்லையே... ஹாரி!
எண்பதடி உயரத்திலிருந்து இந்த இறுகிய பனிக்குவியலின் மீது விழுந்த பின்னும் எலும்பு முறியாமலிருப்பது நம் அதிர்ஷ்டம்தான்!
மறுநாள்—
கிடைத்த செய்திகளின்படி குரோகோவ் நடாலியாவை மாண்டி கார்லோவிலுள்ள தன் விடுதிக்கு கொண்டு போயிருப்பதாக தெரிகிறது— அதுசரி...மும்முரமாக என்ன வரைந்து கொண்டிருக்கிறுய் நீ!
நடாலியாவை அங்கிருந்து மீட்கும் திட்டத்தின் வரைபடம்!

இந்த திட்டம் பலிக்குமென்று நினைக்கிறாயா?
நிச்சயமாக-- உறுதியாக...!
இதற்கிடையே, அங்கே... மாண்டிகார்லோவில்...
அழு... இஷ்டம் போல் இரவு முழுவதும்அழுதுகொள்...! ஆனால் நாளை எழும்போது முகம் பளிச்சென்று இருக்க வேண்டும் புரிகிறதா!
களின் அதிபதிகளுக்கு நாளை நான் கொடுக்கப்

மறுநாள்— விருந்து மண்டபத்தில்...
புன்னகை செய் நடாலியா— விருந்தின் போது யாரேனும் முகத்தை உம்மென்று வைத்துக் கொள்வார்களா என்ன?

ஷேக்குகள் போல் மாறுவேடம் புனைந்த வில்கின்ஸனும் ஹாரியும் உள்ளே வந்து சேர்ந்தனர்... நோக்கம்:- நடாலியாவை கடத்திச்செல்வது!
அதோ... அங்கே நின்று கொண்டிருக்கிறாள் நடாலியா!
எனக்கு ஐந்து நிமிட அவகாசம் கொடுத்து பின்னர் வெடியைத் தூண்டி வெடிக்கச் செய்!
அதற்குள் எப்படியேனும் நீ நடாலியாவை குரோகோவிடமிருந்து பிரித்து விடவேண்டும்!

நலமா...பெண்ணே! நான் ஷேக் ஹாஸன்!
?
?
புரியவில்லையா என்னை—'சகின் மேன்' என்று சொன்னால் புரிந்து கொள்வாயல்லவா!
யா...யா...யார்? விஸ்கின்ஸன்...!

மேன்மை தங்கிய ஷேக் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு இன்னும் கிட்டவில்லை எனக்கு...! அவருக்கு என்னை நீ அறிமுகம் செய்து வைப்பாயா நடாலியா?
நான்கு... மூன்று... இரண்டு ஒன்று!
டம் டமால்!

வெடிகுண்டு வெடித்ததும் அனைவரும் பீதிவயப்பட்டு ஓடலாயினர்...

அப்போது நிலவிய குழப்பத்தை பயன்படுத்திக்கொண்டு அங்கிருந்துநழுவினர் வில்கின்ஸனும் நடாலியாவும் —
நில்...!
இது மொட்டை மாடிக்கு இட்டுச்செல்லும் படிக்கட்டு தானே...
ஆமாம்— சந்தேகமில் லாமல்...!
அதோ போகிறார்கள்! விரட்டிப் பிடியுங்கள்...!
விருந்தில் நான் இத்தனை முக்கியத்துவம் பெறுவேன் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

மொட்டை மாடியில் நாம் அகப்பட்டுக் கொண்டு விடப் போகிறோம்...

...அங்கிருந்து கீழே செல்ல வேறு வழி கிடையாது!
நாம் தான் கீழே செல்லப் போவதில்லையே...! வழியைப் பற்றிய கவலை எதற்கு?


நாம் அப்படியே மேலே போகப் போகிறேம்... இங்கே பார்!

இது என்ன சிறுபிள்ளைத் தனமான விளையாட்டு— கொஞ்சம் கூட பொறுப் பில்லாமல்!
சே... இது வேடிக்கை விவகார மல்ல— ஓடிவந்து என்னோடு தொற்றிக் கொள்... சீக்கிரம்!


நன்ருக பிடித்துக் கொள்... நடாலியா!
இது சாத்தியம்... என்று நம்பு கிறீர்களா...!
றுதியாக...! என் நம்பிக்கை பொய்த்துப் போனல் இந்தக் கதையின் கடைசி வரி இது வாகத்தானிக்கும்!


குரோகோவும் அவரது சகாக்களும் மேலே ஏறிவந்து சேர்ந்த போது—
நி...நி...நிஜம் தானா?

திட்டப்படி ஹார் நம்மை சந்திக்க வேண்டிய இடத்துக்கு வந்து சேர முடிந்திருந்தால் நாம் பத்திரமாக ஊர் போய் சேருவது உறுதி யாகி விடும்!
என் நெடுநாளைய கனவும் நனவாகி விடும்!
அதோ-பயல் எப்படியோ தப்பி வந்து சேர்ந்து விட்டான்!




ஓடி வாருங்கள்—விநாடி தாமதித்தாலும் ஆபத் தாகிவிடும்!

ர்பாலின் திரையை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தனர்
ரும்...
அவர்களை ஏமாற்றி விட்டோம் என்று நம்புகிறேன்!
னால் அவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்தும் தொடர்ந்து
காணிக்கப்பட்டு வந்தது...
அத்தனை சுலபத்தில் தப்பியோடி விட முடியாது தம்பிகளா!


ஜெட் எஞ்சின் இயக்கம் பெற்றதும் வில்கின்ஸனின் மின்னல் வேக விரைவுப் படகு சீறிக்கொண்டு வெளியேறியது...
இனி-ஒரு பயல் நம்மை தொட முடியாது!


அப்படி சொல்வதற்கில்லை... அங்கே திருப்பிப் பாருங்கள்!
இரஷ்யர்களின் 'பறக் கும் படை' யினர்...!
சுடுங்கள்...!


டமால்!
டமல்!
வேகமாக...இன்னும் வேகமாக—ஹாரி...!
டமால்!


டமால்
டமால்!

எதிர்திசையிலிருந்து குரோகோவின் படகு விரைந்து வந்தது...
ரஸ் இன்னும் வந்து சேரக் காணோம்—நிலைமை மோசமாகி வருகிறது!

இன்னும் வேகமாக துரத்திச் சென்று அவர்கள் போய் பாறையில் மோதும்படி செய்!


அதோ...பாஸ் வந்து விட்டான்!




நிறுத்து...நிறுத்து முட்டாளே...!


திருப்பு படகை-இல்லையேல் போய் மோதிக்கொண்டு விடப் போகிறோம்...!
அதற்கு அவகாசமேயில்லை...! நான் என்ன செய்வது...?

குரோகோவின் படகு எதிரே வந்த 'பறக்கும் படையினரின் படகுகளோடு போய் மோதியது...
டமால்!

நம் தோழர்கள் ஹெலிகாப்டரில் ஏறிக்கொண்டு பத்திரமாக பயணத்தை தொடங்கிய போது தண்ணீருக்குள் விழுந்து கிடந்த குரோகோவ் ஆத்திரத்தோடு கத்தினன்...

இதன் பின்னர்—லாஸ் ஏஞ்சலிஸ் உல்லாசமானதொரு பொன்மாலைப் பொழுதில்...
ஹாய்—சிக்ஸர்!...பிரமாதம்!

சொன்னமாதிரியே பத்திரமாக உன்னை அமெரிக்காவுக்கு கொண்டு வந்து சேர்ந்து விட்டேன்... நடாலியா!
நீங்கள் சமர்த்துப் பேர்வழி 'ஈகிள் மேன்—இல்லை...வில்கின்ஸன் —ம் ...வந்து நான் உங்களை எப்படி அழைக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

சுருக்கமாக 'அன்பே' என்று கூப்பிடேன்!
சுருக்கமாக அன்பே'!... நீங்கள் கில்லாடிதான்— சந்தேகமேயில்லை!
முற்றும்.

இரும்புக்கை உளவாளி தோன்றும்
பனிமலையில் ஒரு திகில்!
இரண்டாம் உலக மகா யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் ஒரு நாள்—ஆர்டிக் நார்வேயில் எதற்கும் பயன்படாத பனிப்பிரதேசத்தின் மேலே பறந்து கொண்டிருந்த ஒரு விமானத்தில் திடீரென்று சிக்கல் முளைத்தது...
விமானத்தை உடனடியாக தரையிறக்க வேண்டிய நெருக்கடி—இறுகப்பற்றிக் கொள்ளுங்கள்!
84


சில வினடிகளுக்குப் பின் விமானம் ஆக்ரோஷமாக தரையைத் தொட்டது— விளைவு பயங்கரமாக இருந்தது...
ஆஆஆ...!

துணை—விமானி செத்துப் போனர்...ப்ளைட் லெப்டினன்ட் ஹவார்டு ரேடியோ மூலம் கண்ட்ரோலோடு தொடர்பு கொள்ள முயன்ருர்...
உங்களுடைய செய்தி தெளிவாக கேட்கவில்லை... ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்கிறதாக யூகிக்க முடிகிறது... இந்தச் செய்தியை உங்களால் கேட்கமுடியும் பட்சத்தில்...தாக்குப் பிடித்துக் கொண்டு காத்திருங்கள்—உதவி விரைவில் வந்து சேரும்...!

விமானத்திலிருந்த ஒரே பயணியான புரபஸர் ஹென்றிக்கு நல்லவேளையாக அடி எதும் படவில்லை...
நெருக்கடி நிலைமையில் பயன்படும் சிறிதளவு உணவுப் பொருள்தான் கைவசம் இருக்கிறது புரபஸர்... இதை வைத்துக்கொண்டு நாம் சமாளித்தாக வேண்டும்... உதவி வருகிறது என்கிறார்கள்—எப்போது வந்து சேரும் என்றுதான் புரியவில்லை!


மறுநாள்—பிரிட்டிஷ் உளவாளியான நார்மன் நார்வேயின் எல்லையோர கிராமம் ஒன்றை வந்தடைந்தார்...
புரபஸர் ஹென்றியை சுமந்து வந்த விமானம் இங்கிருந்து கிழக்கே—உத்தேசமாக இந்த இடத்தில்தான் கட்டாயமாக தரையிறங்கியிருக்கிறது ...நெருக்கடி நிலைமையில் பயன்படும் சிறிதளவு உணவுப் பொருள்தான் அவர்கள்வசம் இருக்கிறது..உயிரோடு அவர்களை மீட்க வேண்டுமானால் நாம் விரைந்து செயலாற்ற வேண்டியது அவசியம்!
மிக மிக மோசமான பகுதி அது..பனி படர்ந்த அந்தப் பிராந்தியத்திலும் ஜெர்மானிய படையின் கண்காணிப்புப் பிரிவு உஷார் நிலையில் இருந்து வருவதாக தகவல்—நாம் அங்கே செல்வது ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதாகும்!

நாஜி படை தளபதி ஒருவனால் சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டபோது வலது கை பயனற்றுப் போனதால் இரும்பு கையுறை அணிந்து கொண்டிருந்தான் நார்மன்...
ஆபத்தைப்பற்றி பேசிக் கொண் டிருக்க இது நேரமல்ல ஹாகன்... நான் அங்கே செல்வதென முடிவு செய்துவிட்டேன்... வழிகாட்ட ஒரு துணைவன் தேவை-அது...நீ தான்!
வழக்கம்போல் பணத்தை விட்டெறிந்ததும் மறு வார்த்தை பேசாமல் புறப்பட்டு விட்டான் இந்த எச்சில் பொறுக்கி நாய்...! நூதன போர்க்கருவிகளை வடிவமைப்பதில் நிபுணரான புரபஸர் இந்தக் கட்டத்தில் ஜெர்மானியர் வசம் அகப்பட்டுக் கொண்டு விடலாகாது!

மூன்று மணி நேரம் கழித்து...
யாரோ இரண்டு பேர் பனியில் சறுக்கிக் கொண்டு எங்கோ வேகமாக போய்க் கொண்டிருக்கிறார்கள் ...வா, போய் என்ன விவகாரம் என்று ஆராய்வோம்.

பனிச்சறுக்கு படைப் பிரிவினர் நம்மை நோக்கி வருகிறார்கள்...
டுமீல்!


ஆஆஆஹா ஹா—!
சுறிகிறுன் ......
பரவலாக விலகி
வளையுங்கள்!

ஆனால்—
விடாமல் துரத்துகிறார்கள்-அவர்களுடைய வேகத்துக்கு அதிக நேரம் ஈடு கொடுக்க முடியாது... வேறொரு உபாயத்தை கையாள வேண்டும்!

ஹே...நார்மன்— அங்கே கவனி .. நீ வீசியெறிந்த வெடி, பனிப்பாறைகளை பெயர்த்து சரிந்து வரச்செய்து விட்டதடா...முட்டாள்!
இப்படியொரு விளைவைத் தானே நான் எதிர்பார்த்தேன்— நீ மட்டும் அசுர வேகத்தில் சறுக்கி விலகி வந்துவிடு...!

பாக்கியில்லாமல் பனிச்சரிவில் மாட்டிக் கொண்டு அழிந்து போனார்கள்...
அஹ் ... நாம் தப்பித்துக்கொண்டு விட்டோம்!
ஊஊய் ...ய்ய்!

அட்டகாசம் பண்ணிவிட்டாய்... ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவர்களை தடுத்து நிறுத்தி விட்ட உன்னால் அதோ நம்மை குறிவைத்து வந்து கொண்டிருக்கும் உறை பனிப்புயலை தடுத்து நிறுத்த முடியுமோ?
எங்காவது பதுங்கிக் கொண்டு விடுவதை தவிர வேறு வழியில்லை...
இது மிக மோசமான பிரதேசம் என்று முன்பே எச்சரித்தேன்— நீ கேட்க வில்லை..சில வேளைகளில் உறைபனிப் புயல் தொடர்ந்து நாட்கணக்கில் நீடிப்பது உண்டு...
நாட்களா? சே...சே... புரபஸர் அதுவரை தாக்குப் பிடிக்க மாட்டார்!

அங்கே—கட்டாயமாக தரையிறக்கப்பட்ட விமானத்தின் உள்ளே...
ஒரு நபர் ஒரிரு தினங்களுக்கு உண்பதற்குரிய உணவுப் பொருள்தான் கைவசம் இருக்கிறது... புரபஸர்... இரண்டு பேர் அதை பங்கிட்டுக் கொண்டால்—உதவி வர தாமதமாகி விடும் பட்சத்தில், இருவருமே பட்டினியால் செத்துப்போகும் அபாயமுண்டு.
இதிலிருந்து ஒரு சீட்டை எடுங்கள் ...நம்மில் ஒருவர், அதிர்ஷ்டத்தை மட்டுமே நம்பி உடனே இங்கிருந்து புறப்பட்டுச் செல்வது தான் புத்திசாலித்தனம்!
ஒன்பது...! இப்போது நான் ஒரு சீட்டை எடுக்கிறேன்

குறைந்த மதிப்புள்ள சீட்டை எடுப்பவர்தான் கிளம்பிச் செல்ல வேண்டும் என்பது சம்பிரதாயம்... அதன்படி நான்தான் புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்றாகி விட்டது...!
சொல்வதைக்கேள்...ஹவார்டு! வீணாக உயிரை பணயம் வைக்காதே... தாமதமின்றி உதவி வந்து சேரும் வாய்ப்பு இருக்கிறதல்லவா— பொறு...!
மோசமான இந்த பிரதேசத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்ட நம்மை தேடிக் கண்டுபிடித்து வந்து சேருவது அத்தனை சீக்கிரத்தில் நடக்காது... புரபஸர்! ஒருவர் போய்விட்டால் கையிருப்பிலுள்ள சிறிதளவு உணவை பயன்படுத்தி ஒருவராவது உயிர்பிழைக்கலாம் அல்லவா...!
அப்படி உயிர் பிழைக்கும் நபர் நானாகவும் இருக்கலாம்தான்! ஆனால் என்னைவிட புரபஸரின் சேவை நாட்டுக்கு அவசியம் தேவை... ஆகவே, உயிர் பிழைக்கும் வாய்ப்பை அவருக்கே விட்டுக் கொடுத்துவிட்டுச் செல்கிறேன்!


கடுமையாக விசிக் கொண்டிருந்த
உறைபனிப்புயலினூடே புகுந்து
நடந்தார் ஹவார்டு!

அந்த வீர புருஷனின்
முடிவை உணர்த்தியது
துப்பாக்கி முழக்கம் ஒன்று!

விமானத்தினுள்ளே, தன்னந்தனியாக இருந்த புரபஸர் ஹென்றி கைவசமிருந்த கடைசி பழகேக்கையும் முதல் நாள் சாப்பிட்டு முடித்திருந்தார்...பசி வாட்டியது— தளர்ந்து போயிருந்த அவரது உடல் எலும்பையும் ஊடுருவும் கடும் பனியை தாங்கிக் கொள்ள முடியாமல் நடுங்கிக் கொண்டிருந்தது...
உதவி சீக்கிரமே வந்து சேர்ந்தாலன்றி பனி அவரை மாய்த்து விடும் அபாயமிருந்தது...

கட்டாயமாக தரையிறங்கிய விமானத்தை தேடி பயணம் மேற்கொண்டிருந்த நார்மனும், அவனது வழிகாட்டி ஹாகனும் ஏறத்தாழ வெற்றி இலக்கை நெருங்கி விட்டனர்...
அதோ... அங்கே ஏதோ பளபளக்கிறது...! விமானமாக இருக்கக் கூடும்! விரைந்து... வா!
தேடும் முயற்சியை எப்போது கைவிடுவது என்று எனக்குத் தெரியும்—அதுவரை வாயை மூடிக்கொண்டு..காரியத்தைக் கவனி!
ப்பூ...! விமானமல்ல — பனிப்பாறை! புரபஸர் இன்னமும் உயிரோடு இருக்கிறார் என்றே வைத்துக் கொண்டாலும், மோசமான இந்தப் பிராந்தியத்தில் அவருடைய இருப்பிடத்தைக் கண்டறிவது அத்தனை சுலபமல்ல நார்மன்!

யுத்த தளவாடங்களை வடிவமைப்பதில் நிபுணரான புரபஸர் ஹென்றியின் சேவை அத்யாவசியமாகவும் அவசரமாகவும் நாட்டுக்குத் தேவை—நாம் அவரை எப்படியும் கண்டுபிடித்து மீட்டாக வேண்டும்!
கடும் குளிரினால் புரபஸரின் கையும் காலும் மரத்துப் போய்விட்டன...இன்னும் அதிக நேரத்துக்கு தன்னால் தாக்குப் பிடித்துக் கொண்டிருக்க இயலாது என்று எண்ணி சோர்ந்து போனார் புரபஸர்...
தன் ஸ்வெட்டரிலிருந்து கடித்து கிழித்தெடுத்த துண்டத்தில் தீயை பற்ற வைத்து கொஞ்சம் கதகதப்பும் பெற எண்ணினர்-
98

அப்போது, அங்கே—நார்மன் வேறொரு உண்மையை கண்டுபிடித்தான்...
பனிச்சறுக்கு தடங்கள்!—சந்தேகமில்லாமல் நாம் ஏற்படுத்திய தடங்கள் தான்...இவை!
அடேய்... பொறுக்கி நாயே! வந்த பாதையிலேயே திரும்பவும் சுற்றி வளைத்து இழுத்து வந்து ஒரு நாளை முழுதாக வீணடித்து விட்டாயே... உன்னை நான் ஏன் கொல்லக் கூடாது என்பதற்கு உருப்படியாக ஒரு முகாந்திரம் சொல்-உடனே..!
ஹே..அது..வந்து-தவறு நேர்ந்து விட்டது நார்மன்! எல்லா இடமும் ஒரே மாதிரியாக தோன்றுவதால் சுலபமாக பாதை தவறிவிடுவது இங்கே சகஜம்!

அதோ... அங்கே— புகை...!
... இப்போதைக்கு தப்பித்துக் கொண்டு விட்டாய் — ஹூம்!
ஆழமான நீண்ட பனிப் பிளவின் குறுக்கே கடந்து செல்ல இந்த பனிப் பாலத்தை விட்டால் கண் எட்டும் தூரத்திற்குள் வேறு வசதியே கிடையாது நார்மன்... முதலில் நான் கடந்து செல்கிறேன்.
ஆமாம்—அது விமானம்தான்!


ஹாகன் மறுபக்கம் போய்ச் சேர்ந்ததும் நார்மன் பாலத்தில் கால் வைத்தான். அப்போது—
உன்னுடைய பயணம்- வாழ்க்கை பயணமும் தான்— இத்தோடு, இங்கே, இப்போதே முடியப் போகிறது நார்மன்...!
ஆக நீ ஒரு நாஜி ஒற்றன்— அப்படித்தானே ஹாகன்? வந்த பாதையிலேயே திரும்பவும் சுற்றி வரச் செய்த போதே நான் இந்த உண்மையை புரிந்து கொண்டிருக்க வேண்டும் — தவறிவிட்டேன்!

புரபஸரின் இருப்பிடம் தெரிய வராமலே போயிருந்தால் இப்படியொரு துரதிர்ஷ்டம் உனக்கு ஏற்பட்டிராது...!
பனிப் பாலத்தை தகர்க்கிறான்...!

ஆ...வ்!

விமானத்தை நோக்கி நடந்தான் ஹாகன்.
ஆண்டவனுக்கு நன்றி — உதவி வந்துவிட்டது...!
ஆகா நெருப்பின் கதகதப்பு எத்தனை இதமாக இருக்கிறது... நன்றி புரபஸர்...!

இந்த நெருப்பை பயன்படுத்தி இப்போது நான் எனக்கு உணவு தயாரிக்கப் போகிறேன்... நீ பசியால் துடிதுடித்து உயிர் விடுவதை வேடிக்கை பார்த்து விட்டுத்தான் இங்கிருந்து போவேன்!

பனிப் பிளவினுள்ளே விழுந்து மயங்கிக் கிடந்த நார்மன் சில நிமிடங்களுக்குப் பின் சுயவுணர்வு வரப்பெற்று எழுந்தான்.
நல்ல வேளை அடி ஏதும் படவில்லை...ஆனால் இந்த பனிச் சுவரில் எப்படி மேலே ஏறுவது?

இரும்புக்கையின் விரல்கள் பனிப்பாறையில் பலமாக துளைகளை ஏற்படுத்தி பற்றிக் கொள்ள வகை செய்தன...
என் இரும்புக்கை கூடுதல் ஆற்றல் கொண்டது என்பதால் நான் மேலே ஏறும் போது என் பளுவை தாங்கிக் கொள்கிறது...! தப்பி வெளியேறும் வாய்ப்பை இன்னும் நான் இழந்து விடவில்லை!
இது பன்றி இறைச்சி... புரபஸர்! நன்ருக நுகர்ந்து மணத்தை அனுபவித்துக் கொள்ளுங்கள் — ஆனல் இதை ருசி பார்க்கப் போவது...நான் மட்டுமே!
ஏன்...ஏன் இந்தக் கொடுமை?
விரைவிலேயே செத்துப் போக வேண்டும் என்று உன் தலையில் எழுதியிருக்கிறது—நான் ஏன் என் உணவை வீணடிக்க வேண்டும்?

உடனடி மரணம உனக்குத் தான் விதிக்கப்பட்டிருக்கிறது ஹொகன்... வெளியே வந்து பார்—புரியும்!
யாரது — நார்மனா? இன்னுமும் உயிரோடு தானிருக்கிறனா?... அதெப்படி?
பாவாயில்லே — அவன் விழுந்த போது அவனுடைய துப்பாக்கி தொலேவில் அதள பாதாளத்தினுள் போய் விழுந்து விட்டது. அவனிடம் இப்போது ஆயுதம் ஏதும் கிடையாது..
வா...நார்மன்—இப்படி முன்னல் வா...உயிர் பிழைக்க உனக்கு இனியொரு வாய்ப்பே கிடையாது...


தோற்றுத்தான் போயிருப்பேன்— நீ மட்டும் உன் பனிச்சறுக்கு கட்டைகளை இப்படி அலட்சியமாக இங்கே விட்டுச் சென்றிராவிடில்...!

இந்த கட்டைகள் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படும் என்று நீ அறிந்திருக்கத் தவறி விட்டாய்... அந்த அறியாமைக்கு நீ தரும் விலே—உன் உயிர்!
அ...ஹ்ற!
உதவி விமானத்தை அனுப்பக் கோரி, இடத்தையும் குறிப்பிட்டு ரேடியோ மூலம் செய்தியனுப்பினுன் நார்மன்...
சரியான தருணத்தில் வந்து காப்பாற்றி விட்டாய் இளேஞனே!
சற்று நான் தாமதிருந்தாலும் ஈடு செய்ய முடியாத பேரிழப்புக்கு உள்ளாகியிருக்கும் நம் நாடு...!
முற்றும்.

மாறுவேஷப் போட்டிக்குப் போகிறாயா கிச்சு?
ஹும்-மலையேறப் போகிறேன் நான்!
மலையேறவா?
ஆமாம்! சிகரத்தின் உச்சியில் தன்னந் தனியாய் நின்று கொண்டு ஹாய்யாக இயற்கையை ரசிப்பதில் உள்ள சுகமே தனி!
இந்த மலையை முதலில் வெற்றி கொள்ளப் போகி-றேன்!
ஜாக்-கிரதை விச்சு!
ஹா-இதெல் லாம் ஒரு மலையா? சுண்டைக் காய்!
மலையின் மறுபக்கம் லேசான பாதை ஒன்று தெரிகிறது கிச்சு!
விச்சு & கிச்சு
ஹேய்! இதெல்லாம் எங்கிருந்து வந்தது?
நீ வேண்டுமானால் அந்த வழியாய்ப் போ! நான் கடினமான பாதையில் தான் வருவேன்!

மலை உச்சி-யின் மேல் பெருமை யாய் நான் மட்டும் நிற்கும் கணத்தில் இந்த சிறு தொல்லை களெல்லாம் மறந்துவிடும்!
அப்பால் போடா புடலங்காய் மூக்கா! இயற்கைக் காட்சிகளை மறைத்துத் தொலைக்கிறாய்!
MOUNTAIN TOP VIEW POINT
LIFT
இந்த லிஃப்ட் மூலம் எல்லாமே மேலே வருகிறார்கள் கிச்சு! நல்ல இயற்கைக் காட்சிகளைக் காண நான் யோசனை சொல்கிறேன்!
இயற்கைக் காட்சி படங்கள்
LIFT
பேசாமல் இங்கே ஃபோட்டோக்களை வாங்கிக் கொள்!
LOCAL VIEWS
↑ MOUNTAIN TOF
முற்றும்.

110
கானகமோசடி!
மைக் நோலன் என்ற இருப்புப் பாதை காண்ட்ராக்டர் உதவி கோரிவிடுத்த அவசர அழைப்பிற்கிணங்க தாம்சனும் விக்டரும் தங்களுடைய வியத்தகு செயல்திறன் கொண்ட இரும்பு மனிதன் ஆர்ச்சியுடன் மெக்ஸிகோ வந்திருந்தனர்...
என்ன விவகாரம்? யாருமே வேலையில் அக்கறை காட்டுவதாகக் காணோம்?
உங்களை பார்த்த பின்னர்தான் எனக்கு தெம்பு வந்திருக்கிறது... இந்த இரயில் பாதையை நான் குறிப்பிட்ட தேதிக்குள் முடித்தாக வேண்டும். இல்லையேல் என் முதலீட்டுத் தொகையை நான் இழந்து விட நேரும்...


அங்கே வேலை செய்ய வந்திருந்த மெக்ஸிகோ தொழிலாளிகளின் முகத்தில் கலவரம் தென்பட்டது.
...பிரச்னையே அது தான்! அவர்கள் இனியும் என் கீழ் வேலை செய்ய இஷ்டப் படவில்லை. சூரியமலை பற்றிய பைத்தி யக்காரத்தனமான மூட நம்பிக்கை ஒன்றினால் வந்த வினை.
சற்று விபரமாகக் கூறுங்கள்!


அதோ தெரிகிறதே...அதுதான் சூரியமலை... முன்னர் அஸ்டெக் தேவதைக்குரிய புனித மலையாக அது இருந்து வந்ததாகவும், அதை மாசுபடுத்துபவர்கள் சாபத்துக்குள்ளா வார்கள் என்றும் நம்பிக்கை நிலவுகிறது இங்கே.
அதாவது, மலையின் குறுக்கே குகைப் பாதை அமைக்க முயற்சிப்பது அவர்கள் நோக்கில் மலையை மாசுபடுத்தும் காரியம்— அப்படித் தானே! வாருங்கள் அருகே சென்று ஆராய லாம்...! இம்மாதிரி கட்டுக்கதைகளில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது!


இருண்டு கிடந்த அந்த மலையின் அடிவாரத்தை அவர்கள் சென்றடைந்தபோது...
அங்கே... அதோ— பாருங்கள்! ஹேற... ஆர்ச்சி— நீ என்ன வாயைத் திறக்கவே இல்லை இதுவரை? இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்... சொல்!
ஒளிமயமான புகை மூட்டத்தைக் காண்கிறது ஆர்ச்சி...ஆனால் அது என்னவென்று ஆர்ச்சிக்குப் புரியவில்லை. இயந்திர மனிதனுக்கு எல்லாமே தெரிந்திருக்கும் என்பதில்லை!


மிரட்சியோடு அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கையில் அந்த புகை மூட்டம் வர வர பிரகாசமடைந்து வந்தது...
அந்த ஒளிக் கோளம் தீப்பந்தம் போல் ஜொலிக்கிறது
ஹாய்... அதன் மத்தியில் ஓர் மனித உருவம்! இன்னமும் ஆர்ச்சிக்கு ஏதும் விளங்கவில்லை!

அதைத் தொடந்து கபடமான அந்த உருவத்திட மிருந்து வெளிப்பட்ட இடிமுழக்கம் போன்ற குரல் அந்தக் கானகம் எங்கும் எதிரொலித்தது.
இந்த மலையின் புனிதத்தைக் கெடுக்க வந்திருக்கும் மூடர்களே... பண்டைய அரச வம்சாவளியைச் சேர்ந்தவனும், இந்த நெருப்புத் தேவதையின் அர்ச்சகனுமான டால்காடெக்ஸ் எச்சரிக்கிறேன் —உடனே உங்கள் முயற்சியைக் கைவிட்டு ஓடிப் போங்கள் இல்லையேல் மரணம் நிச்சயம்!
இதைக் கேட்ட மெக்ஸிகோ தொழிலாளிகள் கலவரமடைந்து தலைதெறிக்க ஓடலாயினர்...
மீண்டும் எச்சரிக்கிறேன்... போய் விடுங்கள் இங்கிருந்து—இல்லையேல் மரணம் உறுதி!
அந்த ஒளிக் கோளம் வரவர மங்கிக்கொண்டு வருகிறது.
இனியும் இங்கே இருந்தால்- தொலைந்தோம்!
வாருங்கள்... ஓடிப் போய் வி .லாம்

ஒளிக்கோளம் முழுவதுமாக மறைந்து விட்டது, ஆர்ச்சி இப்போழுது தன் கைவரிசையை காட்டப் போகிறது
போச்சு... நான் பயந்த விபரீதம் நிகழ்ந்துவிட்டது, இனி அவர்களை திரும்ப அழைத்து வந்து இங்கே வேலே செய்ய வைக்க முடியாது!— மோசம் போனேன்

நேரத்தை வீணடிக்காமல் உடனே காரியத்தில் இறங்கியது ஆர்ச்சி...
இயந்திர மனிதனாக இருப்பதில் ஒரு சௌகரியம் என்னவென்றால் எதைக் கண்டும் பீதியடையத் தேவையில்லை!
அத்தோடு, இயந்திர மனிதனுக்கு களைப்பு ஏற்படுவதுமில்லை. நீ எனக்கு உதவி செய்யத் தீர்மானித்து விட்ட பின் அந்தக் கூலிப் பட்டாளத்துக்கு ஏது அவசியம்?
அடுத்த இரண்டு மணி நேரத்தில் கணிசமான அளவுக்கு மலையைக் குடைந்து விட்டது ஆர்ச்சி...
குடையும் பணியை முழுவதுமாக ஆர்ச்சி எடுத்துக் கொண்டு விட்டது... அது இடித்துப் போடும் பாறைகளை அப்புறப் படுத்தும் வேலையை நாம் மேற்கொள்வோம்!
ஆர்ச்சியின் வேகத்துக்கு நம்மால் ஈடு கொடுக்க முடியுமா என்பது சந்தேகம்தான்;


மைக்கும், தோழர்களிருவரும் திணறினர்...
நீங்கள் இன்னும் வேகமாக வேலை செய்ய வேண்டும், இல்லையேல் பாறைகளுக்கிடையே ஆர்ச்சி புதையுண்டு போய் விடும்...!
உனக்கென்ன... லேசாகச் சொல்லி விடுவாய்! பார்த்தாயல்லவா— நாங்கள் படும் பாட்டை...! அம்மாடி என்னமாக கனக்கிறது!

ஆர்ச்சி ஒத்தாசைக்கு வந்தது .. விரைவிலேயே பாறைகள் ஏற்றப்பட்டு விட்டன...
இயந்திர மனிதனாக இருப்பதில் ஒரு தொல்லை...! எல்லாவற்றையும் அவனே செய்தாக வேண்டும்!
அதெல்லாம் சரிதான்! இப்படி ஒட்டு மொத்தமாக தூக்கி அடுக்கி விட்டாயே... எப்படி தள்ளிக் கொண்டு போவதாம்?
சற்று பின் வாங்கிச் சென்று பின்னர் விரைந்து ஓடி வந்த ஆர்ச்சி ஓங்கி ஒரு உதைவிட்டது—
டிராலியை தள்ளிவிட்டாயிற்று... அதைக் காலி செய்து திரும்ப கொண்டு வந்து சேர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு!
சபாஷ்டா... கண்ணு!
தற்பெருமை பேசும் இரும்பு மனிதனின் அட்டகாசப் பிதற்றல்களைத்தான் என்னால் ஒரு போதும் சகித்துக்கொள்ள முடிவதில்லை!

வெளியே பல பலவென்று விடிந்து கொண்டு வந்தது... அப்போது திடீரென்று—
அற்புதம் நிகழ்த்தி விட்டது ஆர்ச்சி...இந்தப் பாறையின் பின்னால் வேறு பாறைகளே இல்லை!
அதெப்படி...? அதற்குள்ளாக நாம் மலையின் மறுபுறம் வந்து சேர்ந்திருக்க வாய்ப்பே கிடையாது!
ஆனால் மறுகணம்... ஜில் லென்று காற்று வந்து அவர்களைத் தொட்ட தோடு, பல்லாயிரக்கான பறவைகள் சிறகடிக்கும ஒலியும் கேட்டது...
வெளவால்கள்...! ராட்சஸ வெளவால்கள் ஆயிரக் கணக்கில்...!ஆ...வ்...நம்மை நோக்கி வருகின்றன:
ஆர்ச்சி... ஏதாவது செய்து சமாளி!

தன் மார்புப் பகுதியிலிருந்த திறப்பின் வழியாக காற்றைப் பீச்சியடித்தது ஆர்ச்சி...
வௌவால்கள் கண் காணாத தூரத்துக்கு ஓடிப் போய்விடும்!
ஆர்ச்சியின் சாகஸத்துக்கு எல்லையே கிடையாது!
வேறொரு உண்மை தெரிய வந்தது அப்போது!
அதோ...சூரிய வெளிச்சம்! மலையின் மறுபுறத்துக்கு வந்து விட்டோம் என்று ஆர்ச்சி சொன்னது சரியாகி விட்டது!
அப்படித்தான் தோன்றுகிறது... யூ ஆர் கரெக்ட்!


மைக்! நாம் இன்னும் மலையின் மத்தியில்தான் இருக்கிறோம்... அதாவது, சூரிய மலையின் உள்பக்கம் கூடாக இருக்கிறது!
ஆமாம் தாம்சன்... அதுதான் நிஜம்!... மேலே உள்ள திறப்பின் வழியாக சூரியவெளிச்சம் உள்ளே வருகிறது...பார்!

ஆனால்...இந்த உட்பகுதியில் யாரும் வசிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை!
ஊஹூம்... அங்கே பார்த்து விட்டுச் சொல்!

புதர் மண்டிக்கிடந்த பகுதியிலிருந்து வேல், ஈட்டி போன்ற ஆயுதங்களை கையிலேந்திக் கொண்டு ஓடி வந்தது ஒரு காட்டுவாசிகள் கூட்டம்...
அவர்கள் நமக்கு வரவேற்புக் கொடுக்க வரவில்லை என்பது உறுதி!
அவர்களை முறியடிப்பது ஒன்றும் பெரிய பிரச்னையில்லை... அவர்கள் தாக்குவதற்காக வரவில்லை-- வீணை கலவரப்பட்டுப் போயிருக்கிறார்கள் என்று நம்புகிறது ஆர்ச்சி... எனவே, அவர்களைத் துன்புறுத்த விரும்பவில்லை!
சட்டென்று தன் ஜெட் அமைப்பை இயக்கியது ஆர்ச்சி...
எதையும் அமைதியான முறையில் பேசித்தீர்த்துக் கொள்ள விரும்புகிறது... ஆர்ச்சி! பலாத்காரத்தை கைவிடுமாறு கேட்டுக் கொள்கிறது...!
ஆஹ்...!
ஈஈஈ...!

பாறையின் மேலே ஏறிக்கொண்டு விட்டான்... என்ன செய்வதாக உத்தேசமோ?
அவர்களை அச்சுறுத்தும் நோக்கமாக இருக்கக் கூடும்!
அடுத்து—
ஓடிப்போய் விடுங்கள்...ம்— ஓடுங்கள்!
காட்டுவாசிகளை மிரட்டி விரட்டுகிறான்... மோதலை ஆர்ச்சி விரும்பவில்லை!
பாறையை எறிந்து விடுவேன் என்று பாவ்லா காட்டுகிறானேயொழிய அப்படியெல்லாம் எறியக்கூடியவனல்ல! எப்படியோ... நினைத்ததை சாதித்துவிட்டான்— காட்டுவாசிகள் ஓடுகிறார்கள்!

ஆர்ச்சி கீழே இறங்கி வந்து தோழர்களோடு சேர்ந்து கொண்டது... காட்டுவாசிகள் ஓடிய பாதைவழியே அனைவரும் நடக்கத் தொடங்கினர்கள்...
இங்கே மலையின் உட் பகுதியில் அனைத்துமே புதிராக உள்ளன
அங்கே உயரத்தில் நின்று கொண்டிருந்த போது மேலும் சில விந்தைகளை ஆர்ச்சி பார்த்தது..வாருங்கள் அருகே போய் பார்க்கலாம்
அவர்களில் யாருமே கனவிலும் கண்டிராத விந்தைக் காட்சியை அங்கே கண்டு பிரமித்துப் போயினர்...
ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அஸ்டெக் நகரம் போல் அச்சாக அப்படியே இருக்கிறது!
ஜொலிக்கும் அந்தக் கோவில் கண்ணைப் பறிக்கிறது! அத்தனையும் தங்கம்! அவர்கள் நம்மை விரட்டியடிக்க முனைந்தது ஏனென்று இப்போது தெளிவாக விளங்குகிறது.



இன்னும் சற்று நெருங்கிச் சென்றபோது கசையடி பட்ட தழும்புகளோடு சேர்ந்து தளர்ந்து சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த சில அடிமைகள் கண்ணில் பட்டனர்...
ஆர்ச்சி உங்களை விடுவிக்கிறது!
அங்கே தெரிவது தங்கச் சுரங்கமாக இருக்கக்கூடும். இந்த அடிமைகள் அங்கே வேலை செய்பவர்கள் போலும்!
திடீரென்று அங்கே இடிமுழக்கம் போல் ஒரு குரல் ஒலிக்கத் தொடங்கியது...
நெருப்புததேவதையின் அர்ச்சகன் டால்காடெக்ஸ் கடைசி முறையாக எச்சரிக்கிறேன்...! ஓடிப்போய் விடுங்கள் ... அல்லது இந்த தீப்பிளம்பு ஈட்டியை எறிந்து உங்கள் அனைவரையும் நொடியில் சாம்பலாக்கி விடுவேன்!


தீப்பந்தம் போல எரிந்துகொண்டு அவர்களை நோக்கி வந்த
அந்த ஈட்டி அப்படியே மறைந்து போய் விட்டது...
...வந்த வழியே ஓடிப் போய் விடுங்கள்!... திரும்பி வரும் எண்ணமே இருக்கக் கூடாது!
தெருவோரத்து வித்தைக்காரன் செய்து காட்டுவான் இந்த தந்திர வேலையை! அந்த ஈட்டி, சட்டென்று தீப்பிடித்துக் கொள்ளும் ஒரு வகை கந்தக பாறையினால் ஆனதாக இருக்க வேண்டும்!
இதை விட பிரமாதமான தந்திர வேலைகளை ஆர்ச்சி செய்து காட்ட முடியும்!


விக்டரின் கூற்றை ஆமோதிப்பது போல் தலையை அசைத்த ஆர்ச்சி சற்று முன்னால் வந்தது...
இப்போதே செய்து காட்டி விட்டால் போயிற்று!
இரும்பு மனிதன் ஆர்ச்சி சவால் விடுகிறது! ஆர்ச்சியின் கால் தூசுக்கு சமானமாக மாட்டாய் நீ!


கண்களில் குரூரம் கொப்பளிக்க கீழே இறங்கி வந்தான் டால்காடெக்ஸ்!
உன் சவாலை ஏற்கிறேனடா ...அற்ப நாயே! இதோ... சூரிய தேவதையின் அருளோடு அந்தப் பாறை தீப்பற்றிக் கொள்ளச் செய்கிறேன் பார்!
ஆஆ..ஹா! டால்காடெக்ஸின் மகத்துவத்துக்கு ஈடு இணையே கிடையாது!

ஆர்ச்சி அயர்ந்து போய்விடவில்லை—
பாறையின் அடியே பூமியிலிருந்து இயற்கை எரிவாயு கசிகிறது என்பது ஆர்ச்சியின் யூகம்... தீப்பொறிகளை வீசியெறிந்து எரிவாயுவை தீப்பற்றிக் கொள்ளச் செய்ய அதிக சாமர்த்தியம் தேவையில்லை!
பின்னர் தலையை நிமிர்த்தி கலவரமடைந்து நின்ற காட்டுவாசிகளை ஒரு நோட்டமிட்டது...
சூரிய தேவதையின் அருளோடு இதோ நான் வரவழைக்கிறேன்- ஒளி வெள்ளத்தை...!
தலை-விளக்கை எரியச் செய்கிறது ஆர்ச்சி! விஷயம் புரியாமல் டால்கசடெக்ஸ் திணறுகிறான்...!
ஊஊப்..ப்! இப்படியொரு சாகஸச் செயலை செய்து காட்ட டால்காடெக்ஸால் நிச்சயம் முடியாதுதான்!

பின்னர் தலை— விளக்கை அணைத்துக் கொண்டுவிட்ட ஆர்ச்சி அருகே ஈட்டியை பிடித்துக் கொண்டு நின்ற காட்டுவாசியை பார்த்து பேசியது...
என் மீதா? ஹே— ஆர்ச்சி... விளையாட இதுவா நேரம்?
ஆர்ச்சியின் ஆணைக்கு எல்லாமே கட்டுபட்டு நடக்கும்! இதோ நிற்கும் ஆர்ச்சியின் தோழனைக் குறி வைத்து நீ ஈட்டியை எறி—
விக்டரைக் குறி வைத்து ஈட்டி வேகமாகப் பறந்து வந்தபோது—
இதோ... வருகிறது!
ஆர்ச்சி ஆணையிடுகிறது- ஏ... ஈட்டியே... இங்கே வந்துவிடு!



சட்டென்று தன் பாதையிலிருந்து விலகி ஆர்ச்சியை நோக்கி வந்தது ஈட்டி!
ஹாஊஊய்...ய்! ஈட்டி கூட அவருடைய ஆணைக்கு அடி பணிகிறதே! மந்திர தந்திர வேலைகளில் டால்காடெக்ஸைவிட சாமர்த்தியசாலிதான் இந்த இரும்பு மனிதன்— சந்தேகமேயில்லை!
இல்லை..ஏதோ பித்தலாட்டம்.. பண்ணுகிறான்! நான்தான் உங்கள் அரசன்... நெருப்பு தேவதையால் நியமிக்கப்பட்ட தலைவன்!
இதைச் சாதிக்க ஆர்ச்சி தன் ந்த அமைப்பை தூண்டி விட்டிருக்கக் கூடும்!

ஆர்ச்சி அத்தோடு நிறுத்திக் கொண்டு விடவில்லை...!
நெருப்புகூட ஆர்ச்சியின் ஆணைக் கீழ்ப்படிந்தாக வேண்டும்...தெரியும இதோ—ஆர்ச்சியை துன்புறுத்த அதற்கு தைரியம் கிடையாது... பாருங்கள்!
டால்காடெக்ஸை விட உயர்ந்தவர் நீங்கள்தான் என்று சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்து விட்டீர்கள்...!
அணைந்து போ என்று ஆர்ச்சி ஆணையிட்டால் உடனே நெருப்பு அணைந்து போய் விடும்...இதோ—
பயல் தன் காற்றுத் திறப்பை திறந்து காற்றைப் பீச்சி தீயை அணைக்கிறான்!
ஆவ்...ஆர்ச்சி- திரும்பிப் பார்...

காற்றுத் திறப்பு இன்னமும் திறந்தவாறே இருக்கிறது என்பதை மறந்து விட்ட ஆர்ச்சி, சட்டென்று திரும்பியதும்...
ஆஆஆ...ஈஈ...யீ?
நீ நாசமாகப்போக...! இவர்கள் மீது இனியும் நான் ஆதிக்கம் செலுத்த முடியாமல் பண்ணி விட்டாய். இதோ... அழிந்து போ...சனியனே!
ஆனால், டால்காடெக்ஸ் வீசியெறிந்த கோடரி, ஆர்ச்சியிடமிருந்து பீச்சி கொண்டிருந்த காற்றினால் திசை திருப்பப்பட்டு புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்தது—விசையோடு ..!
ஆ...செத்தேன்!
தன்னைக் கொல்ல ஈட்டியை எறிந்தவனை, அதே ஈட்டியை கொண்டு கொன்று விட்டார் இரும்பு மனிதர்...!



ஆர்ச்சியோடு மற்ற மூவரும் சேர்ந்து கோவிலின் மேலே ஏறிச் சென்று பார்த்தனர்...
குரல் இடி முழக்கம் போல் உரத்து ஒலிக்க பிரம்மாண்டமான இந்தக் குழல் அவனுக்கு உதவி யிருக்கிறது!
அதோ பார்த்தீர்களா—பிரம்மாண்டமான உருப்பெருக்கி கண்ணாடி! இதை பயன் படுத்தித்தான் டால்காடெக்ஸ் மலை மீது தீப்பிளம்பை உருவாக்கிக் காட்டியிருக் கிறான்... சூரியன் இதன்வழி பிரதிபலிக்க அது வானில் கீழிறங்கி வரும் வரை காத்திருந்து அந்த தந்திரத்தை செயல் படுத்தி வந்திருக்கிறான்.
ம்...இப்போது எல்லாமே புரிகிறது! இங்கே குறுக்கே அவன் நின்றால் ஒளிக்கோளத்தின் மையத்தில் நிழலோட்டமாக அவனுடைய உருவம் தெரிவது சாத்தியமே!
கீழிறங்குவதற்கு முன் ஆர்ச்சி கீழ்க்கண்டவாறு அறிவித்தது:—
ஆர்ச்சி ஆணையிடுகிறேன்...! டால்கா டெக்ஸின் ஆளுகையில் இருந்து வந்த கொடுமை இனி தொடராது.. ஆர்ச்சியின் தோழர்கள் இவ்வழியாக இருப்புப் பாதை அமைக்க நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்...
..இனியும் நீங்கள் அடிமைகளாக நடத்தப்பட மாட்டீர்கள் ... செய்யும் வேலைக்கு தகுந்த ஊதியம் அளிக்கப்படும்! சுதந்திர மாக...மன மகிழ்ச்சியோடு; நீங்கள் வாழப்போகிறீர்கள்!

அடிமைத்தனத்திலிருந்து தங்களை மீட்டு சுதந்திரம் வழங்கிய மாவீரனை பாராட்டி விழா நடத்தினார்கள் காட்டுவாசிகள்
நிகரில்லா மாவீரன் ஆர்ச்சியின் புகழ் பாடுவோம்!
ஒரு வழியாக எல்லாமே நல்லபடியாக முடிந்தது...!
ஆர்ச்சியின் சமயோசிதமும் சாமர்த்தியம் தான் காரணம்!
ஏற்கனவே தற்பெருமை பேசிக்கொண்டு திரிவான் ...இப்போது இன்னும் கொஞ்சம் தலைக்கனம் ஏறிவிடும்...பயலுக்கு!
133
முற்றும்.

ஸ்பைடர் தோன்றும் குற்றத் தொழிற்சாலை!



அத்தியாயம் 1. அதிசயக் காந்தம்


திடீரென, விந்தைச் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது அங்கே...
ஏய்ய்ய்ய்!

அங்கே குழுமியிருந்தோரது பலவகையான அணிகலன்களும் கண்ணுக்குப் புலனாகாத அதிசய சக்தி ஒன்றின் ஆகர்ஷிப்பால் பறிக்கப்பட்டு காற்றில் மிதந்தன...
ஹே, என்ன நடக்கிறது இங்கே?
எ...என் முத்துமாலை பறந்து செல்கிறதே!
ஐயோ .. என் வைர நகை! டட்லி, அதைப் பிடியுங்களேன்!

அந்த வைர, முத்து ஆபரணங்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமாய் சன்னல் கண்ணாடியை உடைத்து வெளியேறி இருளில் புகுந்து மறைந்தன...
ஏ-ஏதோ ஒன்று அத்தனை ஆபரணங்களையும் உறிஞ்சி எடுத்துச் செல்கின்றதே!
பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இரண்டு துப்பறியும் வீரர்கள் ஒருமைல் தொலைவில் தங்களது ரோந்துக் காரில் இருந்தனர்...
துப்பறிவாளர் கில்மோர், ட்ராஸ்க் இருவருக்கும் செய்தி! ப்ளாஸா விடுதியிலிருந்து ஆபரணங்கள் அனைத்தும்... ஜன்னல் வழியாகப் பறந்து மறைகின்றன!
ஆம்... நம்பகமான தகவல்கள் அதை உறுதிப்படுத்துகின்றன!
நகைகளா?! ஸ்பைடர் தங்கம் திருட வேண்டி இங்கே பாம்பீச் வந்திருப்பதாகக் கூறினாயல்லவா?
உளவுத்துறைக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கில்மோரும், ட்ராஸ்க்கும் தங்களது நீண்டநாள் எதிரியான ஸ்பைடரைத் தேடி பாம் பீச்சிற்கு வந்திருந்தனர்.
எ-என்ன இது-?

கல்மோரின் கைக்கெடிகாரம் தானுகச் சிதறுண்டு அதன் எந்திர
உலோகப் பகுதிகள் கார் சன்னல் வழியே வெளியேறி மறைந்தன...
எனது விலை உயர்ந்த கடிகாரம் உருத் தெரியாமல் சிதறி மறைந்து விட்டதே, ட்ராஸ்க்!
POLICE
இங்கே... இந்த நகைக் கடை கண்ணாடி 'ஷோ கேஸை'ப் பார்!
ஹே, இது புதுமையான கொள்ளை தொலைவிசை இயக்குமுறைக்கருவி மூலம் செய்யப்படும் பலே திருட்டு!
புரியவில்லை, ட்ராஸ்க்! இந்த ஆபரணங்களை மிதக்கச செய்வது எது... எங்கே இவை பறந்து போகின்றன?


வானில் மிதந்து சென்ற அந்த ஆபரண அணிவகுப்பு தொடர்ந்துவந்த ஏஜண்டுகள் இருவரையும் கடலோரம் அழைத்து வந்தது...
விடை கிடைத்துவிட்டது, ட்ராஸ்க்... கடற்பரப்பினமேல் அதோ தெரிகிறது பார் இவற்றின் புகலிடம்!


கடலினுள் வெகு தொலைவில், நங்கூரமிட்டிருந்தது அந்தக் கப்பல். அதன் மேல்தளத்தில் பிரம்மாண்டமான புனல் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது...
நமது கொள்ளைப் பொருள்கள் வந்து கொட்டத் துவங்கி விட்டன. மிஸ்டர் மாஸ்!
மிகவும் மகிழ்ச்சி, ஸ்மித்... ஆனால் இனிமேற்கொண்டு கொள்ளை என்ற வார்த்தையைப் பயன்படுத்தாதே! நம் ''உழைப்பின் பலன்'' என்று குறிப்பிடு!

மேல்தளத்தில் விளிம்பை ஒட்டி நின்றுகொண்டிருந்த அந்த கண்ணாடி மனிதன்தான இந்த அறிவியல் திருட்டின் மூளையாய் இயங்கும்... மிஸ்டர் மாஸ்!
சில்லறைத் திருடர்கள்தான் தங்களது தேட்டையைக் கொள்ளை என்று குறிப்பிடுவர்... நான் ஒரு தொழிலதிபதி! மொத்தத் தயாரிப்புக்கான நவீன யுக்திகளைப் பயன்படுத்தி ஒரு பெரிய குற்றவியல் தொழிற்சாலையை உருவாக்கப் போகிறவன்!
கப்பலின் கீழ்த்தளத்திலுள்ள எந்திர அறைக்கு வந்தான் மிஸ்டர் மாஸ்...
அதிசயக் காந்தம் எப்படி வேலை செய்துள்ளது, ஆபரேட்டர்?
ஐம்பதுகிலோ வைரம் எழுபது கிலோ முதது இருநூறு கிலோ புலதரப் பட்ட ரத்தினக்கற்கள்! மொத்தத்தில் பாம் கடற்கரைப் பகுதி யையே துடைத்து எடுத்து விட்டது!
சபாஷ்! நமக்கு அடுத்துத் தேவைப்படுவது தங்கம்! காந்தமுள்ளை அதற்குத் திருப்பு!

சற்றைக்கெல்லாம், பாம் பீச்சில் அமைந்த சூதாட்டக் கிளப் ஒன்றில்...
என் தங்கப் பேனாவிற்கு என்ன வந்தது...?
ஹே, என் தங்கக் கடிகாரம் பறக்கிறதே!
ஏதோ மாஜிக் ஷோ போலல்லவா இருக்கிறது... எப்படி இது சாத்தியம்?
மிஸ்டர் மாஸின் அதிசயக் காந்தம் பாம் பீச்சின் வங்கிப் பெட்டகங்களையும் விட்டு வைக்கவில்லை...
ONE WAY
கிறுக்குத்தனமாய் உளறுகிறீர்கள், ஹோபர். தங்கப் பாளங்கள் மிதப்பதை யாராவது கேள்விப் பட்டதுண்டா? இன்னும் கொஞ்சம் போனால் பறக்கும் மனிதர்கள் தெரிகிறார்கள் என்று உளறப் போகிறீர்கள்!

அடுத்த சில நிமிடங்களில்...
ஆ-ஆச்சரியம்... எப்படி அவ்வளவு சரியாக யூ யூகித்தாய், ரோஸி?
'சமூகவிரோதிநம்பர் ஒன்று' என்று தன்னைத்தானே அழைத்துக் கொள்ளும் அந்தக் குற்றவியல் மேதை லட்சாதிபதி ஒருவரின் பங்களாச் சன்னல் வழியே உள்ளே குதித்தான்.
என் லேசர் கதிர் துப்பாக்கியினை ஒருமுறை இயக்கினால் போதும்...கண்ணாடித் தடுப்புகள் வழி திறந்து வரவேற்புக் கொடுக்கும் இந்த ஸ்பைடருக்கு!

ஸ்பைடர் நுழைந்த அறை ஒரு
கலைப்பொருள் மியூசியம்...
உல்லாசத்தோடு தொழிலையும் சேர்த்தால்தான் ஒரு த்ரில இந்த லட்சாதிபதியின் பொக்கிஷங்களை கைப்பற்றிச் செல்வதே ஒரு உவகை தரும் சமாச்சாரம் தான்!
நாம் பாம்பீச்சிற்கு வந்திருப்பது உல்லாசப் பொழுதுபோக்கிற்கு என்றல்லவா நினைத்தேன் ஸ்பைடர்?
விலைமதிப்பற்ற சிலை ஒன்றை நோக்கி ஸ்பைடர் முன்னேறிய வேளையில்...
தங்கம் சொக்கத்தங்கம்... இனி ந் எனக்கே சொந்தம் அழகுப் பொற்சிலையே- ஊஊஊப்?
ஸ்பைடர் மற்றும் அவனது இரு சகாக்களான ராய் ஆர்டினி, புரபஸர் பெல்ஹாம் ஆகியோர் அறியாத அந்த அற்புதக் காந்தம் தன் ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது அங்கே...
ஹே! தங்கத்தின் மதிப்பு திடீரென கிறுகிறுவென்று மேலேறும் எனக் கேள்விப் பட்டிருக்கிறேன்... அது உண்மைதானென்று தோன்றுகிறது!
போதும் உம் மேதா விலாசம், புரபஸர் அநியாயமாய் ஒரு பெரும் கொள்ளை நடந்துவிடப் போகிறது இங்கே!

ஊப்! இந்த ஸ்பைடரின் திட்டத்தில் குறுக்கிடும் துணிச்சல்காரன் யார்? என்பிடியிலிருந்து இந்த அற்புதக் கலைப்பொருளை கவர்ந்து இழுக்கும் அதிசய சக்தி தான் என்ன?
அதேசமயம், ஸ்பைடரின் ஹெலிகாரை அடையாளம் கண்டுகொண்டு மாளிகைக்கு வந்து சேர்ந்தனர் அந்த இரட்டை உளவாளிகள்...
பாஸ், ஆபத்து .. போலீஸ் வந்து விட்டது. உங்களைத் தேடி!
வகையாய் மாட்டிக் கொண்டாய், ஸ்பைடர்... கையும் களவுமாய் பிடித்துவிட்டோம் உன்னை!


ஸ்பைடர் சடாரெனத் தன் சமயசஞ்சீவித் துப்பாக்கியான மயக்கவாயு பிஸ்டலை இயக்கினான்...
ஹாாா... அஹ்ஹ!
முட்டாள்களே, இடையில் புகுந்து குழப்பாதீர்கள்! உங்களுடன் விவாதித்துக் கொண்டிருக்க நேரமில்லை எனக்கு...!

ஆர்டினியும், புரபஸர் பெல்ஹாமும் போலீஸ் பட்டாளத்திடம் சிக்கிக் கொண்டனர். ஆனால் ஸ்பைடர் ஒன்றும் சாமானியன் அல்லவே-அவர்களைப்போல் மாட்டிக்கொள்வதற்கு...
அதோ இருக்கிறான்!
இந்தக் கோமாளி கூலிப் பட்டாளத்தின் மீது என் அருமையான ஆயுதத்தை அனாவசியமாய் பிரயோகிக்க வேண்டியதிருப்பது உண்மையில் பரிதாபமே!

எதிரிகளை இமைப்பொழுது நேரத்தில் கட்டிப் போடச் செய்யப்பயன் படுத்தும் வலைத் துபபாக்கியே ஸ்பைடரின் ஆபத்து மிக்க ஆயுதமாகும்...
ஹாய்!
அடுத்து என்ன செய்ய வேண்டும், பாஸ்?
பறந்து செல்லும் தங்கம் எல்லாம் எங்கு செல்கின்றன என்று கண்டுபிடிக்கவேண்டும்-இதன் மூலகர்த்தா யார் என்பதையும் அறியவேண்டும்!
அருகாமையிலிருந்த 'காரேஜ்' ஒன்றைத் தன் லேசர்கதிர்த் துப்பாக்கியால் திறந்தான் ஸ்பைடர்
நீங்கள் இருவரும் ஹெலி காரிலேயே இருங்கள்... என் அழைப்பு வந்தபின் வாருங்கள்... எனது இப்போதைய தேவை உள்ளிருக்கும்வாகனமே!
இந்த விலை உயர்ந்த கார்தான் நான் குறிப்பிட்ட வாகனம்!


அந்தப் படோடாபமான லிமவுசின் படகுக்காரை வெளியே கொண்டு வந்தான்...
வண்டியில் அப்படி என்ன குறிப்பிடத் தக்க விசேஷம், புரபஸர்?
இந்த இடத்தின் உரிமையாளரான லட்சாதிபதி தனக்கெனப் பிரத்யேகமாய்ச் செய்திருக்கும் இந்தக் கார்... முழுக்க முழுகக்த் தங்கத்தால் ஆனது!


காரேஜினுள்ளிருந்து வெளிப்பட்ட மறுவினாடி அதிசயக் காந்தத்தின் ஈர்ப்புக்கு ஆளான வண்டி மேல் நோக்கிப் பறக்கலாயிற்று ...
அடையாளம் தெரியாத என் எதிரி இன்றைய இரவில் தங்கத்திற்குக் குறிவைத்திருக்கிறான்... அதனால் இந்தத் தங்கக்காரும் அவன் சேமிப்பில் சேர்வதற்கு வழி செய்வோமே ..

எதிரியின் இருப்பிடம் போய்ச்சேர எளிதான வழியினைத் தேர்ந்தெடுத்தான் அந்தக் குற்றச சக்கரவர்த்தி...
இந்த வேண்டாத விருந்தாளியை வலிய விருந்துக்கு அழைக்கிறோம் என்பதை அறியவில்லை அந்த முட்டாள்!
வானில் பார்.. தகதகக்கும் தங்கக் கார்!
ஆ-ஆமாம்! உண்மைதான்!
மேல்தளத்தில் நின்றவாறு அந்த அற்புதக் காட்சியை பேராசைக் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான் மிஸ்டர் மாஸ்!
காந்தத்தின் மகிமையே மகிமை, பாஸ்!
MIDAS
MIDAS
சேச்சே... இதற்கா இவ்வளவு உற்சாகமான கத்தல்... ஒரு வியாபாரி போல் நடந்துகொள்ள மாட்டேனென்கிறயே, ஸ்மித்! எனது இந்த வித்தியாசமான வியாபாரம் நல்ல பலன் தருகிறது-அவ்வளவே!
148


விரும்பத்தகாத சம்பாத்தியமும் சேர்ந்து வருகிறது என்பதை அறியவில்லை அந்தக் குற்றத் தொழிலதிபதி...
தப்பான முறையில் கவர்ந்துவரும் செல்வங்களை இங்குதான்சேகரித்து வைக்கிறான் போலும்... இவனது வழிமுறைகள் பேரறிவுமிக்கவன் என்பதைக் காட்டுகின்றன... ஆனால் இக்கணிப்பு இந்த ஸ்பைடரோடு ஒப்பிடாத வரைதான் சரியானது!

பளபளப்பான படகுக்கார் தளத்தினுள் வந்து நின்றதும் ..
ஊப்! ஒரு மாமேதையை நீங்கள் இதற்குமுன் பார்த்தது கிடையாதா, மடப்பசங்களா?
அஹ்?
ங்கே!

வேகமாய் நாலாபுறமும் சுற்றிப் பார்த்தான் ஸ்பைடர்...
ஹா! ஏதோ ஒரு வகைக் காந்தத்தைப்பயன்படுத்துகிறான் என்பது புலப்படுகிறது! கண்டரோல் பகுதியின் இருப்பிடத்தை என் வழியில் கண்டாக வேண்டும்;
மறைவில் நின்றுகொண்ட ஸ்பைடர் அவ் வழியே விரைந்து போய்க்கொண்டிருந்த ஒருவனை நோக்கி தன்வலைத்துப்பாக்கியால் சுட்டு ஒரு நூலிழையை அவன்மேல் இணைத்தான்...
மிஸ்டர் மாஸ்! அந்நியன் ஒருவன் நம் கப்பலினுள் நுழைந்து விட்டான்...!
தன் தலைவனிடம் நம்மை இட்டுச் செல்வான்!

அடையாளம் தெரியாத
எதிரியைச் சந்திக்கத்
தயாராகிவிட்டேன்!
தன் தலைவரிடம் ஸ்பைடரின்
வருகையைப் பரபரப்புடன்
விவரித்தான்...
வளர்த்தியாய், கருப்பாய்,
அவலட்சணமாய் இருந்தான!
உடலை ஒட்டிய கருப்பு
உடுப்பு... சப்பை மூஞ்சி ..
இந்த உருவ அமைப்பு ஒரே
ஒருவனுக்குத்தான்
பொருந்தும்... அவன்
ஸ்பைடர்!
மறுகணம் கதவு
படாரெனத் திறக்க...
ஸ்பைடரைச் சந்திக்க
வெகுகாலமாய்க்
காத்திருக்கிறேன்...!
இனித் தேவையில்லை.
பெருச்சாளியே!

எவ்வளவோ மாற்றங்களுடன் முன்னேற்ற நிலையில் இருக்கும் நமது தொழிலின் ஆரம்ப நிலையில் இருப்பவன் நீ ஸ்பைடர்! தனிமனிதனாய் குற்றத் தொழிலில் ஈடுபடும் பழமைப்போக்கு எப்போதோ முடிந்துவிட்டது! அமெரிக்கா மொத்தத்தையும் கொள்ளையிடத் திட்டமிட்டிருக்கும் குற்றத் தொழிலின் ஆரம்ப நிலைதான் இப்போது நீ பார்த்தது!
பேராசைக்காரன்... நேற்றைய மழையில் இன்று முளைத்த காளான்! ஸ்பைடர் போன்ற கலைஞனை எதிர்க்கிறாய் நீ!
ஒரு சின்னத் திருத்தம்... முன்னாள் ஸ்பைடர் என்று குறிப்பிடவும்! முடியுங்களடா, இவனது கதையை!

வீழ்த்த முயற்சிக்க சடாரென மேலே தாவி வாயுகுண்டு
ஒன்றை விசிறியடித்தான் அவன் ..
இந்தக் கலைஞனின் வேலையை நேருக்குநேர் காணவிருப்பம் கொண்டுவிட்டாய்-இல்லையா, மாஸ்? நல்லது...!
விடாதீர்கள் இவனை! அஹ!
டும்!
நான்கு புறமும் மூடப்பட்ட அறையினை வாயு மேகமூட்டமாய் மூடிக்கொண்டது...
நான் நினைத்தது போல் இவன் ஒரு மகாக்கொடியவன்! சரியான பாடம் புகட்டியாக வேண்டும்!
ஹஹ் அஹ்... க-கதவு...!
இதுதான் காந்தக் கருவி! எந்தத்திசை நோக்கியும் இதனைத் திருப்ப முடியும். அத்தோடு பலவகையான உலோகங்களை ஈர்த்துக்கொண்டு வரச் செய்வதற்கான அமைப்பும் உள்ளது...!

ஏற்கனவே உருவாக்கியிருந்தது ஸ்பைடரின் தேர்ந்த மூளை...
இந்தக் காந்த சக்தியை வடகிழக் காகத் திரும்பச் செய்து முளை யுரேனியத்திற்கு நேராய் நிற்கச் செய்வோம்!
கருவியில் மாற்றம் செய்துவிட்டு கப்பலின் பக்கச்சுவரில் அமைந்திருக்கும் துவாரத்தை நோக்கிப் பாய்ந்த ஸ்பைடர் தன் சகாக்களுடனும் தொடர்பு கொண்டான் ..
விடைபெறுகிறேன், மிஸ்டர் மாஸ்... உன் தொழிலை விரைவிலேயே நீ மூட்டை கட்ட நேரிடும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன!
ஹெலி-காரை கப்பலி னருகே கொண்டு வா, ஆர்டினி!

துப்பாக்கியால் சுட்டான்...
அதோ நம் பாஸ்...!
பட்டு நூல் போன்ற வலை ஏணியில் சரசரவென ஏறினுன் ஸ்பைடர்...

கப்பலில் நடந்தவற்றை அறியும் ஆவலோடு இருந்தனர் சகாக்கள்
வாகனத்தைக் கிளப்பு, பெல்ஹாம்...பாதுகாப்பான தொலைவு சென்று நடக்கப் போவதைக் கவனிப்போம்!
அழிவுநடவடிக்கை ஒன்றுக்கு வழி செய்துவிட்டு வந்திருக்கிறீர்கள் இல்லையா, பாஸ்?
அவனுக்குப் பாடம் புகட்டியிருக்கிறேன், ஆர்டினி! விளக்கமாய்ச் சொல்கிறேன்... அவனது காந்தக் கருவியை அமெரிக்க ஏவுகணைத்தளமான கென்னடி முனையின் திசைக்குத்திருப்பி யுரேனியத்தை ஈர்க்க வகை செய்திருக்கிறேன்! விரும்பாத கொள்ளை ஒன்றை வரவழைக்கப் போகிறான் அந்த மாஸ்
அடுத்த ஓரிரு விநாடிகளில், ஐம்பது மைல் தொலைவில் உள்ள ஏவுகணைத்தளமான கென்னடி முனையில், போர்த்தப்பட்ட தார்ப்பாய் ஒன்று மேல்நோக்கித் தூக்கத் துவங்கியது...
ARMY
DANGER
NUCLEAR
HAZARD
ஹே, அதென்ன அங்கே...?
ரகசியச் சேமிப்புக் கிடங்குகளெல்லாம் தகர்ந்து விடுபடுகின்ற
MP

அதிசயக் காந்தத்தின் ஆற்றல் ஆபத்திற்கும் துணை போகும் என்பது ஸ்பைடரின் கைவரிசை யால் வெளிப்பட்டது அங்கே...
ஆபத்து... தரையில் படுத்துக் கொள்ளுங்கள் அனைவரும்! நமது நவீன சிறுரக ஏவுகணை தானாக வெளிக் கிளம்புகிறது... எ-எப்படி இது......?
எரிபொருளான யுரேனியத்தை உள்ளடக்கியிருந்த அந்த ஏவுகணை காந்தசக்திக்கு வயப்பட்டு மிஸ்டர்மாஸின் கப்பலை நோக்கிவிரைந்தது.
ஸ்பைடர் அதிசய ஆற்றல்கள் பல கொண்டிருப்பது கவலைக்குரிய விஷயம், பாஸ்!
நாம் வெளியே வந்தபின் கண்ட்ரோல் அறையில் ஏதேனும் விஷமம் செய்து வைத்திருக்கிறானா அவன்? வானில் வந்துகொண்டிருக்கும் அந்தப் பொருள் என்ன?

விரைந்து வரும் ஆபத்தை கடைசி நேரத்தில் புரிந்தான் மிஸ்டர் மாஸ்
ஏவுகணை ஒன்றின் முனைப்பகுதி போல்தோன்றுகிறது.. அ-அதில் அபாயம், அணுவெடி என்பதுடன் அமெரிக்க முத்திரையும் பொறிக்கப்பட்டிருக்கிறது!
ஈஈஈ! இது ஸ்னபட வேலை! கப் இருப்பது ஆ
மேல்தளத்தின் புனல் அமைப்புக்குள் புகுந்தது அந்த சிறு ரக நவீன ஏவுகணை ..
முட்டாள்களா, காந்தம் இப்போது இழுத்துவரும் பொருள் ஒரு வெடிகுண்டு...

டுத்த விநாடி, மாபெரும் தீக்கோளமாய்
றியது அந்தக் கப்பல்!
டம்! டமால்!
மல் தொலைவில் இருந்தவாறு
க் களிப்புடன் கவனித்துக்
டிருந்தான் ஸ்பைடர்...
ல் நான் பின்தங்கிய
லயாமிஸ்டர் மர்ஸ்?
தொழிலிருந்து
ய்வு பெற்றவன்
போது!
மிஸ்டர் மாஸ் என்பவனின்
கதை முடிந்ததாகக் கருதப்
பட்டது!
ஸ்பைடரின் தலைமைக்
குப் போட்டியாய்க்
கிளம்பும் எவருக்கும்
அழிவு நிச்சயம்!

அத்தியாயம் 2. அதிசயக் கருவி



மிஸ்டர் மாஸ் தப்பிச்சென்றது முன்னேற்பாடானதிட்டமிட்ட ஒரு நடவடிக்கை.
ம்... சீக்கிரம்... தங்கத்தையும் நவரத்ன ஆபரணங்களையும் அள்ளிக்கொண்டு ஓடி வாருங்களடா, சோம்பேறிப் பசங்களா. இன்னும் அறுபதே விநாடிகள் தான் உள்ளன அந்தக் குண்டு வெடிப்பதற்கு!
எதற்காக இந்த வாகனத்தை நான் கப்பலின் கீழே தயாராய் வைத்திருந்தேனென்று நினைக்கிறாய்? ஆபத்து வரும்போது இமைப்பொழுது நேரத்தில் தப்பிச் செல்லவே இந்த முன்னேற்பாடு...
தன் வெற்றிகரமான தப்புதலை நினைவுகூர்ந்த அந்த எதிரியின் முகம் பிரகாசமானது...
நமக்கு அப்போது இருந்தது இருபதே விநாடிகள்! கப்பல் வெடித்துச் சிதறியபோது நமது கொள்ளைச் சேமிப்புகள் அனைத்தும பத்திரமாய் இந்த வாகனத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது!

என்னை ஒழித்துவிட்டோமென
தன்னைத்தானே பாராட்டிக்கொ
டிருப்பான் அந்த ஸ்பைடர்!
நான் புளோரிடாவிலுள்ள
தலைமையகத்திற்குப் போய்
சேருவதற்குள் தன் தவறுதலை
உணர்ந்திருப்பான் அந்த முட்ட
பதினைந்து நிமிடங்களுக்குப்பின்...
இப்போது நாம் மியாமி நகரின் கீழே பயணம்செய்துகொண்டிருக்கிறோம் மிஸ்டர் மாஸ். தொடர்ந்து நேர் மேற்குத் திசையில் செல்கிறோம்!
தூர தர்சினிப் பெட்டியின் சுவிட்சைப் போடு


துளை வாகனத்தின் நேர்மேலே தரையில் தெரிந்த காட்சி திரையில் விரிந்தது...
தலைமையகத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்... எளிதில் ஊடுருவிச் செல்ல இயலாத வெப்பமிகு சதுபபு நிலக்காட்டினுள் அமைந்திருக்கும் என் இருப்பிடம் எவரும் அறியா மறைவிடம்!


மிஸ்டர் மாஸின் தலைமையகம் நீர்மூழ்கியான ஒரு எஃகு கூண்டு...
எஞ்சின் வேகத்தைக் குறை!
ஸ்பைடர், சவால் உனக்கு... உண்மையான குற்றசசக்கரவர்த்தி யார் என்பதைப் பார்ப்போம்!


மிஸ்டர் மாஸின் தலைமையகம் முழுக்க குளிர்சாதன வசதி செய்யப்பட்டு நவீன மின்னணுக் கருவிகள் அனைத்தும் பொருத்தப்பட்டிருந்தது...
முதலில் ஸ்பைடரின் நோக்கம் என்னவென்பதைக் கண்டறிய வேண்டும்... அதன்பின் அவனை எப்படி முறியடிப்பது என்பதை நான் தீர்மானிப்பேன்! டெலி-ஸ்கானர் சுவிட்சைப் போடு!


டெலி-ஸ்கானர் என்னும் தொலைக்காட்சிப் பெட்டியில் மியாமிக்கு அப்பால் ஐம்பது மைல் தொலைவில் நடக்கும் சம்பவம் தெளிவாய் தெரிந்தது ..
ஹா! ஸ்பைடரின் ஹெலி-கார்... போலீஸ் அவனை மடக்கிப்பிடிக்க முயற்சிக்கிறது! அந்த சாமர்த்திய சாலியுடன் நான் மோதுமுன் அவர்களை எப்படிச் சமாளிக்கிறான் என்பதைப் பார்ப்போம்!

சுடு!
சுட்டு வீழ்த்து ஸ்பைடரை!
சட்டம் வம்புக்கிழுக்கிறது என்னை! எதிரேயுள்ள உயர்ந்த மாடிக் கட்டிடத்தின் அருகே செலுத்து ஆர்டினி!
தனக்குத்தானே புன்னகைத்துக் கொண்ட ஸ்பைடர்...
பாம்பீச்சில் நடந்த பெருங்கொள் சம்பவத்திற்கு நான்தான் காரண என நினைக்கிறது இந்தச் சட்டம் புகழின் உச்சியிலிருப்பவர்களுக் இத்தகைய களங்கம் கற்பிக்க படுவது சகஜம்!

சிலந்தி வலை நூலிழை கொண்டு பதினைந்தாவது மாடியின் பால்கனியில் வந்திறங்கினான் ஸ்பைடர்...
ஈஈஈ!
வீண் களேபரம் தேவையில்லை, பெண்ணே! நிலையாய் ஓர் இடத்தில் இருந்து என் ஆயுதத்தை இயக்க உன் பால்கனி தேவை, அவ்வளவே!

போலீஸ் ஹெலிகாப்டர்கள் இரண்டும் ஹெலி-காரை நெருங்கிச்சுட...
லெப்டினன்ட், அங்கே பாருங்கள்... விபரீதப் பேர்வழி அவன்!
சகாக்கள் இருவரும் ஆபத்தில் இருக்கிறார்கள்... ஸ்பைடர் இனியும் தாமதிக்க மாட்டான்!
சட்: தனிமனிதனாய் இவனால் நம்மை என்ன செய்ய முடியும்?

காற்றுப் போன்று கனமற்றதும் எஃகு போன்ற உறுதி கொண்டதுமான பசைத்தன்மையுடைய நூலிழைகள் ஸ்பைடரின் துப்பாக்கியிலிருந்து பீச்சி அடிக்கப்பட்டன...
இப்போது உங்களுக்குப் பதில கிடைத்து விட்டதல்லவா?
வவ்! காற்றாடி விசிறியின் வேகம் மட்டப்படுகிறது! சிலந்தி வலையால் பின்னலிட்டு சுழல விடாது தடுக்கிறான்!
அடுத்த ஹெலிகாப்டருக்கும் அதே கதி ..
ஸ்பைடர் இரண்டையுமே செயலற்றதாக்கிவிட்டான் ஆர்டினி!
ஹா, ஹா. அந்தக்காவலர்கள் நம்மைக் கட்டி இழுத்துச் செல்லலாமெனக் கனவு கண்டிருப்பர்... ஆனால் இப்போதோ அவர்கள் கட்டப்பட்டுவிட்டனர்!

ஆனால் அதே வேளையில் உளவாளிகளான கில்மோரும் ட்ராஸ்க்கும் பின்பக்கமாக ஸ்பைடரை நெருங்கினர் .
இம்முறை ஏமாந்து விடக்கூடாது
இதோ நான் வந்து சர்ந்து கொள்கிறேன், ஆர்டினி!
தானே பின்னிய நூலிழை ஏணியில் ய்ந்து தாவினான் ஸ்பைடர்...
டலின்மீது சுடுவதில் பயனில்லை... கவச ப்பணிந்திருக்கிறான்!
ஆமாம்... ஆனால் நீ கொண்டு வந்திருக்கும் கருவி பயன்படும்!
பிரத்யேக துப்பாக்கி மூலம் ஒரு மினி ரேடியோ கதிர் வீசுக் கருவியை அனுப்பினர்...
ய்யா, இனி ஸ்பைடரை சிரமமின்றி பின் தொடர முடியும்...


ஸ்பைடர் அறியாவண்ணம், அந்த சிறுரக வழித்தடம் காட்டும் கருவி ஹெலி-காரில் ஒட்டிக்கொண்டது...
ஓஹோ... என் ஆப்த உளவாளிகள் இருவரும் மிகச் சிரமப்பட்டு பின்தொடர்ந்து வந்திருக்கின்றனரோ? ஆனால், பாவம் கொஞ்சம் தாமதித்து விட்டனரே!
டப்!
சட்டம் மட்டுமே ஸ்பைடருக்கு வலை விரிக்கவில்லை! தொலைதூர தன் தலைமையகத்தில் அமர்ந்தவண்ணம், மிஸ்டர் மாஸ் என்னும் கொடி வனும் ஆர்வத்துடன் நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தான்
ஆஹா! சட்டத்தின் பிடியிலிருந்து நீ தப்பிவிட்டாய், ஸ்பைடர்-ஆனால் என்னிடமிருந்து தப்புவது அவ்வளவு எளிதல்ல!

நோக்கித் திரும்பியவனாய்...
ஸ்பைடர் நினைத்துக்கொண்டிருக்கிறான், ஸ்மித். வேறுவகையில் அவனுக்கு நாம் யார் என்பதைக் காட்டுவோம்! இந்தப் போலி உருவத் தயாரிப்புக் கருவியை அதற்குப் பயன்படுத்துவோம்!
replicator
எத்தனை நகல் பிரதிகள் வேண்டும், பாஸ்?
ஐம்பது போதும்!
cator

ம் அதனை அச்சாக நகலெடுத்து தேவை
ன எண்ணிக்கையில் பிரதிகளைத்
யாரித்துத்தரும் எந்திரம் அது ..
னது போலி எப்படி இருக்கிறது?
உங்களை வார்த்தெடுத்த உருவமே தான், பாஸ்!
ஒன்றன்பின் ஒன்றாய் கிளம்பி வந்தன மிஸ்டர் மாஸின் போலி உருவங்கள்!
திருப்திகரமாய் உள்ளது! இந்தப் போலி உருவங்களை அந்த ஸ்பைடரின் எதிரே நடமாடவிட்டால் அதிர்ச்சியில் செயலற்று நின்றுவிடுவான்!

மிஸ்டர் மாஸின் ஏவலன் ஒருவன் ஸ்பைடரின் ஹெலிகார் செல்வதை தொலைக்காட்சியில் தொடர்ந்து கண்காணித்து வந்தான்...
அவன் தன் மறைவிடத்தை அடைந்துவிட்டான், பாஸ்! அங்கே செல்வதற்கான வழித் தடத்தினைச் சொல்ல முடியும் இப்போது!
நல்லது ஸ்மித்! எனது போலிகள் அடுத்த பத்தாவது நிமிடம் அங்கே கொண்டு போய்ச் சேர்க்கப்பட வேண்டும்!
குற்றத் தொழிலின் தலைமை சிம்மாசனத்தில் ஒரே ஒரு ஆள்தான் அமர இடம் உண்டு ஸ்பைடர்... ஆகவே ஒதுங்கி வழிவிடு மிஸ்டர் மாஸுக்கு!

மிஸ்டர் மாஸின் தலைமையகத்திலிருந்து ஐம்பது மைல் தொலைவில் ..
எஞ்சிய இரவுப் பொழுதையும் இந்த நமது மறைவிடத்தில களிப்போம், ஆர்டினி... போலீஸாலோ அல்லது அந்தப் பெருச்சாளி மிஸ்டர் மாஸ் என்பவனாலோ நமக்கு தொந்தரவு இருக்காது இங்கே! ஹா, ஹா!
பாழடைந்த அந்த விடுதிக் கதவினைப் படாரெனத் திறந்தான்...
அந்தப் பெருச்சாளியை நான் காலஞ்சென்ற மிஸ்டர் மாஸ் என்று குறிப்பிட்டிருக்க வேண்டுமோ! அது சரி-இ-இது என்ன?
கிரீச்!

ஸ்பைடர் என்னும் குற்றச் சக்கரவர்த்தியை ஆச்சரியப்பட வைத்த சம்பவங்கள் மிகச் சொற்பமே... ஆனுல் இப்போதோ அவன் வியப்பின் எல்லையையே அடைந்தான!
ஆச்சரியம்! இது எப்படி...? நேர்க்கு நேராய் நிற்பது மாஸ்... மாஸ்தான்!
நான் நினைத்ததைவிட நீ கில்லாடிதான்,குள்ளநரியே...வெடித்து சிதறியகப்பலிலிருந்தே உயிர்தப்பி வந்துவிட்டாயா! ஆனுல் இந்த மயக்கவாயு துப்பாக்கியின் முன நீ தாக்குப் பிடிக்க இயலாது!
அந்தத் தட்டை உருவம் தரையில் சாய்ந்தது!
ஹா! அடங்கியது உன் கொட்டம், மிஸ்டர்மாஸ்! ஆர்டினி...கீழேமேலும் யாரேனும் உட்புகுந்திருக்கிருர்களா எனப பார்!

ஆர்டினி, நான் சொன்னது காதில்... அஹ்? என் கண்களே என்னை ஏமாற்று கின்றனவா-இல்லை என் முன்னே காட்சி தருவது மற்றொரு மிஸ்டர் மாஸ்தானா?
இரண்டாவது மாஸ் சுட்டு வீழ்த்தப்பட பின்பக்கமாக் மற்றொரு மாஸ்...
கப்பலை நிர்மூலமாக்கிய எனது வெடித் தாக்குதலிலிருந்து தப்பிய வில்லன்... பிசாசு உருவங்களைப் படைத்தனுப்பு கிறாய் எனக்கு எதிராய?

அடுத்த சில விநாடிகளில் வேகமாய் ஹாலினுள் நுழைந்தான் ஆர்டினி ..
வெளியே கண்ணாடி அணிந்த கட்டை உருவம் ஒன்று நடமாடிக் கொண்டிருந் ததைப் பார்த்தேன், ஸ்பைடர்... ஆனால் ஆளைக் காலி பண்ணிவிட்டேன்...!
நீ சொல்வது தவறு என நினைக்கிறேன் ...

அடுத்து புரப்ஸர் உள்ளே நுழைந்தார்...
வெளியே புதியவன் ஒருவன்... மூக்கு கண்ணாடி அணிந்து சந்தேகப்படும் படியாய் காணப்பட்டான் சுட்டுத் தள்ளி விட்டேன்!
ஹே, நான் சொன்ன அதே அடையாளம் கொண்ட நபர்! எப்படி...?

அதேசமயம் மேலும் மூன்று உருவங்கள் அங்கே தென்பட...
நீங்கள் பார்ப்பது என் எதிரி மாஸ் என்பவனின் போலி வடிவங்கள்! அந்த அயோக்கியன் தன்னைத்தானே நகல் செய்து அனுப்பும் ஆற்றல் கொண்டிருக்கிறான்!
அம்மாடியோவ்!
அறையின் திரும்பிய பக்கமெல்லாம் மிஸ்டர் மாஸ் ..
ஆச்சரியப்பட்டது போதும், ஆர்டினி! போலிகளைக் களையெடுப்போம்!
ம் நினைத்ததுபோல் இந்த மாஸ் லேசுப்பட்ட ஆளில்லை, ஸ்பைடர்!
பொறுங்கள், சகாக்களே!


நமது வாயுவை தேவையில்லாமல் இந்த ஜந்துக்களின்மீது வீணடிக்கிறோம்! மிஸ்டர் மாஸ் வேறெங்கோ இருந்து விளையாட்டுக் காட்டுகிறான் நினைவு அலை தலைக்கவசத்தைக் கொண்டுவா, ஆர்டினி!
இதோ நினைவு அலைக் கவசம்
சபாஷ்! இந்த உயிரினத்தின் தலைமேல் பொருத்து!
மாடியில் நின்ற மற்றொரு போலி மாஸை நோக்கி 'ஜி வென மேலெழும்பித் தாவ ஸ்பைடர்...
என் சகதொழில் நண்பன் விந்தை எந்திரம் ஒன்றை கொண்டு வேடிக்கை புரி றான். . ஆனால் எதுவும் இந்தக் குற்றச் சக்கரவர் திக்கு இணையாகாது!


தொலைதூரத்தில் இருந்து எண்ண அலைகளை அனுப்பி தன் போலி உருவங்களை இயக்கிக கொண்டிருக்கும் மிஸ்டர் மாஸின உத்தரவுகளை காதில் மாட்டும் ஒலிக்கருவி மூலம் இடைப்புகுந்து செவிமடுத்தான் ஸ்பைடர்...
நம்பர் இருப்பத்தைந்து... கண்ட்ரோலுக்கு அறிக்கை தரவும்... நமது ஊடுருவல் எந்த அளவில் இருக்கிறது?
பிடித்த போலி மனிதனை ஹெலிகாருக்கு இட்டுச் சென்றான் ஸ்பைடர்..
இன்னும் ஒரு டஜன் போலிகள் நடமாடுகின்றன ஸ்பைடர்!
இருக்கும்... பெரிய அளவில் தொழில் புரிபவனாயிற்றே அந்த மாஸ் ..
பேசாமல் வாருங்களடா, வெற்று அரட்டைப் பசங்களா...

எண்ண அலைகளைப்பின் தொடர்ந்து அவனது தலைமையகத்தைச் சென்றடைவோம், ஆர்டினி!
ஓ.கே.,ஸ்பைடர் ..ஆனால் என்ன செய்கிறோம் என்பதைத் தெரிந்துதான் செய்கிறோம் என நம்புகிறேன்!
கோழையே! பொம்மைகளைத் தயாரிக்கும் அந்த மாஸ் என்னும் ஆணவக்காரனிடம் தோற்கும் அபாயம இருக்கிறது என எச்சரிக்க நினைக்கிறாயோ? உங்கள் அனைவருக்குமே புரிய வைப்பேன் நான்தான் குற்றவியல் சாம்ராஜ்யத்தின் தனிப்பெரும் தலைவனென்பதை...
ஹெலிகார் விரைவிலேயே பசுமைமிக்க புளோரிடா சதுப்பு நிலப்பிரதேசத்தில்நுழைந்தது..
எண்ண அலைகள் உச்ச ஓசையில் கேட்கின்றன பாஸ்...
ஆம்! என் எதிரி இங்கே நீரினடியில் மறைந்திருப்பானெனத் தோன்றுகிறது. மனித முதலையான அவனுக்குப் பொருத்தமான இடம்தான்!

ஹெலிகார் உலோகக் கூண்டி
னருகே தரை இறங்கியது...
அவசரம் வேண்டாம், ஸ்பைடர்.. மாஸ் ஒருவேளை உன்னை எதிர் பார்த்துக்கொண்டிருக்கக்கூடும்!
அதில் சந்தேகமில்லை, பெல்ஹாம்! என்ன செய்கிறானெனப் பார்ப்போம்...
திடீரென உள்ளிருந்து சுருள் வடிவக் குழாய் ஒன்று பாம்பு போல் நீண்டு வந்தது...
ஹஹ்! என்ன இது?

எதிர்பாரா ஆபத்திலிருந்து தாவித் தப்பும் ஸ்பைடரின் ஆச்சரியமான உத்தியையும் முந்திக்கொண்டு உள்ளிழுத்தது!
ஆஆஆ . வ்!
சுழற்றி இழுத்துக்கொண்டு போனது உறிஞ்சு குழாய்...
அஹ்!
கடைசியாக
.ங்க்க்க்!
தொப்

ஆவேசத்துடன் தாவி எழுந்த ஸ்பைடரின் எதிரே...
உன் அகௌரவமான செயலுக்கு நீ பதில் கூறியே ஆக வேண்டும் ஈனப்பிறவியே! ஆ-ஆனால்... உங்களில் யார் உண்மையான மாஸ்?
பன்னிரண்டு உருவங்களும் ஒரே குரலில் பேசின...
உனக்கு இங்கே கேள்வி கேட்கும் உரிமை கிடையாது. பரிதாபத்திற்குரிய பூச்சியே! பாம் பீச்சில் என் தொழில் நடவடிக்கையில் குறுக்கிட்டாய்.. ஆனால் இனியும் அதுபோல் செய்ய இயலாது உன்னால்...

விரைவில், வடக்கே இருக்கும் என் தலைமை யகத்திற்குப் புறப்படவிருக்கிறேன்! இது வரை உலகம் கண்டிரா மாபெரும் கொள்ளைத் திட்டம் ஒன்றின் இறுதிக்கட்ட ஏற்பாடுகளை அங்கே செய்து முடிக்கப் போகிறேன்!
போதும், நிறுத்து! இந்த ஸ்பைடருக்கு இணை யாருமில்லை!
போலி உருவங்களைச் சுற்றிப் படர்ந்தது ஸ்பைடரின் பசைவலை ஆனால்...
ஹா ஹாஹா ஹா
சிரிக்கின்றனவே! கொடியவனின் நோக்கம் என்ன?

பின்னல் கேட்ட குரல் திரும்ப வைததது ஸ்பைடரை...
விரும்பத்தகாத மானிடனே, நீ இப்போது பார்ப்பதுதான் உண்மையான ஈடு இணையற்ற மிஸ்டர் மாஸ்!
கொடியவனின் முகம் டெலி-விசன் திரையில் முழுக்க ஆக்கிரமித்திருந்தது...
நீ உயிர் வாழப்போவது இன்னும் ஒரு சில நிமிடங்கள் தான், ஸ்பைடர்! விரைவிலேயே நான், போட்டியற்ற குற்ற சாம்ராஜ்யத்தின் ஏகச் சக்கரவர்த்தியாய் பெரும் புகழோடும்செல்வாக்கோடும் ஆட்சி செலுத்த போகிறேன்!
திடீரென, அந்தக் கண்ட்ரோல் அறையில் 'புஸ்'யென்ற இரைச்சல் சத்தம்...
விடைபெறுகிறேன், ஸ்பைடர்!
நச்சு ...வாயு!
புஸ்ஸ்ஸ்ஸ்....

மூச்சுத் திணறலுடன் தொண்டையை இறுகப்பற்றிய ஸ்பைடர்...
நிலைகுலைந்து தரையில் சாய்ந்தா
ஆ—அஹஹ்!
வெளியே, ஆர்டினியும் பெல்ஹாமும் தவிப்புடன் காத்திருந்தனர்—
ஸ்பைடர் எதிரியின் கோட்டைக்குள் அசாத்தியத் துணிச்சலுடன் நுழைந்திருக்கிறார் ஆர்டினி-எனக்கு அது சரியாகப்படவில்லை...
அதைவிட சரியில்லாத சமாச்சாரம் வருகிறது பார் அங்கே...... போலீஸ் ஹெலிகாப்டர்!

ஸ்பைடரின் ஹெலிகாருடன் ஒட்டச் செய்திருந்த ரேடியோக் கதிர் கருவி அனுப்பிய சமிக்ஞையினைப் பெற்று பின்தொடர்ந்து வந்திருந்தனர் கில்மோரும் ட்ராஸ்க்கும்...
சரணடைந்துவிடு, ஆர்டினி! வீணாய் ஆபத்தைத் தேடிக் கொள்ளாதீர்கள்!
ஹெக், எப்படி இவர்களால் இங்கே நம்மைத் தேடிவர முடிந்தது?
இதோ நமது ஹெலி-காரில் சமிக்ஞைக் கருவி ஒன்று பொருத்தப் பட்டிருக்கிறது, ஆர்டினி!
எதிர்ப்பின்றி சரணடைந் தனர் இருவரும்...
ஓ.கே., உங்கள் பாஸ் ஸ்பைடர் எங்கே?
பாம் பீச் கொள்ளைக்காக அவரை நீங்கள் தேடுவதாயிருந்தால் தப்பான நபரைப் பிடிக்க வீணாய் அலைகிறீர்கள் என்றுதான் கூறவேண்டும்...

சும்மா சரடு விடாதே!
ஓ.கே., ஓ.கே... எங்கள் பாஸ் அதோ... அந்த எஃகுக் கூண்டுக்குள் இருக்கிறார்...!
ஊளஊளஊள!
அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கவே அந்த உலோகக்கூண்டு புதை சேற்றினுள் மெதுவாய் அமிழத் தொடங்கியது...
நீங்கள் தாமதித்துவிட்டீர்கள், அதிகாரிகளே! மிஸ்டர் மாஸ் ஸ்பைடருடனான நேரடி மோதலில் வென்றுவிட்டானெனத் தோன்றுகிறது!

அத்தியாயம் 3. குழந்தைகளின் நகரம்

கில்மோர் கூண்டின் கனத்த இரும்புக் கதவைத் திறந்து உள்ளே நோக்கினான். ஒருவகை நெடி நாசியில் புகுந்தது...
உன் யூகம் தவறு, ட்ராஸ்க்! உள்ளே சயனேடு வாயு நெடி!
ஆம் ஸ்பைடரே ஆனாலும் அதனைச் சுவாசித்து உயிர் வாழ முடியாது!
முகம் தரையில் அழுந்தியவாறு கண்ட்ரோல் அறையில் ஸ்பைடர் குப்புறக் கிடக்கக் கண்டனர்...
கடைசியாக இவனுக்கு கிடைத்த முடிவு இதுதானா...
உயிர் இருப்பதற்கான வாய்ப்பு ஒரு சதவீதம் கூடக் கிடையாது!

ஆனால் திடீரென .
அஹ்!
கண்ணீர் வடிக்காதீர்கள், தோழர்களே! இந்தக் குற்றவியல் சக்கரவர்த்தி இன்னும் மகுடம் அணிந்துதான் இருக்கிறான!
உளவாளிகள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்க, ஸ்பைடர் 'முகததை' மெதுவாய் உறித்தான்...
எப்படி? அந்த நச்சு வாயு?
எதற்காக இந்த ஸ்பைடர் தன் அழகிய முகத்தை ஒரு அருவருப்பான வாயு முகமூடியால் மறைத்திருக்கிறான் என்று நினைத்தீர்கள், முட்டாள்களே? கொஞ்சமும் வித்தியாசம் காட்டாத கச்சிதமாக பொருந்தும் இரண்டாவது தோல் இது...

நிறுத்துங்கள், இவனை!
உங்கள் உதவிக்கு நன்றி, காவலர்களே... இப்போது நான் என் கால் சகதியை கழுவ வேண்டியதிருக் கிறது, வருகிறேன்!
ஓடிவாருங்கள், ஆர்டினி, பெல் ஹாம்! இந்த யூனிபாரம் அணிந்த பபூன்களைவிட முக்கியமான எதிரி ஒருவனை நாம் சந்திக்க வேண்டிய திருக்கிறது!
ஸ்பைடர், நீங்கள் நிகரற்றவர்!


ஹெலி-கார் மேலே கிளம்பியது...
அந்த நாசகாரன் மிஸ்டர் மாஸ் நிலத்தடி துளை வாகனம் மூலம் கிள்ம்பிப் போய்விட்டான்... ஏதோ ஒரு பெரும் கொள்ளைத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தப் போவதாகக் கூறிச் சென்றிருக்கிறான்!

ஆயினும் அவன் திட்டத்தை நான் முறியடிப்பேன்! நேரே வடதிசையில் செலுத்து ஆர்டினி!
சனியன் பிடித்த வலை! திரும்பவும் தப்பிவிட்டான் தலைமையகத்திற்கு விளக்கம் கூறியாக வேண்டுமே!


அன்று மாலை, உளவாளிகள் இருவரும் மியாமி விமான நிலையத்தில் விமானம் ஒன்றில் ஏறிப் பயணமாயினர்...
12
பிளைட் இரண்டு-பூஜ்யம் . நியூயார்க் நகர் கிளம்புகிறது...!
தலைவர் நமது விளக்கத்தை கொஞ்சம்கூட ஏற்றுக் கொள்ளமாட்டார்...

மறுநாள் காலை, பலமாடிக் கட்டிடம் ஒன்றில் அமைந்த F.B.I. தலைமையகப் பகுதியினுள் நுழைந்தனர்...
ஸ்பைடர் எங்கு செல்கிறான் என்பதுகூட நமக்குத் தெரியாது...
ஆம்... அத்தோடு, அந்த பாம்பீச் கொள்ளைக்கு உண்மையில் இவன் தான் காரணமானவனா என்பதும் தெரியாது!

ஹ... ஹலோ, சீ:ப்!
பிரமாதம், பையன்களா! ஸ்பைடரை சவமாகக் கைப்பற்றி விட்டீர்கள் போலிருக்கிறதே?
வந்து .. இல்லை... ஸார்...
போதும்... விளக்கம் தேவையில்லை! அவன் சாகவில்லை... அகப்பட்டவனை திரும்பவும் தப்பவிட்டிருக்கிறீர்கள்! என் தனி அறைகது வாருங்கள்... நடந்தவற்றைக் கூறுங்கள்...
தலைவர் அறைக்கதவைத் திறக்க...
ஸா,ஸார் உள்ளே!


உளவு நிறுவனம் F.B.I.யின் பிரத்யேகத் தலைமையகத்தின் உயர் பொறுப்பாளரின் ஆசனத்தில் புன்னகை முகத்துடன் அமர்ந்திருந்தான் தேடப்பட்டுவரும் மிகப்பெரும் குற்றவாளியான ஸ்பைடர்!
குட்மார்னிங், கனவான்களே! நீண்டநாள் எதிரியான உங்களை ஏமாற்றி விட்டேன் என்று வீண் பழிசுமத்திவிடாதீர்கள்! இப்போது உங்களுக்குத் தொண்டு செய்ய வந்திருக்கிறான் இந்த ஸ்பைடர்!

மசமசவென்று நிற்காமல் ஓடிப் போய் பிடியுங்கள் அவனை!
அவன் ஏதோ சொல்வதற்காக இங்கே வந்திருக்கிறானென்று தோன்றுகிறது...
உன் மூளையில் மட்டும் கொஞ்சம் புத்திசாலித்தனம் ஒட்டிக் கொண்டிருப்பது தெரிகிறது! நான் உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கவே இங்கு வந்திருக்கிறேன்...

திய மாஸ் என்னும் பெருச் சாளி, வரலாறு கண்டிரா பெரும் கொள்ளை ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருக் கிறான்... அவன் தேர்ந்தெடுத் திருக்கும் இடம் நியூயார்க் என்று நம்புகிறேன்!
நான் எனது அற்புத ஆற்றல்களை அந்தக் கொடிய ராஸ்கலின்மீது பிரயோகிக்கப்போகிறேன். தனித்து செயல்பட விரும்புவதால் பெரு மதிப்பிற்குரிய காவலர்களாகிய உங்களது உதவி வேண்டாமென-
போதும் நிறுத்து! பிடியுங்கள் இவனை!
முட்டாள்களே! அந்த மாஸ் என்னும் திருடன் உங்களைப் போல் அறிவிலி அல்ல! எனவே எனது எச்சரிக் கையினைப் புரிந்து கொள்வீர்களென நினைக்கிறேன்!
உங்கள் உத்தரவு எதுவானாலும் அதனை...


பாய்ந்து பற்ற முனைந்த உளவாளிகளை ஏமாறச் செய்துவிட்டு வெளியே தாவினான் ஸ்பைடர்...
இந்த ஸ்பைடரைத் தப்பிக்க விட்டதை எண்ணி பின்னர் சந்தோஷப்படுவீர்கள்... மிஸ்டர் மாஸுக்கும் நியூயார்க்குக்குமிடையே தனித்து நின்று நிகழப் போகும் விபரீதத்தைத் தடுக்கப போகிறவன் இவன் ஒருவன்தான்!


வலைப்பாலம் ஏற்படுத்தி ஹெலி-காருக்குச் சென்றான் ஸ்பைடர்...
ஹெலி-கார் இங்குதான் அருகில் பறந்து கொண்டிருந்ததோ...
மிஸ்டர் மாஸ் எனப் படும் அந்த நபர் அவ்வளவு பெரிய கில்லாடியா?


நகர போலீஸை உஷார்ப்படுத்த வேண்டும், ஸார் .. பாம் பீச கொள்ளையை நடத்தியவன் நிச்சயம லேசுப்பட்டவனாய் இருக்க முடியாது...!
பேச்சை நிறுத்து, கில்மோர்! போலீஸ் பட்டாளத்தை உஷார்ப் படுத்தத்தான் போகிறேன்... ஸ்பைடரை வேட்டை யாடுவதற்கு!


ஆனால் ஏற்கனவே விபரீதங்கள் வேர்விட ஆரம்பித்துவிட்டன... அமெரிக்காவின் மாபெரும் நகரின் போலீஸ் கண்ட்ரோல் அறையில்...
ஜானி, எப்படி என் காகித அம்பு ஜோரா இருக்குதில்ல?!
இதென்ன பைத்தியக்கார ஆஸ்பத்திரியா...?
நா...நான் மம்மிகிட்ட போகணும்!
பெப்பப்பே!

திறமையான இரண்டு காவலர்கள் கண்ட்ரோல் பலகையின் எதிரே பள்ளிச் சிறுவர்கள் போன்று அடித்துப் பிடித்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு தலைவரின் கண்கள் விரிந்தன.
இப்போ என் முறை!
இல்லை நான்தான் அமுக்குவேன்!
நிறுத்துங்கள் விளையாட்டை... இதென்ன சிறு பிள்ளைத்தனம்?
அறையின் பக்கவாட்டிலிருந்து 'புஸ்' சென்ற மெலிதான ஒலி வருவதை முதலில் கேட்டவன் கில்மோர்தான்...
அங்கே... மேலே... ஒரு வகையான வாயு வருவதைப் பார்!
ஹெக்... இவர்களை சிறு பிள்ளைகளாய் நடக்க வைப்பது அதன் வேலைதானோ?
கவலையுடன் பெருமூச் செறிந்தான் பாப்...
தொடர்ந்தாற் போல் பத்து தடவை செய்வேன்...பந்தயம் கட்டுகிறாயா?
ஸ்பைடர் கூறியது உண்மையாயிருந்து அந்த மாஸ் என்பவனது கொள்ளை திட்டத்தின் ஒரு சூழ்ச்சியாகவும் இது இருக்குமானால்...அப்பப்பா...
ஹி, ஹி!

பின்னர்...
ஓ, கூடாது... வாயு என் நாசியினுள்ளும் புகுகிறது! அ...அஹ்...இது நியூயார்க் முழுக்க நடக்கும் சம்பவமானல் பெரிய விபரீதம் இதைத் தவிர்த்து வேறில்லை...!
மறுகணம், திறமைமிக்க உளவாளிகளான கில்மோர், ட்ராஸ்க் இருவரிடமும் அந்தக் குழந்தைத்தனம் குடிபுகுந்தது...
ஜிக்கு மங்கு... ஜிக்கு மங்கு... சின்னபப்பா... ஹா,ஹா!
ஆச்சரியமான முறையில் வெறிச்சோடிக் கிடந்த நியூயார்க் சாலைகளின்மீது பறந்து வந்த ஹெலிகார் போலீஸ் வயர்லெஸ் செய்தி கேட்டு தாழ்வாய் வந்தது...
POLICE
POLICE
பையன்களா...பெண்களா . விளையாடப் போகலாம் நீங்கள்... ...இது உத்தரவு... ஹி,ஹி,ஹி . !
ஸ்பைடர், அந்த ரோந்துக்கார் ரேடியோவில் ஒலித்த குரல் கில்மோரின் குரல் போன்றிருக்கிறதே' இங்கு ஏதோ விபரீதம் நடக்கிறது!
நீ சொல்வது சரிதான், ஆர்டினி! ஹெலி-காரை கீழே இறக்கு...


கமான், மைக் . கடைத் தெருவுக்குப் போய் தலைவருக்கு ஒரு பம்பரக் கட்டை வாங்கி வரலாம்!
ஓ…யெஸ்.
ஆர்டினி, பொறு! வெளிக் காற்றுப் புகாத இந்த ஹெலி-காரை விட்டு வெளியே செல்லாதே!
POLICE
கையிலிருந்த மாத்திரை டப்பா ஒன்றைக் காட்டிய ஸ்பைடர்...
மாஸின் தலைமையகத்தில் இருந்த போது நான் இந்த டப்பாவை அங்கே எடுத்தேன்! குழந்தைத்தன தடுப்பு மாத்திரை என்ற லேபிள் இருக்கிறது இதில்! அர்த்தம் புரிகிறதா உங்களுக்கு?
மாஸ் நியூயார்க் நகரையே குழந்தைகள் உலகமாக மாற்றிவிட்டான்! பிரத்யேக வாயுவை பரவச் செய்து போலீஸையும் மக்களையும் சாதுக்குழந்தைகளாக்கியிருக்கிறான்... அதேசமயம் தன் குண்டர்களுக்கு இம்மாத்திரையின் எதிர்ப்புசக்தி தந்துவிடுவான்... விரைவில் அந்தப் பட்டாளத்தை அனுப்பி நகரையே சூறையாடச் செய்வான்!

பயங்கரமான திட்டம், ஸ்பைடர்!
புரபஸர், வெளியே பார்... இந்த வேடிக்கையை!
டக்...டக்...டக்! நகரிலேயே நான்தான் வேகமாய் போகிற குதிரை!
BILKAY'S

நகரை மேலும் சுற்றிவந்து, வாயுவின் பாதிப்பு எந்த அளவு இருக்கிறதெனப் பார்ப்போம்...
ரோஸி, ரோஸி! ஸ்கூல் சீக்கிரம் முடிந்துவிட்டது இன்றைக்கு!
பூங்காவுக்கு விளையாடப் போவோமா?

ஹெலி-கார் வியாபாரப் பகுதி ஒன்றின் பக்கமாக வந்தபோது லேவாதேவி தொழில் நடத்தும் சிலர் பாண்டி விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர்...
நீ தப்பாட்டம் ஆடுகிறாய், ஹோமர்!
ஊ:...ஊ! நானும் விளையாட்டுக்கு வருவேன்!
அந்த மாஸ் தன் கொள்ளைத் திட்டத்தில் வேடிக்கை அம்சம் நிறையச் சேர்த்திருக்கிறான்!
அங்கே ராணுவ முகாம் ஒன்று தெரிகிறது, ஸ்பைடர்... அருகில் போய்ப் பார்ப்போம்!
போதும் உங்கள் பொறுப்பற்றதனம்! இது வேடிக்கைச் சமாச்சாரமல்ல! எந்த நிமிடமும் என் பேராசைமிக்க எதிரி தன் குண்டர் படையை இந்நகரின்மீது கட்டவிழ்த்து விடக்கூடும்:.. அப்போது தடுத்து நிறுத்தக்கூடியவர் யார்?

வாயுவின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த ராணுவ வீரர்கள் சிப்பாய் விளையாட்டு விளையாடினர்...
டுமீல், டுமீல்! நீ செத்து விட்டாய்!
இல்லை, கிடையாது! உன் குறி தவறி விட்டது!
இதற்கு மேலும் மாஸைப் பற்றிக்கூற வேண்டுமா, ஆர்டினி?


கையிலிருந்த மாத்திரைகளை தன் சகாக்களுக்குக் கொடுத்தான் ஸ்பைடர்...
ஹே, ஸ்பைடர்.. இங்கே பாருங்கள்!
ஆளுக்கு ஒன்று எடுத்து வாயில் போட்டுக்கொள்ளுங்கள்! நம்மையும் அந்த வாயு ஆட்டிப்படைக்க அனுமதிக்கக்கூடாது!


கீழே வாகனம் ஒன்று ஆபத்துமிக்க வாயுவை காற்றில் கலக்கவிட்டவாறு ஊர்ந்து வந்து கொண்டிருந்தது...
கொடியவன் மாஸின் வாயு டாங்க் வாகனங்களில் ஒன்றுதான் அது!
திறமைமிக்க நமது எதிரிக்கு, திட்டத்தை தோல்வியடையச் செய்ய ஸ்பைடர் ஒருவன் இருக்கிறானெனக் காட்டு வோம் இப்போது!


கேடு விளைவிக்கும் பணியை வெற்றிகர மாய்ச் செய்துவரும், நாய்ப் பசங்களா... இதோ உங்களுக்கு நான் தருகிறேன் வெகுமதி!
எ—எதிரே...இருப் பது...இருக்காது... ஆ-ஆனால்...அது ஸ்பைடர்தான்!


கருப்பு உருவத்தைக் கண்டு கலவரமடைந்தனர்...
ஸ்பைடர்தான் இறந்து விட்டானே! சயனைடு வாயு வால் கொல்லப்பட்டதாக பாஸ் சொன்னாரே.....
அப்படியா? ஒருவேளை தவறு நேர்ந்திருக்கலாம்... தலைவருக்கு ரேடியோத் தகவல் கொடு!
டாங்கர் நம்பர் மூன்று... நிலையத் திற்கு செய்தி... ஸ்பைடர் இன்னும் உயிரு டன் இருக்கிறான்! திரும்ப வும் கூறுகிறேன், ஸ்பைடர் உயிரோடிருக்கிறான்!
ஒரு தீக்குண்டு போதும்...
முன்னூறு மைலுக்கு அப்பால் தன் தூர இயக்கு டெலி-ரேடியோ ஸ்கானர் திரையின் முன் வீற்றிருந்தான் மாஸ் ..
பாஸ், ஸ்பைடர் உயிரோடுதான்... ஆஆஆ!
முட்டாளே! தவறாய்ச் சொல்கிறாய் நீ!

ஸ்பைடர் திரையில் தெரியக்கண்ட மாஸின் கோபவெறி உச்ச நிலையை அடைந்தது...
சண்டாளா! உன்னை அப்போதே ஒழித்துக்கட்டத் தவறி விட்டேனா! இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய குற்றத் தொழிலை நிறைவேற்றவிருக்கும் வேளையில் இவனால் அது கெட்டுவிட அனுமதியேன்!
அமெரிக்காவின் செல்வச் சிறப்பு மிக்க நகரான நியூயார்க்கின் அனைத்து வகைச் சொத்துகளும் மிஸ்டர் மாஸின் உரிமையாகப் போகும்வேளை. . தனது கடைசி உத்தரவைப்பிறப்பித்தான் அவன்..
வாகனங்களை அனுப்பு! எல்லாப் பிரிவும் நியூயார்க் நகரினுள் நுழைந்து தத்தம் கொள்ளை இலககை நோக்கி முன்னேறட்டும்!
யூனிட் எண். ஒன்று... புறப்படவும்!
யூனிட் எண். இரண்டு.. கிளம்பலாம்!


வாகனங்கள் பாதுகாப்பற்ற அந்த நகரை முற்றுகையிடலாயின...
யூனிட் ஒன்றின் செய்தி ...பிரிட்ஜ் தெருவை நோக்கிச் செல்கிறோம்!
யூனிட் இரண்டிலிருந்து செய்தி ...பார்க் அவென்யூவிலிருக்கும் நேஷனல் வங்கி நோக்கி முன்னேறுகிறோம்!
Stacks

சாலைகளில் காணப்பட்ட ஒரு சில போலீஸாரும் கொள்ளையிட வந்த கூட்டத்தை கண்டுகொள்ளவேயில்லை...
ஒன்-ஏ-பென்னி... டு-ஏ-பென்னி...
ஹா, ஹா! நர்ஸரிப் பாட்டு படிக்குது குழந்தைகள்! நம்மைத் தடுத்து நிறுத்த யாரு மில்லை இங்கே!

கட்டிடக் கூரைகளின் மேலாக ஹெலிகாரைச் செலுத்திவந்து கொண் டிருந்த ஸ்பைடர் கீழே வாகனங்கள் பல வரிசையாய் வரக்கண்டு...
இதோ வந்துவிட்டது மாஸின் கொள்ளைப்பட்டாளம்! ஆனால் இந்த ஸ்பைடர் இருப்பதைப் புரிந் திருக்கமாட்டார்கள்! பிரிட்ஜ் தெரு வுக்கு கொண்டுபோ, ஆர்டினி...
இத்தனை பெரிய பட்டாளத்தினை எதிர்ப்பது சுலப மல்ல, பாஸ்...
பயந்தாங்கொள்ளிப் பசங்களா! ஹெலி- காரை பார்க் அவென்யூவிலிருக்கும் நேஷனல் வங்கிக்கு கொண்டுபோங்கள் நான் அங்கு வந்து சேரும்வரை அங்கே காவலிருங்கள்!
பாஸ், உத்தரவுப்படி நடப்போம், ஆர்டினி! மாஸின் கூலிப்பட்டாளத் தைத் தடுக்கக்கூடிய நபர் ஒருவர் உண்டென்றால் அது ஸ்பைடர் மட்டுமே!

நீ சரியாகச் சொன்னாய், பெலஹாம்! நான் ஒருவனாகவே நியூயார்க்கை காப்பாற்றுவேன்
ஆச்சரியப்படும்படியான வேகத்தில் தெருவின் குறுக்கே முன்னும் பின்னுமாய் விரைந்து வலை பின்னினான்...
தெருவின் குறுக்கே தடை ஏற்படுத்த வேண்டும்-அதற்கு இந்த வலைப் பின்னல்தான் பொருத்தம்...
ஐந்து நிமிடங்களுக்குப் பின்...
இலக்கை நெருங்கிவிட்டோம் நாம்!
ஹே... அது என்ன எதிரே...?

சிலந்தி வலை!
அடேங்கப்பா! இவ்வளவு பெரிதாகவா?!
அந்தப் பிரம்மாண்டமான வலைப் பின்னலின் உயரே நின்ற ஸ்பைடர் தன் எதிரிகளுக்கு அறைகூவல் விட்டான்...
ஹே, நம் பாஸ் இந்த ஸ்பைடரை புளோரிடாவில் தீர்த்துக்கட்ட வில்லை போலும்!
பொடிப் பசங்களா! இது சாதாரண சிலந்தி வலை அல்ல... இந்த ஸ்பைடர் உருவாக்கிய பிரத்யேக வலை!
ஓ, அதனாலென்ன? வண்டியை முழு வேகத்தில் கிளப்பு!

இந்த சாதாரண சிலந்தி வலையை ஊடுருவிச் செல்வதா சிரமம் கீழே விழ வை அந்த ஸ்பைடரை!
என் வலையில் சிக்க வரும் ஈக்களா, வாருங்கள்!
ஐம்பது மைல் வேகத்தில் வந்த வண்டியால் வலைப்பின்னலை முறித்துச் செல்ல முடியவில்லை.
ஹே, வலை கொஞ்சமும் அறுபடவில்லை... நம்மைச் சுற்றிப் பின்னிக்கொண்டு விட்டது...!
அஹ்ஹ்!


பின்தொடர்ந்து விரைந்துவந்த இரண்டாவது வண்டியும் முன்னதுடன் வந்து மோத கீழிறங்கி வந்தான் ஸ்பைடர்...
ஆஆஆ!
முட்டாள்களே! அசட்டுத் தைரியம் இந்த ஸ்பைடருடன் மோதுவதில் பிரயோஜனப் படாது!


அடுத்துவந்த இரண்டு வண்டிகளாலும்கூட நிலைமையை உணர்ந்து பிரேக் போட நேரமின்றிப் போகவே அவையும் முழுவேகத்தில் வந்து மோதின...
மெ-மெக்கி... பிரேக்!
இ... இதோ... ஊஹூம்... ஆஆஆ!
கிரீச்...!

விபத்தில் எவ்வித காயமும் அடையாத நான்கு தடியர்கள் இறங்கி ஓட முயன்றனர்...
வாருங்கள், ஓடுவோம்! நிச்சயமாக நம் கொள்ளை நோக்கம் நிறைவேறாது!
அவசரப்படாதீர்கள், அருமை நண்பர்களே!

கில்லாடிக் குற்றவாளியின் அற்புத ஆற்றல்களால் மிஸ்டர் மாஸின் கொள்ளைத் திட்டத்தில் ஒன்று தோல்வி கண்டது...
ஈஈஈ...
பிரிட்ஜ் தெரு செல்வந்தர்களுக்கு இனி ஆபத்தில்லை...
ஊஊஊ...


ஆனுல் நகரின் பிற வெறிச்சோடிய பகுதிகளில் மிஸ்டர் மாஸின் மற்றைய பிரிவுகள் தங்கள் கைவரிசைகளை காட்டவே செய்தன...
ஹெக், ஹெக், ஹெக்கே! போலீஸ் கண் எதிரே இதற்கு முன் நான் பொருள்களை களவாடிச் சென்றதில்லை ..
MASS402
ட்விங்கிள், ட்விங்கிள்... லிட்டில் ஸ்டார்..

பையன் வேடிக்கை பார்க்கட்டும்... நாம் அள்ளிச் செல்வோம்!
அவசரப்படாதீர்கள், அடிமடையர்களா!

கடையின் கண்ணாடித் தடுப்புக்குள் கைகளிலிருக்க ஸ்பைடரின் பசை வலை ஒட்டிக கொண்டது அவர்களை...
ஓ! ஸ்-ஸ்பைடர்!
ஈஈஈஈ!

அப்படியே நில்லுங்கள்: வாயுவின் வலிமை குறைந்ததும் சட்டம் உங்களைக் கவனித்துக் கொள்ளும்! ஹா, அங்கே இன்னும் சிலரைக் கவனிக்க வேண்டியதிருக்கிறது...

கலைப்பொருட்கள் நிறைந்த மியூஸியம் அந்த கூட்டத்தின் இலக்கு...
இந்தச் சித்திரம் கனமாயிருக்கிறது .. கூடுதல் விலை போகுமோ!
சரியான மரமண்டைதான் நீ... இந்தப் படம் ஐந்து லட்சம் டாலர் பெறும்!
உள்ளே...
ஹே, அந்தச் சிலையைப் பார்! இந்த மியூஸியத்தில் எப்படி...?
திடீரென அந்தச் 'சிலை' உயிர் பெற்றது!
செத்தொழியடா, திருட்டு ராஸ்கல்!
அஹ்ஹஹ்!

மியூஸியத்தின் பிரதான ஹாலின் குறுக்காகப் பறந்தான் ஸ்பைடர்...
தொலையுங்களடா, சோதாக் களா! இந்தக் குறறச சக்கரவர்த்திக்கு போட்டி யாகக் கிளம்ப எவனுமில்லை இவ்வுலகில்!
பையன்களா, பாருங்கள் அங்கே! ஸ்பைடர்... அஹ்ஹ!
ஸ்பைடரின் தாக்குதலில் உயிர்தப்பிய சிலர் ட்ரக் ஒன்றில் ஏறித் தப்ப முயன்றனர். ஆனால்...
முட்டாள்களே, இனி ஏது உங்களுக்குப் புகலிடம்!
டுமீல்!
ஈஈஈஈ!

மாஸின் கொள்ளைப்பிரிவு மூன்றினை முறியடித்தான் ஸ்பைடர்... அப்போது அவனது மணிக்கட்டில் இருந்த ரேடியோ புதுத் தாக்குதல் பற்றிய செய்தியை அறிவித்தது!
ஹெலி-காரிலிருந்து ஸ்பைடருக்கு அழைப் கொள்ளையர்கள் பார் அவென்யூ கிளை நே னல் வங்கிக்கு வந்து விட்டனர்!
சே! மாஸின் கூலிப் படை நகர் முழுக்கத் தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருக்கிறது... ஸ்பைடரே ஆனாலும்கூட ஒரே சமயத்தில் ஒரு டஜன் இடங்களில் எப்படி இருக்க முடியும்!
கொள்ளைப் பிரிவு எண் இரண்டு காவலற்ற வங்கிக் கிளைக்கு வந்து சேர்ந்தது. கொள்ளையர்கள் பார்வையில் வானில் மிதந்துகொண்டிருந்த ஹெலி-கார் பட்டுவிட்டது...
NATIONAL BANK
பெட்டகங்களைச் சுத்தமாகக் காலிசெய்து விடுங்கள்!
MASSAH
ஹே, அங்கே பார்... கவனிக்கிறார்கள் நம்மை!
ஏவலர்கள் என்றாலும் புத்திசாலிகள் தான், புரபஸர்!

அது ஸ்பைடரின் வாகனம்!
அப்படியா! மிஸ்டர் மாஸின் எந்திர இயக்கத்தடுபபு துப்பாக்கி கொணடு அதன் செயல்பாட்டை நிறுத்துவோம்!
ஊப்! நமது ஹெலி-காரின் ஜெட் அமைபபுகள் வேலே செய்ய வில்லே, ஆர்டினி!
ஹெலி-கார் தரையில் வந்து மோதியது...
அம்மா!
ஸ்பைடரின் செய்தி... நான வரும்வரை சம்பவம் நடக்கும் இடத்தில் இருக்கவும்!
ஹெக், பாஸ் கிண்டல் செய்கிருரா? நமக்கு இப்போது வேறு போக்கிடம் ஏது!

பாங்கின் உள்ளே...
ஏய், பொடியர்களா! தள்ளிப்போய் பந்து விளையாடுங்கள்!
ஒரு வண்டியை நிரப்பியாகி விட்டது!
சபாஷ்! அடுத்த வண்டிக்கு கொண்டு போகச் சொல்!
அதேசமயம் உள்ளே நுழைந்தான் ஸ்பைடர்...
ஏய், என்ன நீ...
பையா, நான்தான் சாய வைத்தேன் அவனை!
வெளியே போன நம்ம பசங்களை எங்கே காணோம்? நிறைய அள்ளிச் செல்ல வேண்டியதிருக்கிறதே!
உன் தோஸ்த்துக்கள் அலுத்துப் போய் படுத்துக் கிடக்கிறார்கள் தம்பி!

பாங்கின் பெட்டக வாசலை தன் வலைத் துப்பாக்கியால் சுட்டு பின்னலிட்டான் ஸ்பைடர் ..
ஹே, என்ன அது-?
வா, ஓடித் தப்புவோம்!
நீங்கள் அங்கேயேதான் இருக்க வேண்டும், மூளையற்றவர்களே!
வலையைப் பிய்த்தெறி... வெளியேறுவோம்!
ஹே, பசைபோல் ஒட்டுகிறது... கையை எடுக்க முடியவில்லை!

தெருவை நோக்கி ஓடிய ஸ்பைடர், தப்ப முயன்ற இரு வண்டிகளைச் சுட்டான்!
ஹே, பாஸ்! அபாரம், அபாரம்!
சந்தோஷப்பட்டது போதும், ஆர்டினி! இவை இரண்டுதான் கைவசமிருந்த கடைசித் தீக்குண்டுகள்!
கொள்ளையர்களின் வண்டிகளில் ஒன்று மட்டும் சேதமின்றித் தப்பியது...
வண்டியைக் கிளப்பு, ஜென்னி! ஒரு வண்டிக் கரன்ஸிகளையாவது மிஸ்டர் மாஸிடம் கொண்டு போய்ச் சேர்ப்போம்!
இந்த ஒரு வண்டியையாவது நாங்கள் கவனிக்கிறோம், ஸ்பைடர்! டயரைக் குறி பார்த்துச் சுடு!

வேண்டாம், ஆர்டினி! பொறு! வேறொரு யோசனை வைத்திருக் கிறேன்!
உங்களுக்கென்ன பைத்தியமா, பாஸ்? நாம் அதைச் சுடா விட்டால் டிரக் மாஸின் தலைமையகம் போய்ச் சேர்ந்துவிடும்!
அதில் சந்தேகம் இல்லை, ஆர்டினி! நான் சற்றுத் தந்திரமாய் காரிய மாற்றத் தீர்மானித்துள்ளேன்! மிஸ்டர் மாஸை முறியடிக்க உள்ள ஒரே வாய்ப்பு அவனது ரகசியத் தலைமையகத்தைக் கண்டுபிடித்து நேருக்குநேர் மோதுவதுதான்!

பாய்ந்தோடிச் சென்று டிரக்கின் பின்னால்
தொற்றிக்கொண்டான் குற்றச் சக்கரவர்த்தி...
அந்த வில்லன் எங்கே ஒளிந்திருந்தாலும் சரி இது கட்டாயம் என்னை அங்கே சேர்ப்பித்துவிடும்!


தலைமைக்குப் போட்டியிடும் இரண்டு பெரும் குற்றவாளிகள் நேருக்குநேர் மோத ஆயத்த நிலை உருவானது ..
அவனா இல்லை நானா... இரண்டிலொன்றை முடிவு செய்துவிடுவோம்!

அத்தியாயம் 4. இறுதிப் போர்

நியூயார்க்கை விட்டுக் கிளம்பிய இரண்டு மணி நேரத்திற்குப் பின், அந்த ட்ரக்கானது, ஒரு காலத்தில் வளம்மிக்க சுரங்க மையமாய் இருந்த அப்பலாச்சியன் மலைத் தொடரை வந்தடைந்தது...



குகைப் பாதை ஒன்றின் நுழை வாயில் நோக்கி விரைந்தது அந்த ட்ரக்...
கைவிடப்பட்ட நிலக்கரிச் சுரங்கத்தை தன் ரகசியத் தலைமையிடமாக மாற்றியி ருக்கிருன் அந்த நாசகாரன்!!
ஆனுல் எத்தனை பெரிய தந்திரக் காரனுனுலும சரி இந்த ஸ்பைட ரிடம் அவனது பாச்சா பலிக்காது! இனி ட்ரக்கினுள் சென்று மறைந்து கொள்வோம்...
கடைசியாக, மலையினுள் தொலைதூர மையத்தில் அமைந்த நவீன சரக்கு இறக்கு தளத்தை வந்தடைந்தது ட்ரக்...
ஓ.கே கொள்ளைப் பொருள்களை இறக்குவோம்!
நாம் அடித்துக் கொண்டு வந்திருக்கும் கரன்ஸியின் மதிப்பு எவ்வளவு இருக்கும் ஜென்னி?

அதேசமயம், கரன்ஸிக்குவியலிலிருந்து தலையைத் தூககினுன் ஸ்பைடர்'
நீ நினைப்பதைவிட அதிகமாகவே இருக்கும் தொப்பித் தலையா!
ஈஈஈஈ!
ஸ்பைடர்தன் வாயுத்துப்பாக்கியின் விசையை இழுத்தான்...
என்னை இங்கே கூட்டிவந்ததற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன முட்டாள்களே!... ஆனுல் இனி உங்கள் உதவி தேவைபபடாது'
லீ-லீவரை இழு... ஜென்னி - அஹ்ஹ!

வாயுவினுல் நிலைகுலைந்த தடியன் சரியும் போது லீவரைப் பற்றி இழுத்தவாறே விழுந்தான்...
அஹ்ஹ... இதிலிருந்து நீ தப்பவே முடியாது ஸ்பைடர்...
இழுக்கப்பட்ட லீவர் உறிஞ்சு பம்பு ஒன்றை இயககவே ...
ஊப்! இந்தப் பெருச்சாளிப் பயல் சரியான எந்திரப்பைத்தியமாய் இருப்பானே!

புனல் அமைப்பின் வாய்நோக்கி இழுக்கப்பட்டான் ஸ்பைடர்
அஹ்' மிஸ்டர் மாஸைச் சந்திக்க சிரமப்படத் தேவையில்லைதான்!
மறுமுனையில் யாரைக்காண வேண்டுமென்று ஸ்பைடர் விரும்பினானோ அதே மாஸ் நின்றிருந்தான்.
முதல் ட்ரக் சரக்கைக் கொண்டு வந்து விட்டது பாஸ்!
அத்தனையும் கரன்ஸி நோட்டுக்கள்..பிரமாதம்

பாவம் அந்த ஸ்பைடர்... என்னென்னவோ வேலைகளைக் காட்டி என் திட்டத்தை முறியடிக்க முயற்சித்தான்... ஒன்றும் நடக்கவில்லை! ஹி-ஹி அவன் முகத்தை இப்போது பார்க்க வேண்டும்!
உன் விருப்பம் பூர்த்தி செய்யப்படுகிறது, பெருச்சாளியே!
ஈ-ஈ-ஈ! ஸ்பைடர்!
வழியை விடுங்களடா மடையர்களா! இது எனக்கும் உங்கள் தலைவனுக்கும் உள்ள தனிப்பிரச்சனை!
உய்ங்க்!


தொடர்ந்தான் ஸ்பைடர்.
வில்லனே எங்கே போயிற்று உன் வீரம்? இந்த ஸ்பைடர் வஞ்சம் தீர்க்காமல் விடமாட டான்


அந்த நுழைவாயில் பெரிய ஒர்க்ஷாப் ஒன்றின் மேல் காலரிக்கு வழியாய் அமைந்திருந்தது...
ஓஹோ . பெரிய அளவில் நீ நடத்தவிருக்கும் குற்றத் தொழிலுக்கான ரகசிய தொழிற்சாலை இதுதானே!நீஒரு திறமை சாலிதான் சந்தேகமே இல்லை!

ஆனுல் எந்த ஒரு எந்திரமும் இந்த மாமேதை ஸ்பைடரை வெற்றி கொள்ள முடியாது என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள் முட்டாளே!
அதை இப்போது பார்ப்போம்!
எதிரி ஒரு கருவியைக் கையில் எடுத்தான்...
தொடர்ந்து என் திட்டங்களில் குறுக்கிட்டு வருகிருய் நீ! நம் குற்றஉலகம் மிகச் சிறியது!அதில் ஒரே சமயத்தில் நாம் இருவரும் தொழிலில் ஈடுபட முடியாது!
என்னுடைய கருத்தும் அதுதான்!


மிஸ்டர் மாஸ் சுவிட்சை அழுத்த மேலே எந்திரம் 'கட, புட'வென்ற சப்தத்துடன் இயக்கம் பெற்றது ..
அஹ்ஹ்?
நன்ருகச்சிரி, ஸ்பைடர்! ஆனுல் நீ இப்போது என் பிடியில .. ஹா ஹா ஹா!

மறுகணம்...
ஹா! என்ன இது? பூதாகரமான கைகள் என்னைப் பிடிக்கின்றனவே

மேலே தூக்கப்பட, ஸ்பைடர் அந்தரத்தில் போராடினான்...
ஆ ஆ! இவைகளின் இறுகலான பிடியிலிருந்து திமிர முடியவில்லையே!
இனி நீ சிரிக்கமாட்டாய் ஸ்பைடர்! நீயே சிரிககத் தக்க நபராகி விட்டாய் இப்போது!
இங்கே என்னிடம் நிறைய ஆயுதங்கள் உண்டு... தேவைப்பட்டால் அவற்றை நிறைந்த எண்ணிக்கையில் உற்பத்தி செய்யவும் முடியும் இதோ நிராயுதபாணியாக்கும் கருவி... அது உருக்குலைவுக் கருவி...
போதும் உன் பெருமை

ஒர்க்ஷாப்பின் மத்தியில் மேலே ஊசலாடிக் கொண்டிருந் தான் ஸ்பைடர்.
இப்போது கீழேபார் கொதிக்கும் எஃகுக் குழம்பு!
என் உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன் சிற்றெறும்பே! இனி உன் கதையை முடிப்போம்!
எஃகுக் கரங்களின் பிடி திடீரென விடுபட
ஆஆஆ!

ஆ-ப-த்-து! உருகிய எஃகு
குழம்பில் விழப போகிறேன்!
என உயிர் காப்பற்றப்பட...
இருக்கும் ஒரே வாய்ப்பு...


எனது
சிலந்திவலைத்
துப்பாக்கியே!

விழும் ஸ்பைடருக்கும் கொதி குழம்புகளுமிடையே சிலந்தி வலை ஒன்று உருவானது...
வலையே, தாங்கிக் கொள் என்னை!


பிழைத்தேன்!


எதிர்பாராத ஏமாற்றம் ஆத்திரமாய் வெடிக்க ஆவேசக் கத்தலுடன் பின்வாங்கிய மாஸ் பெட்டி போன்ற ஒரு கருவியின்மீது மோதினன்...
நாசமாய்ப் போகிறவன்! இவன் உயிரைப் பறிக்கவே முடியாதா?
இனி நீ புதிதாய் ஒரு கருவியைக் கண்டுபிடித்தாலும் கூட முடியாது நண்பரே!
க்ளிக்!


சடாரெனக் கைத்துப்பாக்கியை எடுத்து நீட்டிய வேளையில், அவன் மோதிய எந்திரம் ஓசையுடன் இயங்க ஆரம்பித்தது ...
இந்தத் துப்பாக்கியினுள் இருப்பதும் உருகுநிலை எஃகு குண்டுகள்தான்! அதன் வெப்பத்தில் நீ வெந்து மடிவாய்...
விர்ர்ர்ர்ர்ர்ர..

திடீரென, மாஸின் துப்பாக்கி பறித்து இழுக்கப்பட்டது... கண்ணாடியும் முகத்திலிருந்து கழன்றோடியது...
ஆஆ! என் நிராயுதபாணிக் கருவியை இயங்கச் செய்து விட்டேனே?
அந்த அபூர்வக் கண்டுபிடிப்பு எந்திரம் தன்னை உருவாக்கியவனிடமே தன் ஆற்றலை வெளிப்படுத்திக காட்டியது...
ஐயோ என் கண்ணாடி! அது இல்லாமல் என்னால் பார்க்க முடியாதே!
உன் பிசாசுத்தனமான சூட்சமக் கருவிகள் உன்னையே திண்டாட வைக்கின்றன முட்டாளே!

ஈஈஈ எங்கே நிற்கிறேன் நான்? இந்த சுவிட்சுகள் எல்லாம் எதற்குரியவை?
க்ளிக்
க்ளிக்
ஸ்பைடரின் பின்னால் இருந்த எந்திரம் ஓசையுடன் உயிர் பெற்றது...
குழம்பிப்போன முட்டாள், கேட்டினை விளைவிக்கும் தன் எந்திரங்கள் அனைத்தையும் இயங்க வைத்துவிட்டான்!

எல்லா எந்திரங்களும் பேரிரைச்சலுடன் வேலை செய்யலாயின...
உன் உற்பத்தி சாதனங்கள் முழு மூச்சாய் இயங்குகின்றன, மூடனே!
என்ன சத்தம் அது? என்ன நடக்கிறது?
கூடாது! நிறுத்து! நான் இன்னும் அதற்குத் தயாராகவில்லை! உலகை வெற்றி கொள்வதற்கான என் திட்டம் இன்னும் இறுதிக் கட்டத்திற்கு வரவில்லை!
நீ தயாராகாவிட்டால் என்ன .. உன் எந்திரங்கள் தயாராகிவிட்டன!


ஸ்பைடர் கனத்த கருவி ஒன்றைக் கையிலெடுத்தான்...
இந்த பிசாசுத்தனமான தொழிற்சாலையை நிர்மூல மாக்க இதுவே தருணம்! இந்தக் கருவிகளில் ஒன்றை எடுத்து அதன் செயல் பாட்டை ஆராய்வோம்...
இப்போது... இந்த லீவரை இழுத்துப் பார்ப்போம் !

மறுவிநாடி, எதிரே இருந்த பிரமமாண்டமான எந்திரம் அதிர்ந்து, சுருங்கி... மாயமாய் மறைந்து விட்டது!
ஹா! முதலில் உன் நிராயுதபாணிக கருவியைப பார்த்தேன! இப்போது உன் உருக்குலைவுக் கருவியின் செயல்திறனையும் நேரில் கண்டு விட்டேன, மாஸ்!
கூடாது! கூடாது! அந்தக் கருவியைப் பயன்படுத்தாதே! அதுவே அனைத்திலும் மகாப் பயங்கரமான ஆயுதம்! எந்த ஒரு பொருளையும் இல்லாமல் செய்துவிடும்!
அப்படியானால் இதுதான் பயனுள்ள கருவி...


குற்றத் தொழிலதிபதியே, தள்ளிப் போ! உன தந்திரங்களால் என்னை வீழ்த்தலாமென நினைத்திருந்தாய்... இப்போது எனது முறை!


உன்கருவியைப் பயன்படுத்தியே இந்த ஒர்க் ஷாப்பை காற்றோடு கலக்கச் செய்வேன்! உன் திறமைக்குச் சான்று கூறும் ஒரு சிறு துரும்பைக்கூட விட்டுவைக்க மாட்டேன்!

உலகை ஆளும் உன் பேரா சைக்கு ஒரு முற்றுப்புள்ளி! நீ இருக்கவேண்டிய இடம்- என் காலடிதான்!
அதே சமயம்..
இல்லே, மிஸ்டர் கில்மோர்-உங்களே நான் மிஸ்டர் மாஸின் தலைமை யகத்திற்குத்தான் அழைத்துச் செல்கிறேன்!
எங்களே ஏமாற்ற நினைத்தாயோ உனது கதி அதோகதிதான்!
ஒரு மணி நேரத்திற்கு முன்னர்தான் நியூயார்க் மக்களும், போலீஸும் விநோத வாயுவின் பிடியிலிருந்து விடுபட்டு தத்தம் இயல்பான நிலைக்கு வந்திருந்தனர்..
நமக்கு முன்பாக ஸ்பைடர் அங்குபோய்ச் சேர்ந்து விட்டதாகக் கூறுகிறாய்- அப்படித்தானே, ஆர்டினி?
ஆம்! நீங்களெல்லாம் வாயுவின் கட்டுப்பாட்டில் சிறுபிள்ளைகள் போல் கொட்டமடித்துக் கொண்டிருந்தபோதே கிளம்பிப் போய் விட்டார்!


ஸ்பைடரின் தாக்குதலால் குழம்பி நின்ற மிஸ்டர் மாஸின் கொள்ளைப் படையை சுற்றி வளைத்துப் பிடித்துவிட்டது போலீஸ்...
அதோ எதிரே தெரியும் மலைக்குள்தான் அவரது மறைவிடம்!


ஹெலிகாப்டரில் இருந்த மாஸின் ஆள் எதிரே கண்ட விநோதக் காட்சியால் விக்கித்துப் போனான்...
ஹே... நான் காண்பது கனவா... ஒன்றும் புரியவில்லையே?
அங்கே மலை இருந்ததே... ஒன்றையும் காணோமே!


மிஸ்டர் மாஸின் தலைமையகமும் ஒர்க் ஷாப்புமாய் விளங்கிய அந்த மலை ஒரு சில நிமிடங்களில் இருந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்திருந்தது...
விந்தையாயிருக்கிறதே! குன்றுகள் எப்படி மறைய முடியும்!
POLICE
C21
ஸ்பைடர் சம்பந்தப் பட்டால் எதுவும் நடக்கும்!


ஆர்டினியின் கூரிய பார்வை வெகு கீழே தெரிந்த இரண்டு உருவங்களை அடையாளம் கண்டு விட்டது...
அங்கே கீழே தெரிவது நமது ஸ்பைடர்தானே, புரபஸர்?
C21 POLICE

வேறு யாராக இருக்க முடியும், ஆர்டினி? மிஸ்டர் மாஸ் போன்ற ஒரு கூடுதல் மூளைக்காரனை தனி ஒரு மனிதனுக முறியடிக்க அவரைத் தவிர்த்து வேறு யாராலும் இயலாது!
நெடுநாள் எதிரியை நோக்கி ஓடினர்...
நிற்பது ஸ்பைடர்தான்... கீழே அவனது காலடியில் கிடப்பது யார்?
என்ன கொடுமை! என் தலைவர் மாஸ்தான்!
இவனு நியூயார்க் நகரையே ஒட்டு மொத்தமாய்க் கொள்ளை அடிக்க முற்பட்டவன்... உலகையே தன் வசமாக்க எண்ணியவன் .. இவன்தானு? நம்ப முடியவில்லையே...!

ஹா,ஹா! மிஸ்டர் மாஸின் அபூர்வக் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் அழித்து விட்டேன். சட்டத்திற்கு எந்தவித தடயமும் கிடைக்காது.. முழுக்க முழுக்க வெற்றி எனக்கே!
க்ராக்!
டந்திருக்கக் கூடிய சம்பவங்களை றிந்தவர்கள் மாஸின் ஆட்கள் ட்டுமே...
என்ன? நீ விடும் கதையையெல்லாம் நாங்கள் நம்புவோமென்று எதிர்பார்க்கிறாயா?
ஸ்பைடர் கடைசியாக முறித்துப் போட்டது மிஸ்டர் மாஸின் உருக்குலைவுக் கருவி! ரகசியத் தொழிற்சாலையையும் இங்கிருந்த மலையையும் அதைப் பயன்படுத்தி காற்றில் கலக்கச் செய்திருப்பான்!

இறங்காமல் ஹெலிகாப்டரிலேயே வீற்றிருந்த ஆர்டினியும், பெல்ஹா மும் சட்டத்தின் பிடியில் சிக்காமல இருக்க எளிய வழி கண்டனர்...
ஹே, ஸ்பைடர்! வேலை முடிந்துவிட்டது... கிளம்புவோம்!
இமைப் பொழுதில் வலை ஏணி பின்னி ஹெலி காப்டருக்குத் தாவினான் ஸ்பைடர்...
வருகிறேன், முட்டாள்களே!
பாப், தடுத்து நிறுத்து இவனை! தப்பிக்கப் பார்க்கிறான்!

வேண்டாம், ட்ராஸ்க், சுடாதே! செல்லட்டும் அவன்! நியூயார்க்கை பெரும் கொள்ளையிலிருந்து... இன்னும் சொல்லப் போனால் இந்த உலகையே பேராபத்திலிருந்து... காப்பாற்றியவன் அவன்!
பயங்கர எதிரி ஒருவனை போரிட்டு முறியடித்த வெற்றிக் களிப்பில விரைந்தான் ஸ்பைடர்!
உலகில் குற்றச் சக்கரவர்த்தி ஒருவனே... அந்த ஒருவன் இந்த ஸ்பைடர்தான்... என்றென்றும் இந்த ஸ்பைடர்தான்!
முற்றும்.

காணாமல் போன விஞ்ஞானி!

அத்தியாயம் 1 : இரஷ்யப் பயணம்

உலகை தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரும் பேராசையோடு அ. கொ. தீ. கழகம் கிங்கோபராவின் தலைமையில் மேற்கொண்ட சமூக விரோத சதித்திட்டத்தை வெற்றிகரமாக முறியடித்த பின்னர் லாரன்ஸும் டேவிட்டும் தங்களுடைய தலைமையகமான இலண்டனில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தபோது தந்தி ஒன்று வந்து சேர்ந்தது...






புத்தக அலமாரியிலிருந்து தடிமனான புத்தகம் ஒன்றை உருவி எடுததார் லாரன்ஸ்.
நீ போய்த் தூங்கு டேவிட்...! நான் என் மூளைக்கு வேலைகொடுக்கப்போகிறேன்!
இரண்டே மாதத்தில் இரஷ்யமொழி பேசலாம்
கம்ப்யூட்டருக்கு நிகரான கூரிய செயல்திறன் கொண்ட லாரன்ஸின் மூளை அந்தப்புத்தகத்திலிருந்த பாடங்களை வாங்கி அப்படியே பதிவு செய்து கொண்டது...
அடேயபபா... இரஷ்ய மொழிதான் எத்தனை இலகுவானது!
மறுவாரம் மாஸ்கோவில் நடந்த பாராட்டு விழாவில் விருதைப் பெற்றுக்கொண்ட பின்னர் லாரனஸ் இரஷ்யமொழியிலேயே நன்றிதெரிவித்ததோடு சிற்றுரை ஒன்றும் கூடநிகழ்த்தி மற்றவர்களை வியப்பில் ஆழ்த்தினார்...
இரஷ்ய நண்பர்களே... நானும் எனது தோழன் டேவிட்டும் நீங்கள் எங்களுககு அளித்திருக்கும் கௌரவத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாவோம்...


பின்னர் அதேநாளில் லாரன்ஸும் டேவிட்டும் அகன்று பரந்த இரஷ்யாவின் தலைமைபீடத்திலிருந்த ஆறுமுககிய பிரமுகர்களை சந்தித்தனர்.
லாரன்ஸ்... டேவிட்! நீங்களிருவரும் நூற்றுக்கு நூறு நம்பகமானவர்கள் என்பது எங்கள் கணிப்பு! எனவே, நாங்கள் இந்த ஆறுபேர்தவிர வேறுயாருமே அறிந்திராத சில இரகசியங்களை இப்போது உங்களுக்கு காட்டப்போகிறோம்.

அதைத்தொடர்ந்து, கிரம்ளின் மாளிகையின் கீழேஇருந்த பிரம்மாண்டமான நிலவறையினுள் லாரன்ஸும் டேவிட்டும் அழைத்துச் செல்லப்பட்டனர். உள்ளே, எங்குபார்த்தாலும் உச்ச செயல்திறன்கொண்ட மின்னணு அமைப்புக்கள் .!
எங்களுடைய அணுவியல் ஏவுகணை அமைப்பின் மைய கட்டுப்பாட்டுக் கேந்திரம் இது...

எளிமையான தோற்றத்திலிருந்த தாடிக்காரர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தார்கள்...
உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி காம்ரேட்ஸ்!
இவர்தான் புரபஸர் இவான் போலோவ்ஸ்கி! மூன்றாவது உலக மகாயுத்தம் தொடங்குமேயானால் ஒரு கோடி மெகாடன் வெடிதிறன் கொண்ட அமைப்பை இயக்கும் பட்டனை அழுத்தப்போவது இவரது விரல்தான்..!
அப்போதுதான் தாங்களை இரஷ்ய அரசு மாஸ்கோவுக்கு வரவழைத்ததின் உள்நோக்கம் லாரன்ஸுக்கு புரியத் தொடங்கியது...
லாரன்ஸ்...டேவிட்! புரபஸர் இவான் போலோவஸ்கி எங்களுடைய அரிய சொத்து. நீங்களிருவரும் சோவியத் யூனியனிலேயே தங்கி இவருக்கு ஆபத்து ஏதும் வந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்... இந்த முக்கிய பணியை திறமையாக நிர்வகிக்க உங்களால் மட்டுமே முடியும்!


லாரன்ஸ் நிதானமாக பதிலளித்தார்...
எங்கள் மீது நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு மிக்க நன்றி . எங்களுடைய சேவை மனித சமுதாயம் மொத்தத்துக்கும் பொதுவானது! குறிப பிட்ட ஒரு நாட்டின நலனுக்காக அதை வரம்பு கட்ட இயலாது என்பதை மிகத்தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறோம்...
கசப்பான செய்தியை பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டனர் இரஷ்யதலைவர்கள்...
நீங்கள் சொல்வதிலும் நியாயமிருக்கிறது! புரபஸரை காக்கும பொறுப்பை தொடர்ந்து எங்களுடைய படையினிடமே விட்டுவைப்பதைத் தவிர வேறுவழியில்லை!
அவர்களுடைய திறமையைப்பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன்...!
அன்றிரவு... லாரன்ஸ் டேவிட் இருவரையும் கௌரவிக்கும் கேளிக்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், வழக்கம்போல் சற்று காலாற நடந்துவிட்டு வர எண்ணிய புரபஸர் இவான் தன் மெய்காப்பாளர்களுடன் திறந்தவெளி முற்றத்தைநோக்கி நடந்தார்.


திடீரென்று, சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி ஒன்று சரமாரியாக குண்டுகளைக் கக்கியது ..
ஆ... அங்கே என்ன நடக்கிறது?


அதைத் தொடர்ந்து கரும் பூதங்கள் போல் தோற்றமளித்த சில உருவங்கள் சூழ்ந்திருந்த இருளிலிருந்து வெளியே வந்தன...
ம்... கைகளை தலைக்கு மேலே தூக்குங்கள் புரபஸர் இல்லையேல்... இவர்களுக்கு ஏற்பட்ட கதிதான் உங்களுக்கும்! ஜாககிரதை!

அடுத்த இரண்டாவது நிமிடம் புரபஸரை மதில் சுவருக்கு வெளியே கொண்டு வந்து சேர்த்த கயவர்கள் அவரையும் இழுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்...
... அடுத்த நிமிடத்தில் நாம் விமானத்தில் இருக்க வேண்டும்!

பனிச்சறுக்குக் கட்டைகள் பொருத்தப்பட்ட விமானம் ஒன்று உறைந்து கிடந்த நதியின் மத்தியில் தயார் நிலையில் காத்துக் கொண்டிருந்தது.
யாரங்கே ..?
வேகமாக ஓடுங்கள் .. நம்மைப் பார்த்து விட்டார்கள்!

அதைத்தொடர்ந்து அவர்களை நோக்கி சரமாரியாக சீறிப்பாய்ந்து வந்த தோட்டாக்களில் ஒன்று, ஒரு ஆசாமியை வீழ்த்தியது...
குண்டு பாய்ந்து கீழே சரிகிறான்...
அவனைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்க அவகாசமில்லை! நம்மைப்பற்றி அவன் வாயைத் திறக்கமாட்டான் உயிரோடிருந்தாலும் சரி செத்தாலும் சரி


சில விநாடிகளுக்குப் பின் அந்த விமானம் மேலெழும்பி பனிபோர்த்துக்கிடந்த வானில் மறைந்து விட்டது...

விருந்து மண்டபத்தில் நிலவிய அமைதியான சூழலைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தோடி வந்தான் ஒருவன்—
புரபஸரை- யா... யாரோ கடத்திக் கொண்டு போய விட்டார்கள்!
! எ..ன்..ன...

கெஞ்சும் விழிகளோடு சோவியத் தலைவர்கள் சட்டென்று லாரன்ஸ், டேவிட் இருந்த பக்கம் திரும்பினர்...
கவலைப்படாதீர்கள் அவரை நாங்கள் மீட்டுத்தருகிறோம்!
அவரை நீங்கள்தான் மீட்டுத்தர வேண்டும். சோவியத் ஏவுகணை அமைப்பு இரகசியங்களை அறிந்த ஒரே நபர்-புரபஸர் இவான் போலோவ்ஸ்கிதான்! அவரிடமுள்ள இரகசியங்கள் சமூக விரோதிகளிடம் போய்விடுமேயானால் விளைவு விபரீதமாக இருக்கும்

அத்தியாயம் 2: எதிரியின் கோட்டையில்!
கடத்தல் கும்பலில் காயமுற்று விழுந்து பிடி பட்ட நபரைச் சென்று பார்த்தனர் லாரன்ஸும் டேவிட்டும்...
அ கொ.தீ. கழக ஆசாமி தான்! புரபஸரை கடத்திச் சென்றவர்கள் அ.கோ.தீ. கழகத்தினர் என்பது தெளிவாகிறது.
உடனடியாக நான் ஓர் ஆபரேஷன் செய்யப போகிறேன் ...ஆசாமி பிழைத்துக்கொள்வான்
லாரன்ஸின் கம்ப்யூட்டர் மூளை மின்னல்வேகத்தில் ஒரு திட்டத்தை வடிவ மைத்தது...
இந்த நபர் நம்மை புரபஸர் இருக்குமிடத் துக்கு அழைத்துச் செல்லப் போகிறான்...
இதற்கிடையே, புரபஸரோடு பறந்து சென்ற விமானம் சைபீரியாவில் யூரல் மலைத்தொடருக்கும் அப்பால் பாழடைந்த கோட்டை ஒன்றின் அருகே உறைந்து கிடந்த ஆற்றின் மீது போய் இறங்கியது
263

பின்னர் அந்தக் கோட்டையின் நிலவறையிலிருந்த நவீன பரிசோதனைக் கூடத்தில்...
பிரமாதம் ! அவரை இந்தப் படுக்கையில் கிடத்தி நன்ருகப் பிணையுங்கள். அடுத்த கட்டத்தை ஆரம்பிப்போம்
சிவந்த கண்களும், நரைத்த முடியுமாக குரூர தோற்றம் கொண்ட ஒரு கிழட்டு உருவம் நெருங்கி வந்தது
டேப் ரிக்கார்டரை ஓட விடுங்கள்...
வேண்டாம்- விடு என்னை!

சில விநாடிகளுக்குப பின புரபஸர் போலோவஸகி சுயவுணர்விழுந்தார். டேப ரிககார்டர இயங்கிக கொணடிருநதது .
புரபஸர்...! இபபோது நீங்கள உங்கள குழந்தைப்பருவம் தொட்டு இன்று வரை நிகழ்நத உங்கள அனுபவங்களை முழுமையாக விரிவாக சொல்ல வேண்டும...
கிணற்றுக்குள்ளிருந்து வருவது போன்ற மெலிதான குரலில் புரபஸர் பேசலானார் .
என பெயர் இவான் பெட்ரோவிட்ச் போலேர்வ்ஸ்கி 1917ம் ஆண்டு மின்ஸ்ககில பிறந்தேன்...

சிலமணிநேர இடைவெளிக்குப் பின் விகார தோற்றம் கொண்ட அ.கொ.தீ. கழக தலைவனின் சிவந்த விழிகள் வெற்றிககளிப்பில் பளபளத்தன...
...சோவியத் ஏவுகணை அமைப்பு இவ்வாறாக வடிவமைக்கப் பட்டுள்ளது ..
இந்த தகவல்களை பயன் படுத்தி அ.கொ.தீ. மூன்றாம் உலக மகா யுத்தத்தை ஆரம்பித்து வைக்க இயலும்! பீதியும், குழப்பமும், தலைதூக்கும் . சந்தர்ப்பத்தைபயன் படுத்தி அ.கொ.தீ. உலகம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும்.
மனித சஞ்சாரமற்ற அந்தப் பிராந்தியத்தில் சதித் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான் கொடியவன் ஆல்பிரோ!

விவசாயி போல் தோற்றமளித்த ஓர் ஆசாமியைக் கொண்டு வந்து ஆல்பினோவின் முன்னால் நிறுத்தினார்கள்...
என் உத்தரவு எதுவானாலும் ஏற்றுநடக்க நீ தயார் அப்படித்தானே.!
நீங்கள் தருவதாக கூறும் அந்தப்பெரிய தொகையை பெற நான் எதையும் செய்யத்தயார்!
சுயவுணர்வின்றி படுத்துக்கிடந்த புரபஸரையும் அந்த விவசாயியையும் மீண்டும் ஒருமுறை ஒப்பிட்டு நோக்கினான் ஆல்பினோ...
இருவருக்குமிடையே உள்ள உருவ ஒற்றுமை வியக்க வைக்கிறது..நீங்களிருவரும் இரட்டையர்கள் என்று சொன்னால் யாரும் சுலபமாக நம்பிவிடுவார்கள்...!
ஆனால் தேர்ந்த இந்த புரபஸராக நான் ஆள் மாறாட்டம் செய்ய எப்படி இயலும்? நானொரு கை நாட்டுப் பேர்வழி!

அந்த கேள்விக்கு மறுமொழி யாக ஆணையிடும் தொனியில பேசலானுன் ஆல்பிரே...
என் கணகளுக்குள்ளே உற்றுப் பார் உன் உடல் மெள்ள தளர்கிறது... கணணிமைகள சோர்ந்துதளர்ந்துபோகின்றன
ஆம்! ஆம்
சில நிமிடங்களுக்குப் பின்.
ஹிப்னுட்டிஸ மயககத்தில் இருக்கிருன... இங்நிலேயில் ஆழ்ந்த விழிப்போடிருக்கும் இவனுடைய உள்ளுணர்வுக்கு நாம் தரும் தகவல்களே அப்படியே கிரகித்துக் கொண்டு விடும் ஆற்றல் உண்டு... டேப்பை சுழல விடுங்கள்!
கிணற்றுக்குள்ளிருந்து வருவது போன்ற மெலிதான குரலில் புரபஸர் பேசலானுர்...
என் பெயர் இவான் பெட்ரோவிட்ச் போலோவ்ஸ்கி 1917ம் ஆண்டு மின்ஸ்க்கில் பிறந்தேன்...


இதற்கிடையே, அங்கே மாஸ்கோவில் லாரன்ஸும் டேவிட்டும் குறுகிய வட்ட டி. வி. அமைப்பில், பிடிபட்ட அ.கொ.தீ. ஆசாமியை கூர்ந்து ஆராய்ந்து கொண்டிருந்தனர்...
இவனுடைய காயம் வேக மாக குணமாகி வருகிறது அழுத்தமானவன்-வாயைத் திறக்க மாட்டேனென்கிறான்...
இவன் பேச வேண்டிய அவ சியமேயில்லை டேவிட்... இவன் சுறுசுறுப்பானதொரு காரியவாதியாக செயல்பட டால் போதும் நமக்கு!
அதைத் தொடர்ந்து தன் திட் டம் என்ன என்பதைடேவிட்டின் காதில் இரகசியமாக கிசுகிசுத் தார் லாரன்ஸ்.
வேறோர் இடத்தில் சிறை வைக்க இந்த அ.கொ.தீ.கழக ஆசாமியை நாளை ஜீப் ஒன்றில் மாஸ்கோ வீதிகளின் வழியே அழைத்துச் செல்லச்சொல்லி யிருக்கிறேன்...
மறுநாள் லாரன்ஸ் குறிப்பிட்டவாறு அந்தக் கைதி திறந்த ஜீப் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டான...


விமான நிலையத்தின் சுற்று வேலியை தொட்டுக்கொண்டு சென்ற சாலை வழியே ஜீப் போய்க் கொண்டிருந்த போது அந்த 'அசம்பாவிதம்' நிகழ்ந்தது!
ஹா... பிரேக் கெட்டுப் போய் விட்டதே!
சுற்று வேலியில் போய் மோதிய ஜீப் இயக்கமிழந்து நின்றபோது வண்டியிலிருந்தோர் அனைவருமே தடுமாறி சரிந்தனர்..முதலில் சுதாரித்துக்கொண்டு விட்ட அந்த அ.கொ.தீ. கழக ஆசாமி உடனிருந்தோரை கராத்தே அடி கொடுத்து வீழ்த்தினான்.
ஊப்...ப்!


சுற்று வேலியின் மறுபுறம் சொல்லி வைத்
தாற்போல் தயார் நிலையில் நின்று கொண்
டிருந்தது ஒரு விமானம்...
அதிர்ஷ்டம் தொடர்ந்து என்பங்கில் இருக்குமே யானால் தகராறு பண்ணா மால் விமானம் கிளம்பி விடும்!


அதிர்ஷ்டம் தொடர்ந்து அவன் பங்கில்தான்
இருந்தது. சிலகணங்களுக்குப் பின் சீறிக்கொண்டு
மேலெழும்பியது அந்த விமானம்.
CCCP
ஏ...ய்!
நிறுத்து விமானத்தை கீழே இறக்கு டேய்!


விமானத்தின் பின்பகுதியிலிருந்த சிற்றறை ஒன்றில் பதுங்கிக் கிடந்த லாரன்ஸும் டேவிட்டும் தங்கள் யுக்தி பலித்துவிட்டதை எண்ணி புன்னகை பூத்தனர்...
நம் திட்டம் பலித்து விட்டது டேவிட்...!
புரபஸரை ஒளித்து வைத்திருக கும் இடத்துக்கு இவன் நேராக போய்ச் சேருவான் என்று நம்புவோமாக!


வெகு சீக்கிரம் தன் இலக்கை சமீபித்து விட்டது அந்த விமானம்...

விமானம் கீழே இறங்குவதை லாரன்ஸும் டேவிட்டும் தெரிந்து கொண்டுவிட்டனர்...
விமானம் தரையிறங்கப் போகிறது டேவிட்! சரியான இடத்துக்குத்தான வந்துசேர்ந்திருக்கிறோம் என்று நம்புகிறேன்!
விமானத்தை சீராக தரையிறக்கும் சாமர்த்தியம் பயலுக்கு இருந்தாலதான் பிழைத்தோம்!


ஆஆஆ!
CCCP
டேவிட் பயந்த படியே நிகழ்ந்து விட்டது... விமானத்தின் சிறகு, நீட்டிக் கொண்டிருந்த மரக்கிளை ஒன்றில் வலுவாக உராய்ந்தது...

விளைவு- விமானம் நிலைதடுமாறி, பக்கவாட்டில் சரிந்து அதே நிலையில் கீழே விழுந்து நொறுங்கியது...

அப்போது எழுந்த பெருத்த ஓசையைக் கேட்டு கட்டிடத்தினுள இருந்த ஆல்பிரேவும் அவனது சகாக்களும் விரைந்து வந்து சிக்கிக்கிடந்த தங்கள் ஆசாமியை மீட்டனர்...
அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு வந்து விட்டாயா...பலே- சரியான கில்லாடிதான் நீ புல்லோவ்
அவர்களிடம் நான் எதையுமே வெளியிட்டு விடவில்லை!

அப்போது- விமானத்தின் சிதைந்து கிடந்த வால்பகுதியருகே வேறு இரு உருவங்கள் உணர்விழந்த நிலையில் கிடப்பதை பார்த்துவிட்டுக் கத்தினான் ஒருவன்...
அதோ .. யாரோ இரண்டு பேர் கிடக்கிறார்கள்!
லாரன்ஸும்... டேவிட்டும்! புல்லோவ் தப்பி வர அவர்கள் தான் வகை செய்திருக்கக் கூடும். அவன் இவர்களை புரபஸர் சிறை வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு கூட்டிச செல்வான என்று கணித்திருப்பார்கள்!
குரோதத்தோடு பெரும் சிரிப்புச் சிரித்தான் ஆல்பினோ...
என்னிடம் சிக்கிக் கொள்ளும் எதிரிகளுக்கு தண்டனை கொடுக்க நூதனமான வழி முறை ஒன்றைவகுத்து வைத்திருக்கிறேன். நடைமுறையில் அதைப்பரீட்சித்துப் பார்க்க இவர்கள் அகப்பட்டார்கள் ஹீ... ஹீ...
துப்பறியும் சிங்கங்களை கோட்டையின் கீழே இருந்த நிலவறைக்கு தூக்கிச் சென்றார்கள்..

பின்னர் டேவிட் சுயவுணர்வு வரப் பெற்றபோது ஆல்பிஞே முரட்டுக் குரலில் எச்சரிக்கை விடுத்தான்...
டேவிட்! உறுதியான டங்க்ஸ்டன் கம்பியாலான வளையத்தில் பிணைக்கப்பட்டிருக்கிறது உன்னுடைய வலது கரம்
அதைத்தொடர்ந்து முரட்டுத்தனமாக தூக்கி நிறுத்தப்பட்டார் டேவிட்!
அங்கே உன் தோழனின் நிலை எத்தனை பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது என்பதை சற்று திரும்பிப்பார்...

திரும்பிப் பார்த்த டேவிட்டின் இதயம் ஒரு கணம் துடிக்க மறந்து விட்டது- அதிர்ச்சி யில்...!
ஸார்...!
ஆமாம்... உன் தோழனுடைய தலைவிதி இப்போது உன கையில் தானிருக்கிறது. கொஞ்சம இசகு பிசகாக நடந்து கொண்டாயோ தோழனின் கழுத்தை துண்டித்த கொலையாளி எனற அவப் பெயர் உன்னைச சாரும்

அதையடுத்து அ.கொ.தீ. கழக குண்டர்கள் கெட்டியான இனிப்புப்பாகை கொண்டு வந்து டேவிட்டின் கால்மீதுகொட்டினர்...
இதெல்லாம் என்ன விளையாட்டு என்று குழப்பமாக இருக்கிறதல்லவா... கொஞ்சம் பொறுமையாக இரு- நாங்கள் சொல்லாமலே புரிந்து கொண்டுவிடுவாய்!
அடுத்து
உங்கள் அவஸ்தையை பார்த்து இரசித்துக் கொண்டு நிற்க எனக்கு அவகாசமில்லை! உடனடியாக முடிக்க வேண்டிய வேறொருவேலை காத்துக்கொண்டிருக்கிறது சென்று வருகிறேன் தோழர்களே!
நிசப்தத்தில் சில நிமிடங்கள் கழிந்த பின்னர் சரசரவென்றதொரு விநோதமான ஓசை கேட்கத் தொடங்கியது.
ஆவ்! ராட்சஸ கடி எறும்புகள்!
ஐயையோ!


அங்கிருந்து புறப்பட்ட ஆல்பினோ நேராக போலி புரபஸரிடம் சென்றான்
ஹிப்னாட்டிஸ மயக்க நிலையிலிருந்து விடுபட்டு எழுந்துவா உனக்குத் தேவையான விளக்கவுரைகள் முழுவதுமாக கொடுக்கப்பட்டு விட்டது. இப்போதிலிருந்து நீ புரபஸர் போலோவ்ஸ்கியாக நடந்து கொள்கிறாய்! இந்த ஆள்மாறாட்டத்தை யாராலுமே கண்டுபிடிக்க முடியாது!
சுவாதீசமடைந்த விவசாயி மிரள விழித்தான்...
குட்..! புரபஸர் போலோவ்ஸ்கியாக உன்னால் இனி ஆள் மாறாட்டம் செய்ய முடியுமில்லையா?
எப்படி....? எப்படி நிகழ்ந்தது இந்த அற்புதம்?
ஆழ்ந்த நிலை ஹிப்னாட்டிஸ முறை நிகழ்த்திய விந்தை இது நண்பனே
விந்தை! புரபஸரின் வாழ்க்கைமுறை, வேலைத்திறன், சோவியத்யூனியனின் அணு ஏவுகணை பற்றிய இரகசியங்கள் அத்தனையும் எனக்கு தெரியும் இப்போது!


அப்போது ஆல்பிஞே திடீரென்று அங்கே லாரன்ஸ் டேவிட் இருவரின் கதிஎன்னவாகியிருக்கும் என்று எண்ணிப் பார்க்கலானுன்
விசித்திரமான தண்டனைதான்...! அதிகநேரம் அவர்களால் தாக்குப் பிடிக்க முடியாது!
அங்கே- ஆயிரக்கணக்கில் படையெடுத்து வந்த ராட்சஸ கடி எறும்புகளில் சில ஏற்கனவே டேவிட்டின் காலில் ஏறத் தொடங்கி விட்டிருந்தன ..
என் காலில் ஒட்டிக்கொண்டிருக்கும் இனிப்புப்பாகை சுவைத்துக் கொண்டிருக்கின்றன... அடுதது என் காலை இவை கடிக்கும். முடிநதவரை தாககுப் பிடித்துப் பார்க்கிறேன் சார்!
இன்னும் சில நிமிடங்களுக்கு தாக்குப்பிடிக்க முயற்சி செய்.. நானொரு காரியம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். அது மட்டும் பலித்து விட்டால நாம் தப்பித்துக் கொணடு விடலாம்!


கூர்மையான வெட்டுத் தகட்டின் கீழே கழுத்து இருந்த அந்த அபாயகரமான நிலையில், கட்டப்பட்டிருந்த கைகளை லாவகமாய் இயக்கிக் கொண்டிருந்தார் லாரன்ஸ்!
எப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையையும் சமாளிக்கும் தயார் நிலையில் வந்தது நல்லதாகப் போயிற்று
லாரன்ஸின் இடது கை பெருவிரல் நகத்தின் மீது போலிநகம் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. அதனுள் ஒளிந்து கிடந்த சிறு-ஆனால் மிகவும் கூர்மையான கத்தி ஒன்று வெளியே நீண்டது.
கைகளை விடுவித்துக
கொண்ட லாரன்ஸ் தன
கழுத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த பலகையை மேலே தள்ளினார்.
தேவையில்லை டேவிட்

லாரன்ஸின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்த அதே கணத்தில் கடி எறும்புகள் டேவிட்டின காலை பயங்கரமாகக் கடிக்கத் தொடங்கின. மரணவேதனை மின்சாரம்போல் உடல் முழுவதும் பாயவே அதை தாங்கிக்கொள்ள முடியாமல் டேவிட் துள்ளினார். வெட்டுத் தகடு மின்னல் வேகத்தில் கீழே இறங்கியது
யீ யீ ஈ ஈ...!
இது ஓரிரு வினாடிகளுக்கு முன் சம்பவித்திருந்தால் ? மயிரிழையில் தப்பி விட்டேன்.
டேவிட்டின் அசுர பலத்தைப்பற்றி அ கொ.தீ. ஆசாமிகளுக்கு தெரியாது... ஒரே உதறலில் வலுவான டங்க்ஸ்டன் வளையத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட டேவிட் காலில் ஊர்ந்துகொண்டிருந்த எறும்புகளை மின்னல் வேகத்தில் உதறித்தள்ளினார்.
சைத்தான்களே... தொலைந்து போங்கள்.
ஓடிவா டேவிட்.. நாம் இங்கிருந்து விரைந்து வெளியேறிவிடுவது நல்லது!

ஆனால்.. ஏற்கனவே அது காலம் கடந்த செயலாகி விட்டது-
இப்போதைக்கு சரணடைந்து விடுவதுதான் உசிதம் என்று தோன்றுகிறது...டேவிட்!
தூக்கு கையை...!

விஷயம் ஆல்பிரேடை எட்டியதும் கோபத்தில கொதித்துப போனான்..
என்ன... நான் வடிவமைத்த மரண அமைபபிலிருந்து தபபித்துக் கொண்டு விட்டார்களா...?நம்பவே முடியவில்லையே' போகட்டும்... இன்னொரு அமைப்பை இபபோதே வடிவமைக்கிறேன் அதிலிருந்து அவாகள் தபபித்துக கொள்ளவே
திடீரென்று ஏதோ நினைவுககு வர குரூரமாகச சிரித்தான ஆல்பிரே
சே...நானொரு வடிகட்டின முட்டாள்...இததனை நேர மும் எப்படி இது என நினை வுககு வராமறபோனது?

புரபஸரை மீட்டுச செல்லததானே லாரனஸும டேவிட்டும் இங்கே வநதிருககிறார்கள் அவர்கள் தாராளமாக புரபஸரை மீட்டுசசெல்லட்டும! நீ புரபஸராக அவர்களோடு மாஸ்கோவுக்குப போ   போய்ச்சேர்ந்ததும் கிடைககும் முதல சந்தர்பபத்தில மூனறாம் உலகமகா யுத்ததததை தூணடும் வகையில அங்குள்ள பட்டனை அழுத்த வேணடும நீ!
அதைத தொடந்து
உஙகளுடைய நணபர் புரபஸர் போலோவஸ்கியோடு சேர்நது கொளளுஙகள... போஙகள உளளே!

விஞ்ஞானம்- அதன் பரிமாணங்கள் .. எல்லாமே ரொம்பவும்புதிரானவிந்தைகள்தான் உதாரணத் திற்கு- பிளாட்டினத்தின் நீளும் தன்மையை விட இரிடியத்தின் நீளும்தன்மை கூடுதலானது என்ற உணமை பிரமிககவைக்கும் புதிர்தான் இல்லையா...புரபஸர்!
ஆ...ஆமாம்- உண்மைதான்! பிரமிககவைக்கக் கூடிய உணமைதான் அது!

அப்போது டேவிட்டின் உற்சாக ஆரவாரக்குரல் கேட்டது ..
இந்த ஜன்னல் கம்பிகளை சும்மாவேணும் அசைத்துப்பார்த்தேன் - கையோடு வந்து விட்டன!
பிரமாதம்... டேவிட்! நாம் நுழைந்து வெளி யேறத் தேவையான இடைவெளியை ஏற்படுத்து ..!


தடுமாறி விழுந்த லாரன்ஸும் டேவிட்டும் சமாளித்துக் கொண்டு எழுந்தபோது எதிரே புரபஸர் போலோங்ஸ்கியை கண்டனர்...
என்னை மீட்டுச் செல்லவே நீங்கள் வந்திருப்பதாக கேள்விப்பட்டேன். என் பொருட்டு நீங்கள் அவதியுறுவது என்னை பெரிதும் சஞ்சலப்படுத்துகிறது
அவசியமேயில்லை புரபஸர்... இதெல்லாம் சகஜமான விளையாட்டு எங்களுக்கு

புரபஸரைப் பார்த்து புன்னகை செய்தார் லாரன்ஸ்.
மீண்டும் உங்களைச் சந்திக்க நேர்ந்ததில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன் புரபஸர்...! நெடுநேரம் நாம இங்கே அடைபட்டுக்கிடக்கப் போவது உறுதி கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு உலகிலேயே அதிமேதாவியான புரபஸர் போலோவ்ஸ்கியோடு உரையாடி என் விஞ்ஞான அறிவைக்கொஞ்சம் விருத்தி செய்துகொள்ளலாமென்று நினைக்கிறேன்
ம்... வந்து- சரி

கொ:டியில வழி உருவாகிவிட்டது .
ஸார் ஓடிவாருங்கள் . இன்னும் ஏன் தயங்கி நின்றுகொண்டி ருக்கிறீர்கள் அங்கே...!
ஒரு சிறு காரியம் பாக்கியிருக்கிறது டேவிட்!
புரபஸரின் தாடையில் ஓங்கி ஒரு குத்து விட்டார் லாரன்ஸ்
ஸார்... உங்களுக் கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?
அ ஹ்!
கும்!


டேவிட் சொன்னதை காதில் வாங்கிக்கொண்ட தாகவே காட்டிக் கொள்ளாத லாரன்ஸ் ஜன்னல் வழியாக பாய்ந்து வெளியேறி எதிர்ப்பட்ட படிகளின் வழி விரைந்தோடினார்...
கண்ணில்படும் கதவுகளை எலலாம் தள்ளித் திறநதுபார் டேவிட்....தாமதமின்றி அவரை நாம்கண்டுபிடித்தாக வேண்டும்...
யாரை-யாரைக் கண்டு பிடிக்க வேண்டும் என்கிறீர்கள்?

மூன்றாவது கதவை தள்ளிக்கொண்டு நுழைந்த போது-உள்ளே–ஆய்வு கூடத்தில் அரை மயகக நிலையில் இருக்கையில் சாய்ந்து கிடந்தார் புரபஸர்...!
இதோ இருக்கிறார் நிஜ புரபஸர்...!
ஓகோ-அப்படியா சேதி! புரிகிறது... புரிகிறது!

அரை மயக்க நிலையிலிருந்த புரபஸரை அவர்கள் கைலாகு கொடுத்து சுமந்தவாறு அந்தபாழடைந்த கோட்டையை விட்டு வெளியேறியபோது அவர்களை தடுத்து நிறுத்துவார் யாருமில்லை!
காவலாளிகள் யாரும் கண்ணில்படக் காணோம்! நாம் தப்பிச் செல்ல வேண்டும் என்பதுதானே அவர்களுடைய விருப்பம்!


பனிச் சறுக்குக் கட்டைகள் பொருத்தப்பட்ட விமானம் ஒன்று உறைந்து கிடந்த நதியின் மத்தியில் தயார் நிலையில் நின்று கொண்டிருந்தது. லாரன்ஸும் டேவிட்டும் புரபஸரோடு விமானத்தை நோக்கி விரைந்தோடும் காட்சியை ஏழெட்டுப் பேர் மறைவிடத்திலிருந்து பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தனர்...
ஹே...! தப்பியோடும் உங்கள் முயற்சி வெற்றியடையட்டும்! உங்கள் பயணம் சுகமானதாக அமைய என் வாழ்த்துக்கள்!
291



விமானம் மேலெழும்பத் தொடங்கியதும் ஆல்பிறோ குரூரமாகச் சிரித்தான்...
முட்டாள்கள்! அ.கொ.தீ கழகத்தின் ஏவலாள் ஒருவனை உடனழைத்துக் கொண்டு போகிறோம் என்பதையோ, அந்த நபர் மாஸ்கோ சென்றதும் முதல் காரியமாக பட்டனை அழுத்தி அணு ஏவுகணை இயக்கத்தை தூண்டி மூன்றாம் உலக மகா யுத்தத்தை தொடங்கி வைக்கப் போகிறான் என்ற இரகசியத்தையோ அறியாத அறிவிலிகள்...பைத்தியங்கள்... ஹா.ஹ ஹா!
இன்னமும் என்னைத் திணறடித்துக் கொண்டிருக்கும் விஷயம் அந்த ஆசாமி புரபஸர் அல்ல... போலி என்று எவ்வாறு கண்டு பிடித்தீர்கள் என்பதுதான்!
ஆல்பிறோ ஏதாவது தந்திரம் செய்யக் கூடும் என்றெண்ணிய நான் ஒவ்வொன்றையும் சந்தேகக் கண்களோடு பார்க்கத் தொடங்கினேன். அந்தப் போலி ஆசாமிக்கு எத்தனையோ விஷயங்களை மிகக் குறைந்த காலக் கெடுவுக்குள் சொல்லிக் கொடுத்தவர்கள் இரிடியத்தின் நீளும் தன்மையைவிட பிளாட்டினத்தின் நீளும் தனமை கூடுதலானது என்றஉண்மையைசொல்லிக்கொடுகக தவறிவிட்டார்கள் நான் வேண்டுமென்றே மாற்றிக்கேட்டதும் ஆசாமி ஏதும் விளங்காமல் ஆமாம்.. ஆமாம் என்று தலையை ஆட்டிவைத்தான் - வேஷம் வெளிப்பட்டு விட்டது!



லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும் :
S. விஜயன், முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55,
சிவகாசி - 626 123. போன்: 1159 வெளியீடு எண்: 25
293 அச்சிட்டோர்: முத்து பைன்ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி.

கொலைவெறியன்!
'வேட்டையர்கள்' என்ற டி. வி. நிகழ்ச்சியில் ஸ்டண்ட் வீரர்களாக நடித்து வந்த டிரேக்கும், ஜார்ஜும் உண்மையில் S.I.-6 உளவுப்படை பிரிவைச் சார்ந்த உளவாளிகளாவர். ஓரிரு தினங்களுக்கு முன் பிரிட்டனுக்குள் வந்து சேர்ந்திருந்த சர்வதேச சமூக விரோதி ஒருவனை வலைவீசிப் பிடிக்கும் பொறுப்பு அவ்விரு இளைஞர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.
அசையாதே... நில் - அப்படியே S.I-6. உளவுப் படையினர் நாங்கள்!
காரை அங்கேயே அப்படியே விட்டுவிட்டு திரும்பி நட எங்களோடு!

ஓ. கே. எனதருமை நண்பர்களே! வகையாகத்தான் சிக்கிக்கொண்டு விட்டேன் உங்களிடம்! இதோ... கீழே வீசியெறிந்து விட்டேன் என துப்பாக்கியை...
வேடிக்கை எப்படி? நீங்கள் இரசிப்பீர்களோ என்னவோ? ஹஹ்...ஹா!
ஹா...என்னது?
புகைக் குண்டை வீசியிருக் கிறான்...கிராதகன்!

S.I.6.? ப்பூ! என் கால் தூசுக்கு நிகராக மாட்டார்கள்!
அதோ... தப்பியோடுகிருன்!


தங்களுடைய ரேஞ்ச் ரோவர் காரினுள் பாய்ந்தார்கள் டிரேகும், ஜார்ஜும்.
இம்மாதிரி தந்திரங்கள் பண்ணுவதில் கைதேர்ந்தவன் இந்த பஸ்ஸான் என்று ஏற்கனவே கர்னல் எச்சரித்திருக்கிருர். அத்தனை சுலபத்தில் அவன் நம்மிடம் சரணடையும் போதே நமக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்க வேண்டும்!
ஹும்.. நடந்ததைப் பேசி என்ன ஆகப்போகிறது... வண்டியை வேகமாகக் கிளப்பு!


எதிரே வேறு வாகனப் போக்கு வரத்து இல்லை... எனவே அந்த சாலைத் திட்டை சுற்றிக் கொண்டு போகாமல் குறுக்காக ஓட்டிச்செல்லப் போகிறேன்...
ஆனாலும் அவனைப் பிடிக்க முடியுமா என்பது சந்தேகமே... மின்னல் பாய்ச்சலில் பறந்து செல்கிறது அவனுடைய கார்... நெடுஞ்சாலையை தொட்டு விட்டான் என்றால் பிறகு அவனைப் பிடிப்பது என்பது முடியாத-காரியம்!


அவனுக்கு நேர் பின்னே சென்று கொண்டிரு டிரேக்.. நானொரு ஸ்டண்ட் வேலை செய்யத் தீர்மானித்து விட்டேன்!
ஏய்...

இன்னும் கொஞ்சம்
இடைவெளி குறைய
வேண்டும்...
ம்.. இதோ!
RANGE ROVER

காரின் வேகத்தை மட்டுப் படுத்து—இல்லையேல் துப்பாக்கியிலிருந்து கிளம்பும் தோட்டா அப்படியொரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும்!
இன்றைக்கு யார் முகத்தில் விழித்தாயோ-பாவம்... அதிர்ஷ்டமே கிடையாது உனக்கு!


ஹெக்! லெவல் கிராஸிங்...! தடை கீழிறங்கி வந்து கொண்டிருக்கிறது...
...நானும் வேகத்தை உச்சப்படுத்தி விட்டேன்!


நான் சென்று வருகிறேன்-தோழா!
ஊஊ...ப்!
சரியான கிறுக்கன்! இரயிலில் அரைபட்டுச் சாகாமல் மயிரிழையில் தப்பிச் சென்று விட்டான்!
கீழே விழுந்து கிடக்கும் கோமாளியை கவனிப்போம் வா!

ஹே...நீ-நீ...டி.வி. 'வேட்டையர்கள்' நிகழ்ச்சியில் நடிக்கும் ஜார்ஜ் அல்லவா?
ஒரு எலும்புகூட முறியாதது ஆச்சரியமான விஷயம்தான்? ஆமாம்...இதெல்லாம் என்ன பைத்தியக்காரத் தனம்?

ம்...வந்து-நாங்கள் ஒரு புது ஸ்டண்ட் நிகழ்ச்சிக்காக ஒத்திகை பார்த்துக் கொள்ள வந்தோம்—இல்லையா ஜார்ஜ்?
ஹூம்...ஸ்டண்ட் வேலை பண்ணியும் பயனில்லாமல் போய்விட்டதே! திரும்பிச் செல்ல வேண்டியதுதான்—வந்து...அதாவது—ஸ்டுடியோவுக்கு!


அவர்கள் ஸ்டுடியோவுக்கு செல்லவில்லை— S.I-6. ன் தலைமையகத்துக்குச் சென்று கர்னல் ஹண்ட்டரைச் சந்தித்தனர்.
அலி பஸ்ஸான் விபரீதம் ஏதும் நிகழ்த்தியாக இதுவரை தகவலில்லை.. ஆனாலும்...அவன் பிரிட்டனுக்கு வந்த நோககம் பற்றி அவனை விசாரிக்க விரும்புகிறேன் கூலி வாங்கிக் கொண்டு கொலைசெய்யும்அயோக்கியர்களில் நம்பர்-1. இந்தக் கிராதகன்!

அவனுடைய இலக்கு யாராக இருக்கும் என்—பதைப் பற்றி ஏதாவது கருத்து உண்டா?
நாளை இங்கே ஆப்பிரிக்க நாடான மொலோடோவின் அரசர் அரசு முறை பயணமாக இங்கே வரவிருக்கிறார். ஒருவேளை கொலைகாரனின் இலக்கு அவராக இருக்கலாமோ என்று எண்ணுகிறோம்.


மிக குறுகிய கால எல்லைக்குள் அதிகமாக எதையும் சாதிக்க முடியாததுதான். ஆனால் எப்படியேனும் நீங்கள் பஸ்ஸானை தேடிக் கண்டுபிடித்து அவன் யாரையேனும் கொலை செய்வதை தடுக்க வேண்டும்!

இதற்கிடையே ஓர் ஆடம்பர ஹோட்டலின் சொகுசு அறையில்—
உண்மையிலேயே உளவுப் படையில் பணிபுரிபவர்களை, டி வி. நிகழ்ச்சிகளில் நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்களாக மக்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்திருக்கும் S.I.6- ன் சாதுரியம் பாராட்டப்பட வேண்டியதொன்றுதான்...
வேட்டையர்


...ஆனால் அலி பஸ்ஸானே அப்படியெல்லாம் ஏமாற்றி விடமுடியாது!
சைலன்ஸர் பொருத்தப்பட்டிருந்தால், துப்பாக்கி இயங்கிய போதிலும் ஓசை வெளிவரவில்லை!

மொலோடோ அரசரை குறிவைத்துத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன் என்று அவர்கள் நினைக்கக்கூடும்! அந்தக் கணிப்பு தவறானது! வந்த காரியத்தை நான் கச்சிதமாக செய்து முடிக்கும் வரை யாரை இலக்கு வைத்து என் துப்பாக்கியிலிருந்து தோட்டா கிளம்பும் என்று யாராலும் யூகிக்க முடியாது!

மறுநாள் காலையில்—
மிக மிக ஆபத்தான தருணம் இதுதான். மொரோட்டோ அரசர் தன் காரை விட்டிறங்கியபின் அமைச்சக கட்டிடத்தினுள் நுழைவதற்கு முன் திறந்த வெளியில் பாதுகாப்பு ஏதுமின்றி நிற்கிறார்.
இவரைக் கொல்ல பஸ்ஸான் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அவன் இந்த நிமிடத்தில் நிச்சயமாக ஒரு முயற்சியை மேற்கொள்வான்!


டிரேக்கும், ஜார்ஜும் அருகே இருந்த கட்டிடத்தின் மேல் தளத்தில் மறைவாக உட்கார்ந்திருந்தனர்— அவர்கள் வசம் சக்தி வாய்ந்த துப்பாக்கிகள் இருந்தன...
விபரீதம் ஏதும் நிகழவில்லை மொலோடோ அரசர் பத்திரமாக கட்டிடத்தினுள் சென்று விட்டார்!
கிடைத்த அரிய வாய்ப்பை பஸ்ஸான் நழுவவிட்டு விட்டான். நம் தலையீடு அவனைக் கலவரப் படுத்தியிருக்க வேண்டும்!
ஆமாம், நாம் அவனைக் குறிவைத்து பின் தொடர்கிறோம் என்பது அவனுக்குத் தெரியும். இனிமேல் நாம் அவனைப் பற்றி அக்கறை கொள்ளப் போவதில்லை என்பது வேறு விஷயம் வந்த காரியம் முடியவில்லை என்ற போதிலும் அவன் மூச்சுக் காட்டாமல் நழுவி பிரிட்டனை விட்டு திரும்பி ஓடிப்போய் விடுவான்.
இந்த மட்டிலும் பணியை செவ்வனே நிறைவேற்றி விட்டோம் என்றுதான் கொள்ள வேண்டும்— இந்த நல்ல செய்தியை தலைவருக்கு தெரியப் படுத்துவோம்...வா!

ஆனல் அவர்களுடைய ரேஞ்ச் ரோவர் நகரத் தொடங்கியபோது அதன் மீது அருகே-யிருந்த கட்டிடத்தின் தாழ்வான பால்கனியிலிருந்து ஓர் உருவம் ஓசையின்றிக் குதித்தது ..
பிரமாதம்... நான் எதிர்பார்த்தபடியே நடந்து வருகிறது! இந்த முட்டாள்களுக்குத் தெரியாது— நான் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறேனென்று!

நான் யாரை குறி வைத்திருக்கிறேனே அவர் இருக்குமிடத்துக்கு இந்த ஏமாளிகளே என்னைக் கொண்டுபோய் சேர்க்கப் போகிருர்கள்...
307

சில் நிமிட பயணத்திற்குப் பின் வெறிச்சோடிக் கிடந்த ஒரு சந்தில் போய் நின்றது கார்.
சிதிலமடைந்து கிடக்கும் கட்டிடத்தினுள்ளே S.1.6.ன் கம் இருக்குமென்று யாருக் னைக்கத் தோன்றாது... S.1-6. தொடங்கும் போதே அனைத் ம் மிக சாதுரியமாக திட்ட ச் செய்திருக்கிறார் கர்னல்!
இந்தச் சிறு கருவியை இயக்கியதும் செங்கல் சுவர் மாதிரி தோற்றமளிக்கும் போலித் தடுப்பு விலகி நமக்கு வழி கொடுக்கும்!
நான் வேறு வழியாக நுழைய வேண்டும்... இங்கே தொங்கிக் கொண்டிருக்கும் கயிற்றைப் பற்றி, மேலே ஏறி உயர் நிலை ஜன்னல் வழியாக செல்வது நல்லது.

பின்னர்—
மொலோடோ அரசர்தான் பஸ்ஸானின் இலக்காக இருக்கக்கூடும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன் நான்... ஆனால் ஏன் அவன் தன் கொலை முயற்சியை இன்னமும் மேற்கொள்ளவில்லை என்பதுதான் புரியமாட்டேனென்கிறது.
STATE VISIT OF KING MOLOTO
உங்கள் யூகம் தவறாக இருக்கலாம்...கர்னல்!
யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள்...!
அப்போது—
ம்...வந்து—
யார்...நீ?
ஜார்ஜ் துப்பாக்கியை எடுத்துக் கொள்!

மன்னிக்க வேண்டும்... வழிதவறி விட்டது— அதனால்தான்—
துப்பாக்கியை பையில் போடுங் கள். யாரோ வெளியூர் ஆசாமி, கொஞ்சம் வெளியே அழைத்துச் சென்று வழிகாட்டி அனுப்பி வைத்துவிட்டு வாருங்கள்!
இது உங்களுடைய இரண்டாவது தவறு ஹண்டர்! என் இலக்கு மொம்லாடோ அரசரல்ல— நீங்கள் தான்!
ஆ...!
டுமீல்
அடக் கடவுளே... பஸ்ஸானல்லவா இவன்!

டிரேக் மின்னல் வேகத்தில் பாய்ந்தார்.....
அ...ஹ்ற!

வந்த வேலையை கச்சிதமாக முடித்துக்கொண்டு விட்ட திருப்தியோடு அங்கிருந்து தப்பியோட முயன்றான் பஸ்ஸான்.
ஹண்ட்டரை கொல்லவே அவன் இங்கே அனுப்பிவைக்கப் பட்டிருக்கிறான்!
அவன் தப்பியோட அனுமதிக்கக் கூடாது!
டுமீல்!

ப்சூ...! என் மாதிரி சர்வதேச புகழ் பெற்ற கொலைகாரன், தப்பியோடும் வழியை முன் கூட்டியே தீர்மானித்துக் கொண்டுவிடு-வான் ..எப்படிப்பட்ட நெருக்கடியை சமாளிக்கும் சாமார்த்தியமும் அவனிடம் இருக்கும்!
கை வெடி குண்டை வீசுகிறுன்... பதுங்கிக் கொள்!

ம்ம்...மாஆஆ!
அஹ்! டிரேக் காயம் பட்டுவிட்டான் போலிருக்கிறது!

காயம் படவில்லை—அதிர்ச்சியில் மூர்ச்சை போட்டிருக்கிறது...அந்த அயோக்கியனை மடக்க வேண்டிய பொறுப்பு இனி முழுக்க என்னுடையது... உயிரைப் பணயம் வைத்தாவது அவனை வளைத்துப் பிடிப்பேன்!

மேலே ஏறி ஓடினான் ஜார்ஜ்—
இங்கிருந்து தப்பியோட வாய்ப்பில்லை பஸ்ஸான்- பேசாமல் சரணடைந்து விடு!
அதிர்ஷ்டம் எப்போதுமே என் பங்கில் தான் இருந்து வந்திருக்கிறது இப்போதும் அப்படித்தான்! கிடங்கு கட்டிடத்தில் கிடந்த பழைய உடுப்புகள் நான் மாறுவேடம் அணிந்து கொள்ள பெரும் உதவியாக இருந்தன!
இதோ...நான் தப்பிச் செல்லும் வழி நேர்கீழே இருக்கிறது— தேம்ஸ் நதி!
ஆமாம்-தண்ணீருக்குள் பாய்ந்து. நீந்தி கரையேறி விட்டானென்றால் பிறகு சுலபமாக தப்பிச் சென்றுவிடலாம்- இதை முன்கூட்டியே யூகிக்க தோன்றவில்லையே எனக்கு!
314


ஆனால்...
ஆவ் . நேர் கீழே படகு! ஐ ..யோ.

செ...த் தே...ன்—
ஆஆ...!
குதிப்பதற்கு முன் நேர் கீழ்ழ படகு ஒன்று சென்று கொண்டிருப்பதை கவனிக் கத் தவறிவிட்டான... அதிர்ஷ்டம் இம்முறை அவனைக் கைவிட்டு விட்டது!

அதையடுத்து—
எனக்கு ஆபத்து இல்லை- கர்னலும் நலமாக இருக்கிறார்!
எ...எப்படி? உங்களை நேராக மார்பில் சுட்டானே!
குண்டு துளைக்க முடியாத உள்- ளாடையை எப் போதுமே நான் அணிந்து கொண்டிருப் பது தான் காரணம்! இதோ-
நம் அலுவலகம் இங்கே இருக்கிற விஷய மும் தொடர்ந்து இரகசியமாகவே இருக் கும்... அடையாளம தெரியாத பிணமாக விரைவிலேயே பஸ்ஸான் கரையோரமாக ஒதுங்கி விடுவான்....
இன்னொருவனை கொல்ல வந்தவன் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டு விட்டான்!
317
முற்றும்


விச்சு & கிச்சு
திறமையான ஆசாமி நான் இருக்க வரவிருக்கும் பந்தயத்திற்கு விச்சுவை அல்லவா அணியின் கோல் கீப்பராக போடப் போகிருர்களாம்... ஹே... இப்போது பாருங்கள்!
வன் என் கால் தூசுக்கு மானமாக மாட்டான் என்று நிரூபித்துக் காட்டுகிறேன்...
...பந்தை தடுத்து நிறுத்த பயல் படுகிற பாட்டைக் கவனியுங்கள்!
அப்படியே மல் லாக்க விழுந்து விட்டான்- சரியான சோதா!



கவனித்தீர்களா மானேஜர் ஸார்! கோல் கீப்பராக நிற்க அவனுக்கு துளித் திறமை கூட கிடையாது என்று சந்தேகத்துக்கிட மின்றி நிருபித்துக்காட்டி விட்டேன்! என்னையே அணியின் கோல் கீப்பராக நியமிப் பீர்கள் என்று நம்புகிறேன்!
விச்சு எப்படிப்பட்டவன் என்று நன்றாகத்தான் நிருபித்துக் காட்டி விட்டாய் நீ!
ஹி...ஹி...!
இப்படியெல்லாம் சாதுரியமாக சர்க்கஸ் வேலை செய்து பந்தை தடுத்து நிறு அவனால் முடியுமென்றால் என்றென் றைக்கும் நமது அணியின் கோல் கீப்பர் அவன்தான்!

வருகிறது!
லயன் காமிக்ஸ்
ஆண்டு மலர்!
டெக்ஸ்வில்லர் துப்பறியும்
தங்கச் சுரங்கம்!
ரூ. 3/-
1986 ஜீலை 1ந் தேதியன்று கிடைக்கும்!

லயன் காமிக்ஸ்க்கு
இரண்டாவது பிறந்தநாள்
114 பக்கங்கள்!
சூப்பர் சைஸ்!
பிரதிக்கு பதிவு செய்து கொள்ளுங்கள்!

விற்பனையாகிறது!
திகில்!
பனிமலை பூதம்!
ரூ. 2-25
322

கோடை மலர்!
லயன் காமிக்ஸ்